விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

க்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

ங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை (16.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசிற்கு உறுத்தலாகும் நீதிக்கான ஆதரவுகள்

(கொழும்பு)

**பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விற்கு எதிராக கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை தீர்மானத்திற்கு எதிராக இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் பல அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன. இந்நிலைமை தொடர்ந்து வலுவடைந்து வருவதால் அரசிற்கு இது உறுத்தலாக அமைந்து பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.**

தலைமை நீதியரசருக்கு ஆதரவாக நாடு பூராகவும் உள்ள சட்டத்தரணிகள், நீதிபதிகள், பொது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் பல வடிவங்களில் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நடவடிக்கைகளுக்கு மேலும் வலுச் சேர்ப்பது போல் சர்வதேச அமைப்புக்களான ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் என்பன தமது கரிசனையையும் உறுதிப்பாட்டையும் தெரிவித்தவண்ணமுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தெரிவுக்குழு அறிக்கையை ஆராய சுயாதீன குழுவொன்றை மேலதிகமாக நியமிக்கவுள்ள அறிவித்துள்ளார்.

இது தெரிவுக்குழுவின் நம்பிக்கையைப் பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, தெரிவுக்குழு உறுப்பினர்கள் தன்னை அவமதித்ததாக ஷிராணி, சபாநாயகருக்கு தெரிவித்த (23ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியா நிதியுதவி

இலங்கையின் பாடசாலைகளை மேம்படு
6 மில்லியன் டொலர் நிதி உதவி அளிக்கப்
வதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.
கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த
ஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமை
பொப் கார் நாட்டிலுள்ள ஆரம்ப மற்றும்
ர்நிலை பாடசாலைகளில் பயிலும் 40
சம் மாணவர்களுக்கான வசதிகளை
படுத்த அடுத்த நான்கு ஆண்டுகளில்
விடப்படும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் ஒரு ஸ்திரமான சமூகம் ஏற்
வும் பொருளாதாரம் மேம்படவும் அவுஸ்தி
லியா தொடர்ந்து உதவும் என்று அவர்
உறுதியளித்துள்ளார்.

படகு மூலம் அவுஸ்திரேலியா சென்று
சம் கோருவோரின் பிரச்சினை தொடர்
பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவே
று நாள் பயணமாக அவுஸ்திரேலிய
ளியுறவுத்துறை அமைச்சர் இலங்கை
ள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## சுயாதீன குழு மீது நம்பிக்கையில்லை

ிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க
எதிரான குற்றப்பிரேரணையை விசா
தற்கு பொதுநலவாய சபையின் நீதிய
ள் குழுவை தவிர மாற்று ஏற்பாடுகள் எது
இல்லை என்று பிரதான எதிர்க் கட்சியான
ய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செய
ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான
அத்தநாயக்க மேலும் தெரிவிக்கையில்,
குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக
நாட்டு நீதியரசர்கள் தலைமையில் நிய
ப்படும் சுயாதீன குழு மீது எங்களுக்கு
க்கையில்லை.

அதனால் பொதுநலவாய சபையின்
ஷ்ட நீதியரசர்கள் மூவர் அடங்கிய குழுவின்
ாக பிரதம (23ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீன குழுவின் நியமிப்பு நியாயங்களை கொண்டுவரும்

### ட்ரான்ஸ்பரன்சி அமைப்பு நம்பிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு சுயாதீனக் குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ எடுத்துள்ள தீர்மானத்தை சர்வதேச ட்ரான்ஸ்பரன்சி அமைப்பின் இலங்கைக் கிளை வரவேற்றுள்ளது.

குறித்த குழுவை நியமிப்பது தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதன்போது, பிரதம நீதியரசர் குறித்த விசாரணையின் இறுதிக் கட்ட தீர்ப்புக்கள் வெளியாகும் என்று அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முறையாக செவிமடுத்து பதிலளிக்காமை மற்றும் சமூகத்தின் மத்தியில் அவர் அனுதாபத்தை தோற்றுவித்தமை போன்ற விடயங்களையும் ட்ரான்பரன்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்காரணமாக, நாடாளுமன்ற தெரிவுக் குழு மீதான நம்பிக்கையை பொது மக்கள் இழந்து விட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுயாதீனக் குழு புத்திஜீவிகளையும், சுயமாக தீர்மானிக்கக் (24ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழுமபு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஓயில் நிறுவனம்(லங்கா ஐஓசி) ஆகியன ஒரு லீற்றர் பெற்றோலின் (ஒக்டெயின் 90) விலையை 10 ரூபாயால் அதிகரித்துள்ளன.

இவ் விலை அதிகரிப்பை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தானம் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கமும், லங்கா ஐஓசி நேற்று நள்ளிரவு முதலும் அமுலுக்கு வரும் வகையில் உயர்த்தியுள்ளன.

இந்நிலையில் தற்போது ஒரு லீற்றர் (ஒக்டெயின் 90) பெற்றோலின் புதிய விலை 159 ரூபாயாகும். (ந-11)

## பீரிஸ்-பொப் கார் இன்று சந்திப்பு



(கொழும்பு)

3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பொப் கார் இன்றைய தினம் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்திக்கவுள்ளார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் தடுத்து நிறுத்துவது குறித்து இரு தரப்புக்கும் இடையில் விரிவான (23ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை தாக்குதல் நோர்வே கவலை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நோர்வே அதிக கவனம் செலுத்தி வருவதாக நோர்வேயின் தூதுவர் கிரிட் லொசென் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரை அண்மையில் சந்தித்தபோது அவர் தமது அதிருப்தியை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலையை தோற்றுவித்துள்ளதாகவும் நோர்வே தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## நீதிமன்ற அதிகாரத்தை நாடாளுமன்றம் பயன்படுத்தியது!

### உயர் நீதிமன்றம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்
டுக்களை விசாரணை செய்ததன் மூலம்,
சியல் யாப்பின் கீழ் நீதிமன்றத்துக்கு வழங்
பட்டுள்ள அதிகாரத்தை நாடாளுமன்றத்
ரிவுக்குழு பயன்படுத்திக் கொண்டுள்ள
உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் மீது கொண்டு வரப்பட்டு
கண்டனத் தீர்மானத்தை ஆட்சேபித்து
கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை விசா
ணக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொண்டபோதே, நீதியரசர் காமினி அமரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் அதிகாரம் இலங்கை அரசியல் யாப்பின் படி நீதிமன்றங்களுக்கு மட்டுமே உள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நீதிமன்ற அதிகாரம் இல்லாத நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ததன் மூலம் அரசியல் யாப்பை மீறியுள்ளதாகவும் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் சேர்ந்த பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகவில்லை

### சிகிச்சை அளித்த மருத்துவர் விளக்கம்

இராணுவத்தில் சேர்க்கப்பட்டு சுகவீனம் உற்று கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 15 தமிழ் பெண்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர், அவர்கள் எவரும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படவில்லை என்று கூறியுள்ளார்.

அந்தப் பெண்கள் உள்மன முரண்பாடு என்னும் உளநோய்க்கு ஆளாகியிருப்பதாகவும், போருக்கு பின்னரான நிலையில் வன்னியில் பல இடங்களில் இப்படியாக பாதிக்கப்பட்டவர்களை தான் பார்த்திருப்பதாகவும் வவுனியா மருத்துவமனையின் உளநல மருத்துவரான டாக்டர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரால் அந்தப் பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கான எந்த விதமான ஆதாரங்களையும் தான் அவர்களிடம் காணவில்லை.


உண்மையில் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற வகையில் அடிக்கடி ஊடகங்களில் வரும் செய்திகள் தம்மை மிகவும் (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டவிரோத ஆட்கடத்தலை தடுக்க அவுஸ்திரேலியாவின் உதவி அவசியம்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்த அவுஸ்திரேலியாவின் உதவி அவசியம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரி வித்துள்ளார். இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில்,

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அவுஸ்திரேலி யாவின் ஒத்துழைப்பு அவசியமானது.

மேலதிக வளங்களும் பயிற்சிகளும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தத் எமக்குத் தேவையாக வுள்ளது. கூட்டு முயற்சியின் ஊடாகவே சட்டவி ரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்த முடியும் என நாங்கள் நம்புகின்றோம் என அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ந-11)

# சிங்கள மக்கள் தொகை கொழும்பில் வீழ்ச்சி

## புலிகளே காரணம் எனக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பில் சிங்கள மக்களின் பரம்பல் குறைவடைந்தமையானது விடுதலைப்புலி களின் அமைப்பு மேற்கொண்ட பாரிய சதி நடவடிக்கையென சிங்கள ஊடகம் ஒன்று சாடியுள்ளது.

கனடா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட வெளிநாட்டு விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்புகள், கொழும்பு நகரில் வசித்த சிங்கள குடும்பங்கள் வீடுகளை கொள்வனவு செய்து தொடர்மாடி வீடுகளை நிர்மாணித் தன.

இதில் பெரும் எண்ணிக்கையிலான தமி ழர்கள் குடியேற்றப்பட்டமையால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக லங்கா சைபர் நியூஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

புலிகளால் முன்னெடுக்கப்பட்ட நிறுவனங் களுக்கு இலங்கை முதலீட்டுச் சபையில் பணி யாற்றிய புலிகளுக்கு ஆதரவான உயர் அதி காரி ஒருவரின் உதவியுடன் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னி இராணுவ நடவடிக்கைக்குப் பின் னர் குறித்த அதிகாரி நாட்டிலிருந்து வெளி யேறியதுடன் புலிகளின் நிறுவனங்களும் காணாமல் போயுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நிறுவனங்கள் இலங்கையில் உள்ள 40 பாரிய நிறுவனங் களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரு வதற்காக 5 பில்லியன் ரூபாயை பயன்படுத்தி யுள்ளதுடன் அமெரிக்காவிலுள்ள வர்த்தக ரான ராஜ் ராஜரட்னம் அவற்றைக் கொள் வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களை பெற்றிருந்தார் எனவும் அந்த இணையத் தளம் கூறியுள்ளது.

இந்த ஆண்டுக்கான- மக்கள் தொகை மதிப்பீட்டின் பிரகாரம் கொழும்பு நகரில் 40 வீதம் முஸ்லிம்களும், 33 வீத தமிழர்களும் 24 வீத சிங்களவர்களும் வசித்து வருவதாக தரவுகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ந-11)

# இலங்கை மீன்பிடிப் படகு மாலைதீவு பொலிஸாரால் மீட்பு!

(மாலே)

இலங்கைக்குச் சொந்தமான மீன்பிடி படகொன்றை, மாலைதீவு தேசிய பாதுகாப் புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த படகுடன் ஐந்து மீனவர்களும் மாலைதீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள னர்.

லவியானி அட்டோல் என்ற கடற்பகுதியில் வைத்து மாலைதீவு மீன்பிடி படகொன்றால் குறித்த படகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகினை நேற்று மாலை கரைக்கு கொண்டு சென்றுள்ளதாக மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரண மாக படகு மாலைதீவு கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 10 நாட்களுக்கு முன் கடலுக்குச் சென்ற மீன்பிடிப் படகே மீட்கப்பட் டுள்ளதாகவும் படகில் உள்ள ஐவரும் ஆரோக் கியமாக இருப்பதாகவும் மாலைதீவு தேசிய பாது காப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (ந-11)

# புலிச் சந்தேக நபர்களை நாடுகடத்த கனடா தீர்மானம்

(ரொன்ரோ)

தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர் களை நாடுகடத்த கனடா தீர்மானித்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த இரண்டு தமிழீழ விடு தலைப் புலி சந்தேக நபர்களை அமெரிக்கா விற்கு நாடு கடத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என கனேடிய உச்ச நீதி மன்றம் அறிவித்துள் ளது.

பிரதீபன் நடராஜா மற்றும் சுரேஸ் ஸ்ரீஸ் கந்தராஜா ஆகியோரே இவ்வாறு அமெரிக்கா விற்கு நாடு கடத்தப்பட வுள்ளனர்.

பிரதீபன் நடராஜா என்பவர் ஏவுகணை கள் மற்றும் துப்பாக் கிகள் போன்றவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக கறுப்புச் சந்தையில் கொள் வனவு செய்ய முயற் சித்ததாகக் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

சுரேஸ் ஸ்ரீஸ்கந் தராஜா நீர்மூழ்கிக் கப் பல் தொழில்நுட்பம் தொடர்பான மென் பொருளை புலிகளின் சார்பில் கொள்வனவு செய்ய முயற்சித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் எப்போது நாடு கடத்தப் படுவார்கள் என்பது பற்றிய தகவல்களை அந் நாட்டு அரசாங்கம் இதுவரையில் வெளியிட வில்லை. (ந-11)

# நாகபாம்பு தீண்டியதில் இளைஞன் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

நாகபாம்பு தீண்டியதில் இளைஞர் ஒருவர் மயக்கமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 6 மணி யளவில் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு உட் பட்ட கட்டுடை அரசடி பிள்ளையார் கோயி லுக்கு முன்பாக உள்ள கட்டுடை வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த என்.காந் தன் (வயது-20) என்பவரே மயக்கமுற்ற நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (ந-6)

# வதிரி சிறி முருகன் வி.க. இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 10 ஓவர்கள் 9 பேரைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி யில் இன்று நடைபெறும் ஆட்டத்தில்,

காலை 8.00 மணிக்கு கரணவாய் கொலின் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் பி அணியும், காலை 10 மணிக்கு அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணியும்,

மதியம் ஒரு மணிக்கு குரும்பசிட்டி உதய சூரி யன் அணியை எதிர்த்து நெல்லியடி பொலிஸ் அணியும், பிற்பகல் 3 மணிக்கு பொலிகை ஐக்கியம் அணியை எதிர்த்து உ[illegible] யூகே அணியும் மோதவுள்ளன. (24)


**சேவை முகவர்**

**காணிகள், வீடு விற்பனைக்கு**

மருதடி வீதி, சுண்டிக்குளி, மணல்தறை லேன், கெனடி லேன், முடமாவடி, பலாலி வீதி, யாழ். நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

சுந்தரம்: 0774819801 (1177)

**காணி விற்பனைக்கு**

கலைவாணி மில் ஒழுங்கையில் (திருநெல்வேலி பாம் School முன்) பலாலி வீதியிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

*தரகர் தேவையில்லை* (1176)

தொடர்பு : 0779097091

**வங்கியியல் கற்கை CBF**

யாழ், கிளி, முல்லை, மாவட்டங்களில் கற்பிக்கப்படும்.

தொ.பே: 0773586563 (1174)

**ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு**

யமுனா பாரி ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :0756507481

(1173)

**பெயர் மாற்றம்**

இல.134, முந்நூறு வீட்டுத் திட்டம், நாவற்குழி, சாவகச்சேரி **மகாலிங்கம் யோகரெத்தினம்** ஆகிய நான் 15.12.2012 இல் இருந்து **மகாலிங்கம் ஆகாஷ்** ஆக பெயர் மாற்றிக்கொண்டதை அறியத் தருகின்றேன்.

(1170)




**பிள்ளையார் இன்**

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

50% கழிவு

இன்றைய விசேட உணவு :-

தோசை சட்னி சாம்பாருடன் ரூ 70/-

மசாலதோசை சட்னி சாம்பாருடன் ரூ 90/-

(1749) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**LL.B (UK) கற்கை நெறி**

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்

Prince City Campus இன்

EdHat IHD in Law leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன

- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
- இலங்கை மற்றும் Uk பாட விதானங் களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணை கொடுப்பனவு முறை.
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்.



(சி-1790)

Batch 3 இற்கான இறுதிப் பதிவுத் திகதி 05.01.2013

**PRINCE CITY CAMPUS**

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப் பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 0775949272

**முந்தைய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது**

யாழ் கலாலயா பயிற்சியகம்

Yaarl Kalaalayah Academy Jaffna

பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தனது ஆரம்ப கால இடமாகிய யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

- இயக்குநர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்களால் கடியுண்டவர்கள், நகக்கீறலுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைபெற வேண்டும்

## யாழ். பிராந்திய சு. சே. பணிப்பாளர் அறிவிப்பு

விசர் நாய்க்கடி நோய் எனப்படும் நீர் வெறுப்பு நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாக பொதுமக்களை சென்றடையும் வண்ணம் சில ஆலோசனைகள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

❖ நாய், பூனை போன்றவற்றால் கடியுண்டவர்கள், நகக் கீறலிற்குள்ளானவர்கள் அனைவரும் வைத்தியசாலை சென்று முழுமையான சிகிச்சை பெறவேண்டும்.

ஏற்கனவே நாய்களினால் கடியுண்ட நகக் கீறலிற்குள்ளான அனைவரும் தாமதிக்காமல் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

❖ தங்கள் வளர்ப்பு நாய்கள், தங்களால் உணவளிக்கப்படும் நாய்கள் அனைத்தையும் வீட்டிற்குள் இருந்து வீதிக்கு செல்லாதவாறு கட்டி வளர்க்கக் கூடிய நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தங்கள்நாய்களினால்தங்களுக்கும்மற்றவர்களுக்கும் பாதிப்பேற்படாது இருப்பதை உறுதி செய்ய வேண்டியது தங்கள் பொறுப்பாகும்.

❖ வளர்ப்பு நாய்களிற்கு தேவையான ARV உட்பட தடுப்பூசிகள் பெற்றுக் கொடுத்து சுகாதார நிலையில் வைத்திருக்க வேண்டும்.

❖ விசர் நோய் ஏற்பட்ட நாய்கள் அதாவது கோபமடைந்த நிலையில் உள்ள அல்லது அதிகமாக உமிழ்நீர் சுரக்கின்ற வால் தொங்கிய நிலையில் உள்ள நாய்கள், அசாதாரண நிலையில் உள்ள நாய்கள் போன்றன தொடர்பில் கண்காணிப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தங்களால் அவ்வாறான நாய்கள் இனம் காணப்படின் உடனடியாக உள்ளூராட்சி சபையினருக்கு அல்லது சுகாதார பகுதியினருக்கு அறிவித்து உரிய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

## கணனித் தொழில்வாய்ப்பை பெறுவதற்கான பதிவுகள்

அரச, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பு வழங்கும் பொருட்டும் தடை தாண்டல் பரீட்சைகளைத் தவிர்க்கும் பொருட்டும் கணனித் தொழில்வாய்ப்புக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கணனிசார் தொழில்நுட்பத்துறையில் தேசிய தொழில் தகைமை (என்.வி.கியூ) சான்றிதழ் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்டத்தில் வதியும் இருபாலாரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் பதிவு செய்யுமாறு அவர் கேட்டுள்ளார். மேலும் NVQ சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களையும் எடுத்து வந்து முழுமையான விபரங்களை பதிவு செய்யுமாறும் NVQ சான்றிதழ் வைத்திருக்கும் தற்போது நிரந்தர, தற்காலிக தொழில் வாய்ப்பில் இணைந்துள்ளவர்களும் வெளிநாடு செல்ல விரும்புவர்களும் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.(அ-9)

# தெல்லிப்பழை வைத்தியசாலை இரத்த வங்கி திறக்கப்படவுள்ளது

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலையின் இரத்த வங்கி சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே இன்றைய தினம் இரத்த வங்கி இவ் ஆதார வைத்தியசாலையில் இயக்கம் பெறுகிறது.

இன்றைய தினம் சம்பிரதாய முறைப்படி பொதுமக்கள், வைத்தியசாலை பணியாளர்கள், சமூக அமைப்பினர், வலி. வடக்கு பிரதேச சபையினர், பொலிஸார், இராணுவத்தினர் எனப் பலரும் குருதியினை வழங்கவுள்ளனர். கடந்த 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி செயற்படவில்லை.

இதன்காரணமாக இதுவரை காலமும் குருதி மாற்று மற்றும் குருதி தேவை நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சையளிக்கப்பட்டனர். இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு தேசிய குருதி மாற்று பிரயோக சேவையாளரின் வழிகாட்டலில் மேற்படி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் உயிர்காக்கும் செயற்பாடான இரத்ததானம் வழங்குவதில் அனைவரும் முன்னின்று செயற்பட வேண்டும் என வைத்தியசாலையின் இரத்த வங்கி சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

# வாரம் ஒரு தகவல்

## மூன்றாவது சிந்தனை!

ஒரு நீண்ட பாதை வழியாக இளைஞனொருவன் நடந்து வந்து கொண்டிருந்தான். அரைவாசி வழிக்கு வந்த பின்னர், மறுபடியும் திரும்பி வந்த வழியாலேயே நடந்தான்.

அவன் எதிரே வந்த பெரியவர் "தம்பி... ஏன் திரும்பி விட்டாய்?" என்று கேட்டார்.

"இப்போது போகக்கூடாது" என்று தோன்றுகின்றது.

அதனாலே திரும்பிச் செல்கின்றேன் என்றான் அந்த இளைஞன்.

"அப்படியாயின் ஏன் இவ்வளவு தூரம் நடந்து வந்தாய்?" என பெரியவர் கேட்டார்.

"அந்தநேரம் போக வேண்டும் என்று தோன்றியது!" அதனாலே புறப்பட்டுச் சென்றேன் என்றான் இளைஞன்.

"புறப்படும் முன்பே யோசிக்க வேண்டாமா?"

"பலமுறை யோசித்தேன்!" பெரியவரே! என்றான்.

"அதுதான் பிழையாகி விட்டது!" இளைஞனுக்கு எதுவும் புரியவில்லை. பெரியவர் விளக்கினார்...

சீன அறிஞர் கன்ஃபூஷியஸ்... "ஐயா... எங்கள் ஊருக்கு ஒருமுறை வர வேண்டும்!"

"ஏன்?"

"அங்கே ஒரு சிறந்த சிந்தனையாளர் இருக்கிறார்... அவரை நீங்கள் சந்திக்க வேண்டும்"

"அவர் ஒரு சிந்தனையாளர் என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்றார் பெரியவர்.

"அவர் எதையும் மூன்று முறை சிந்திக்கிறார்... அதன் பின்னரே செய்கிறார்" என்றான் இளைஞன்.

"ஒரு விடயத்தை மூன்று முறை சிந்திக்கின்றவர் அறிவாளி இல்லை... அவரே குழப்பவாதி!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"எதையும் இருமுறை சிந்தித்தால் போதும்... ஒருமுறை அதன் நன்மைகளைப் பற்றி. அடுத்த முறை அதன் தீமைகளைப் பற்றி. இதற்குப் பின்னரும் சிந்திக்கின்றான் என்றால் அவன் குழம்ப ஆரம்பிக்கின்றான் என்று பொருள்!" இளைஞன் சிந்திக்கத் தொடங்கினான்...

இனி அவன் பாதியில் திரும்பமாட்டான்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

16.12.2012
(மார்கழி 01, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
திருதியை முற்பகல் 8.32 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 2.55 மணிவரை
இராகுகாலம் 4.52-6.22 மணிவரை
சுபநேரம் 9.22-10.52 மணிவரை
சதுர்த்தி விரதம்.

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும், உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**இடபம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், சுப காரியங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு.

**மிதுனம்** சூரிய வழிபாட்டில் சுகம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள், நட்பொன்று பகையாகலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்** நன்மைகள் நாடி வரும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கன்னி** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், பிள்ளைகள் வழியில் சுப நிகழ்வுகளை நடத்தும் எண்ணம் உருவாகும், சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** ஆனந்தமான நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நடவடிக்கை எடுப்பீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** வியாபார நலன் கருதி புதியவர்களைச் சந்திக்கும் எண்ணம் தோன்றும், மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டி நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம்.

**கும்பம்** சுப விரயங்கள் கூடும், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், மாலையில் மகிழ்ச்சி தரும் விதத்தில் பயணமொன்று இடம்பெறலாம்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 270 | 350 | 280 |
| தக்காளி | 100 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 60-70 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 140 |
| பூசணி | 30-40 | 30 | 60 |
| புடோல் | 40-50 | 60 | 80 |
| வாழைக்காய் | 60-80 | 70 | 90 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 70 |
| பயற்றங்காய் | 140 | 160 | 80 |
| லீக்ஸ் | 120 | 90 | 120 |
| பீற்றூட் | -- | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 80 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய வீட்டுத்திட்டத்திற்கு

# புள்ளியிடப்பட்ட பெயர் பட்டியல் பார்வைக்கு


வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்த பயனாளிகளின் புள்ளியிடப்பட்ட பெயர்ப்பட்டியல்கள் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள விளம்பர பலகையிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதில் வளலாய், அச்சுவேலி தெற்கு, புத்தூர் மேற்கு, ஊரெழு, அச்செழு, சிறுப்பிட்டி மேற்கு, கோப்பாய் மத்தி, புத்தூர் கிழக்கு ஆகிய எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே இவ் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே இக் கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராம சேவையாளர் தலைமையில் சென்ற குழுவினர் விண்ணப்பங்களை வீடு வீடாகச் சென்று பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பியதைத் தொடர்ந்து இந்த விண்ணப்பங்களுக்கான பெயர்ப்பட்டியலில் புள்ளி விபரங்கள் இடப்பட்டுள்ளன.

மேலும் எந்தப் புள்ளி விபரத்திற்கு மேல் வீட்டுத்திட்டம் கிடைக்குமென அறிவிக்கப்படவில்லை. வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்த பயனாளிகள் புள்ளி விபரங்களை ஆர்வமாக பார்வையிடுவதை அவதானிக்க முடிகிறது.

இதில் தகுதியற்றவரின் பெயர்கள் இப்புள்ளி விபரப்பட்டியலில் இருப்பின் உடன் பிரதேச செயலருக்கு அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்திய வீட்டுத்திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ள வீடுகளுக்கு சென்று விபரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-134)



நன்றி:-அததெரண

## இரத்ததானமும் மருத்துவ முகாமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குருதிக் கொடை முகாம் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் காலை 9 மணிக்கு கச்சாய் அ.த.க. பாடசாலையில் நீரிழிவு மருத்துவ முகாமும் நடத்தப்படவுள்ளது. இதில் குருதிக் கொடை வழங்கி சமூகத்தின் நன்மைக்கு உதவுமாறும் நீரிழிவு மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் பொது மக்களை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கேட்டுள்ளனர். (அ-3-29)

# எதிர்க்கட்சியினர் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்காதீர்!

## மாநகர முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள வடிகான்கள் புனரமைப்பதற்கு அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளதாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதி புனரமைப்புப் பணிகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. அதற்கு பின்னர் வடிகான்கள் புனரமைப்பு பணிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. எதிர்க் கட்சியினர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். அதில் எதுவும் உண்மையில்லை எனவும் முடிந்தால் அதனை நிரூபித்து காட்டட்டும்.

எனக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிட்டாலும் சரி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தாலும் சரி அதனைச் சந்திக்க நான் தயாராகவேயுள்ளேன்.

நாம் யாரையும் ஏமாற்றியதில்லை. நேர்மையாக நடந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றோம். ஆனால், எதிர்க்கட்சியினர் பண மோசடி செய்ததாக குற்றம் சாட்டுகின்றனர். சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் தற்காலிக கடைகள் சட்ட பூர்வமாக கேள்வி கோரவில்லை எனவும் 6 கோடி ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

மின்சார நிலைய வீதியில் 11 தற்காலிக கடைகளும் ஆஸ்பத்திரி வீதியில் 11 தற்காலிக கடைகளுமே கேள்வி கோராமல் கொடுக்கப்பட்டது. ஆனால், 60 கடைகள் அவ்வாறு கொடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த 22 கடைகளும் கேள்வி கோராமல் கொடுக்கப்பட்டதற்கு வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்று வருவதே முக்கிய காரணம். இருப்பினும் சட்ட பூர்வமாக நாள் வாடகைக்கு கொடுத்தோம். அதுவும் வறிய மக்களுக்குத்தான் கொடுத்தோம். இந்தக் கடைகள் ஊடாக 9 இலட்சம் ரூபா வரி அறவிடப்படுகிறது என்றார்.

எதிர்க்கட்சியினர் என்பதற்காக எல்லாவற்றுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது. மக்களிடம் அதிக வரிப்பணத்தைப் பெற்று அவர்கள் மீது சுமை வைப்பது எமது நோக்கமல்ல எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்.மாவட்டத்திலுள்ள சபைகளில் அதிக எண்ணிக்கையில் டெங்கு நோயாளர்கள் உள்ளதாக சுகாதார திணைக்கள புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், மாநகர சபைக்குள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வடிகான்கள் துப்புரவு செய்யப்படுவதன் ஊடாகவும் புனரமைப்பு செய்யப்படுவதன் ஊடாகவும் முழுமையாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ-6)

# இனவாதிகள் மீண்டும் பயங்கரவாதத்தை தோற்றுவிக்க முனைகின்றனர்- ராஜித

இனவாதத்தால் உருவான பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டாலும் தெற்கிலுள்ள சில இனவாதிகள் மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர் என கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னர் பல மில்லியன் ரூபா செலவில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இப்பகுதி மக்களின் அபிமானத்தை வெல்லக்கூடிய பல செயற்பாடுகளை இன்னும் இங்கு முன்னெடுக்க வேண்டியுள்ளது.

வடக்கில் வாழும் தமிழர்களின் அபிமானம் நிர்வாகத்தை முன்னெடுப்பதே. நாட்டிலுள்ள இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு நாம் இறப்பதற்கு முன்னர் தீர்வு காண வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் உரையாடுவதுண்டு.

எதிர்காலத்தைப் பயங்கரவாத பாதைக்கு கொண்டு செல்ல நாம் விடமாட்டோம். சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களின் அபிமானத்தை பாதுகாத்து இனவாதப்போக்கு அழிக்கப்படும்.

கடந்த 1958 ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஒரு நாட்டுக்குள் இரண்டு மொழிகள் வேண்டும் என்று கோசமிட்டனர். இந்தக் கோசம் 20 வருடங்களின் பின்னர் விடுதலைப்புலிகள் தோற்றம் பெறுவதற்கும் அவர்கள் தனிநாடு கேட்டு போராடுவதற்கும் வழி வகுத்தது.

இந்த போராட்டத்தின் விளைவாக 30 வருடகாலத்தில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட சிங்கள, தமிழ் இளைஞர்கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு கோசங்களிட்ட இனவாதிகளில் 75 வீதமானவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள். இன்னும் 25 வீதமானவர்கள் மட்டுமே தென்னிலங்கையில் இருக்கின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தினதும் வடமாகாணத்தினதும் கடற்றொழில் துறைசார்ந்தவர்களது மேம்பாட்டிற்காக எமது அமைச்சு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு இந்த ஐஸ் தொழிற்சாலை இயங்கவுள்ளது என்றும் இது இங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக இருக்குமென்றும் தெரிவித்தார்.

இந்நிலையத்தினூடாக நாளொன்றுக்கு 35 மெற்றிக் தொன் ஐஸ் உற்பத்தி செய்யப்படவுள்ளது. கடற்றொழில் பரிசோதகர்களாக நியமித்து வடமாகாணத்தில் பணிக்கமர்த்தவுள்ளதாகவும் உறுதிபடத் தெரிவித்தார். (அ-6)




# இலக்கிய பெருவிழாவில் கலைஞர் கௌரவிப்பு விழா

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற இவ் ஆண்டுக்கான தமிழ் இலக்கியப் பெருவிழாவின் கலை நிகழ்வுகளும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கந்தையா நாகப்பு அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளில் தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நல்லதம்பி சிவசுப்பிரமணியம் அரங்கில் 2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற் பரிசுத் தேர்வு விருது மற்றும் இவ் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது என்பன வழங்கப்படவுள்ளன.

இவ்விருது வழங்கும் நிகழ்வுகள் கடந்த 9 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த போதும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவர் எ.இ.போல் ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறவுள்ளதால் சங்க அங்கத்துவமுள்ள முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

☆☆☆☆☆☆☆

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிராம்புவில் ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணயசங்க 58 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிராம்புவில் முருகன் கோவில் முன்றலில் உள்ள பால முருகன் முன்பள்ளி மண்டபத்தில் சங்கத் தலைவர் வீ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர், யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க சமாசச் செயலாளர், வெளிக்கள உத்தியோகத்தர், சாவகச்சேரி வடக்கு கிராம உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், படையாண்டான் தோட்டம் கந்தசாமி கோவில் தலைவர், எண் பார்வை பரிசோதகர் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரதம நீதியரசருக்கு வரவேற்பளிப்பதில்லை

## கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய நீதியரசருக்கு வரவேற்பு அளிப்பதில்லை என்ற தீர்மானமும் அதில் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

குற்றப்பிரேரணையின் மூலமாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி விலக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறு அவர் பதவி விலகப்பட்டு புதிய ஒருவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் அவருக்கு உத்தியோகபூர்வமான வரவேற்பு அளிப்பதில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் பிரதம நீதியரசர் தொடர்பிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை சுயாதீன குழுவால் ஆராயப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 11 ஆம் திகதி அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் குற்றப் பிரேரணையை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதிக்கு வலியுறுத்தப்படவுள்ளது.

மீள்பரிசீலனை செய்யப்பட்ட பின்னரும் விசாரணைகள் தொடருமாயின் அந்த விசாரணைகளை நியாயமான முறையில் நடத்துவதற்கான சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மற்றும் சபாநாயகரை வலியுறுத்தல் ஆகிய தீர்மானங்களுக்கு நிறைவேற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அனோமா குணதிலக்க தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார்.

குறித்த தீர்மானங்கள் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் பலவந்தமாக நிறைவேற்றப்பட்ட தாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயக சஷ்டி விரதம் தினமும் காலைப் பூசையின் பின்னர் பிள்ளையார் கதை படிப்புடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கணபதி ஹோம கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறுமென ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (அ-9)



சிவகணேசன் றெக்ஸ்றைல்ஸ்
புதுமையான ஜவுளி ரகங்கள்
- ஜி.எஸ்.யூனிபோம் சாறிகள்
- டான்ஸ் அக்கடமி சாறிகள்
- நேசிங் யூனிபோம்
- ஸ்கூல் யூனிபோம் வகைகள்
- செக்குருட்டி யூனிபோம்
- கேரளா சாறி வகைகள்
- பிளாங்கற் அன் காப்பற் வகைகள்
- சகலவிதமான பிளவுஸ் பிஸ் வகைகள்

யாவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(தி-1791)



Spot Admission For UK

1. இலவச வழிகாட்டி
2. பகுதி நேர வேலை வாய்ப்பு
3. குறைவான கல்விக் கட்டணம்
4. IELTS அவசியம், அவசியமற்றது கற்கை நெறிகள்
5. குறைந்த தகைமை G.C.E. சாதாரண தரம்
6. விசா கிடைத்தவுடனேயே கட்டணம் அறவிடப்படும்

ஏனைய நாடுகள்
கனடா பிரான்ஸ் அமெரிக்கா சைபிரஸ் போலந்து நியூசிலாந்து ரஷ்யா சுவிஸ்லாந்து ஜோர்ஜியா.

Read International 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மகேஸ் தொ.பே:0772702628, அஸ்வின் தொ.பே:0774848888
(தி/1172)



மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன
MACK POWER
கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி

- குறைந்த பட்ச செலவு
- இலகுவான பராமரித்தல்
- விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்

ரூ.595,000 இலிருந்து
071-4269470
077-7563453
- சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
- சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
- US Tire 1/11 வெளியேற்றல் நியமத்தின் பிரகாரம்

மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10. ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு - 08.
தொலைபேசி : 011-2691186 தொலைநகல் : 011-2699454
மின்னஞ்சல் : me@mackwoods.com
இணையம் : www.mackwoodsenergy.com
KIRLOSKAR GREEN POWER IDEAS
(1167) (731)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>உயரம்: 5' 9''<br>கி.பா: 15.75<br>தொழில்/ தகைமை: Network Hardware Instructor and Administrator நிரந்தரம்<br>தொ. இல: B -777 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 4' 9''<br>கி.பா: 16.25<br>தொழில்/ தகைமை: BIT முகாமைத்துவ உதவியாளர்<br>தொ. இல: G -764 |
| பிறப்பு: 1986 இந்து குருக்கள்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'3''<br>தொழில்/ தகைமை: தேசிய டிப்ளோமா ஆசிரியர்<br>தொ. இல: B -778 | பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'1''<br>கி.பா: 26.5<br>தொழில்/ தகைமை: B.Com Canada (விவாகரத்து பெற்றவர்)<br>எ.பா: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ. இல: G -766 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'8''<br>கி.பா: 33<br>தொழில்: BBA, MBA (UK Work permit (காசாளர் தனியார் நிறுவனம்)<br>தொ. இல: B -780 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'3''<br>கி.பா: 36, 7இல் செவ்.<br>தொழில்/ தகைமை: பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (அரச)<br>தொ. இல: G -770 |
| பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:விசாகம் 2<br>உயரம்: 5'2''<br>கி.பா.:- 26.5, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BBA (Hons), MSc (அரச காசாளர்)<br>தொ. இல: B -781 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா:20 , 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L AAT வருமான வரி ஆலோசகர்<br>தொ. இல: G -774 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித தபால்கள், பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் CD, Video கள் கடல் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட

Happy New Year!
திருமுருகன் கொம் நெற்
கட்டணம் 650 ரூபாவில் இருந்து குறைக்கப்பட்டுள்ளது.
குறிப்பு: எமது பற்றுச் சீட்டுடன் வரும் வாடிக்கையாளர்களுக்கு 5% முதல் 20% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.
வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
(எமது யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் தற்போது பழைய கடைக்கு முன்பாக ஆல்சிலோனிற்கு அருகாமையில் இயங்குகிறது) தொ.பே: 0212227835
2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு. 06 | இல. 208, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | இல.18, பிரதான வீதி, நெல்லியடி




பட்டுப் புடைவைகளின் பாற்கடல்
ராசி சில்க்ஸ் 70,71 A நவீனசந்தை, யாழ்ப்பாணம்
இடமாற்றம்
எனும் முகவரியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் 01.01.2013 முதல்
ராசி கலக்சனின்
இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் பிரமாண்டமான காட்சியறையுடன் இணைகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
2013 முதல்
T.P: 021 222 5571
(தி/1788)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் தடைகள்

## சோதனை சாவடிகளும் ஒரு காரணம் என்கிறது வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இங்குள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளும் போர் நடைபெற்ற இடங்களில் மிதிவெடி அகற்றப்படாமல் இருப்பதுமே தடைகளாக உள்ளன என வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இராசாவின் தோட்ட வீதி இல.124 இல் உள்ள அவர்களின் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் அவ் அமைப்பின் தலைவர் ரி.வை.சுந்தரேசன் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக சுற்றுலாத்துறை மட்டுமல்லாது அனைத்து துறைகளும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

எனினும் நாம் எமது அமைப்பினால் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யலாம் என்று எண்ணினால் இங்குள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளும் மிதிவெடி அகற்றப்படாமல் உள்ள பிரதேசங்களும் தடையாக உள்ளன.

முக்கியமாக ஏ-9 பாதையில் உள்ள சோதனைச் சாவடிகளும் அவ்வீதியின் இரு மருங்கிலும் உள்ள மிதிவெடி அபாயக் குறியீடுகளும் பெருந்தடையாக உள்ளன.

இங்கு வந்து இவற்றினை காணும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதற்கு அஞ்சுகின்றனர். இதனால் வடக்கிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைகின்றது

எனினும் நாம் சுற்றுலாத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பல திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளோம்.

அதில் முதலாவதாக வடமாகாணத்தில் சுற்றுலாத்துறை பட்டப்படிப்பு கல்லூரி ஒன்றினை ஆரம்பித்து அதனூடாக வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை வளர்த்தெடுக்க முடியும்.

அமெரிக்க தூதரகம் மற்றும் கோகுலம் நிறுவனம் ஆகியன இணைந்து அடுத்த வருட முற்பகுதியில் வரைந்த சுற்றுலாத்துறை அபிவிருத்தியினை வடமாகாணத்தில் முன்னெடுக்கவுள்ளன.

சுற்றுலாத்துறையில் எமது பிரதேசங்களும் முதலீடு செய்ய வேண்டும். இதற்கு விருப்பமுடையவர்கள் எமது காரியாலயத்தில் தொடர்பு கொண்டால் அதற்குரிய ஏற்பாடுகளை நாம் மேற்கொள்வோம்.

எனினும் வடமாகாணத்திலுள்ள தரகர்கள் இலங்கை சுற்றுலாத்துறையிடம் அனுமதி பெறுவதனை பெரிய விடயமாக்கி அதன் மூலமாக பல இலட்சம் ரூபா பணத்தினைப் பெறுவதற்கு முயன்று வருகின்றனர்.

இது தொடர்பில் எம்மிடம் தொடர்பு கொண்டு உரிய தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும். இவ் ஒன்றியத்தில் சுற்றுலாத்துறை சம்பந்தமான அனைத்து மட்டத்தினரும் இணைந்து கொள்ள முடியும்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் எத்தனையோ இடங்கள் உள்ளன. உதாரணமாக முல்லைத்தீவு, நெடுந்தீவு போன்ற இடங்கள் பறவைகள் வந்து செல்வதில் உலகளவில் பிரசித்தி பெற்ற இடங்களாகும்.

இவற்றினைப் பயன்படுத்தி வடக்கில் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கு இங்கு பொதுமக்கள் விமான நிலையம், புகையிரத வசதி என்பன அவசியமாகும்.

இவற்றினை விட போர் நடைபெற்று முடிந்த பின்னரும் போர் நடைபெறுகின்றது என்ற எண்ணத்தினை தோற்றுவிக்கக்கூடிய இங்குள்ள சூழ்நிலை மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

இவற்றினூடாக வடபகுதியில் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்து இங்குள்ள உள்ளூர் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தி உள்ளூரில் வருமானத்தை ஈட்ட முடியும் என்றார்.

இச்சந்திப்பில் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.சுதர்சன், சுபாஸ் ஹோட்டல் நிர்வாக இயக்குநர் எஸ்.கிருபாகரன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு அழபகீரதனின் இப்படியும்.......... கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

த.ஸ்ரீபி ரகாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிக ழ்வில் நூல் அறிமுக உரையை க.தணிகா சலம் ஆற்றுவார். (அ-9)

## பிரமந்தனாறு ம.விக்கு புதிய அதிபர் நியமனம்

(சிவநகர்)

கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் புதிய அதிபராக கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலய ஆசிரியர் கி.விக்னராஜா வடமாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றியவர் ஓய்வுபெற்று சென்று ள்ளதை அடுத்து பலமாதமாக இவ் அதிபர் வெற்றிடம் நிலவி வந்தது. பலபோட்டிகளுக்கு மத்தியில் புதிய அதிபர் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ-3-254)

## சட்டவிரோத ஆட்கடத்தல் மூலம் புலிகளுக்கு நிதி சேகரிப்பாம்

### அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நிதி திரட்டும் நோக்கில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை கொன்சோல் ஜெனரல் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் புலிகள் வலையமைப்பை வியாபிக்கும் நோக்கிலும் நிதி திரட்டும் நோக்கில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் அவுஸ்திரேலியாவில் தங்களது வலையமைப்பை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கக்கூடாது என அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரியுள்ளார். அவுஸ்திரேலியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்படவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் எஞ்சிய உறுப்பினர்கள் தொடர்ந்தும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவி பொதுமக்களை ஏமாற்றி இவ்வாறு ஆட்கடத்தல்காரர்கள் பணம் சம்பாதிப்பதாகத் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் எஞ்சிய உறுப்பினர்கள் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை கடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உதவி வழங்கும் போர்வையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அமைப்புக்கள் இரகசியமான முறையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவிகளை வழங்கி வருவ்தாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் இரு தினங்கள் திருவாசக விழா

(மன்னார்)

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் திருவாசக விழா எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் திருவாசக மடத்தில் ஆலய திருப்பணிச்சபை செயலாளர் புலவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் முதலாம் நாளின் காலை நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை **சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்** எனும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை, **துணையிலி பிண நெஞ்சே** எனும் தலைப்பில் இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், **சித்தம் அழகியார்** எனும் தலைப்பில் திருவாவடுதுறை ஆதீன சமயப் பிரசாரகர் சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

திருவாசகப் பண்ணிசையை இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் கலாபூஷணம் பண்ணிசைவாணர் வி.சிவஞானசேகரம் நிகழ்த்தவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் மாலை நிகழ்வில் **தெய்வ வாசகம் தந்த திருவாதவூரர்** எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன், திருவாசகப் பண்ணிசையை சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் காலை நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை **நானோ இதற்கு நாயகமே** எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், **ஆரொடுநோகேன்** எனும தலைப்பில் சைவப்புலவர் சு.செல்லத்துரை, **திருவாசகத்தில் சைவசித்தாந்தம்** எனும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன், திருவாசகப் பண்ணிசையை கலாபூஷணம் பண்ணிசைவாணர் வி.சிவஞானசேகரம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (அ-9)

## குற்றப் பிரேரணைக்கு எதிரான மனுக்களை தள்ளுபடி செய்யவும்

### சட்டமா அதிபர் கோரிக்கை

குற்றவியல் பிரேரணைகளுக்கு எதிரான மனுக்களை தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றவியல் பிரேரணை நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக தாக்கல் செய்யப்பட்டனவா என்பதனை விசாரணை செய்யுமாறு கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எனினும் இந்த மனுக்கள் உரிய முறையில் உச்ச நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை. இவ்வாறு உச்ச நீதிமன்றிடம் மனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்வது அவசியமானது.

எனினும் கீழ் நீதிமன்றங்கள் எல்லா விடயங்களுக்காகவும் உச்ச நீதிமன்றிடம் சட்ட விளக்கம் கோர முடியாது.

உச்ச நீதிமன்றம் அரசியல் சாசனத்திற்கு அமைவான முறையிலேயே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

## படகு அகதிகளுக்கு எதிராக இணைகின்றன இரு நாடுகள்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் செல்வோரை தடுக்கும் வகையில் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் இணைந்து கூட்டுச் செயற்குழு ஒன்றை அமைக்கவுள்ளன.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்துள்ள நிலையிலேயே இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவுக்கு இலங்கையின் சார்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அவுஸ்திரேலியாவின் சார்பில் அந்த நாட்டின் குடிவரவு மற்றும் பிரஜைகள் திணைக்கள செயலாளர் மார்டின் பௌலர்ஸும் தலைமை தாங்கவுள்ளனர் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

## முதியோர் தினவிழா

(கரைச்சி)

கரைச்சி பிரதேச செயலகப்பிரிவின் சர்வதேச முதியோர் மாற்றுவலுவுள்ளோர் தின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30. மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறிநிவாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கத்தில் வருவதல்ல கனவு; உறங்கவிடாமல் செய்வதே கனவு

## அப்துல்கலாம் தெரிவிப்பு

ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர் உதவியுடன் ஒரு சிறிய நூலகம் அமைத்து தினமும் 30 நிமிடமாவது புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை மாணவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

உடுமலை கன்னிகா பரமேஸ்வரி மேல்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில் அரும்பெரும் சக்தியை கண்டுணர்ந்து வெற்றி பெறுவேன் என்ற தலைப்பில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உரையாற்றினார்.

நான் எனது வாழ்வில் ஆசிரியர்களிடமிருந்து கற்றுக்கொண்டது அரிய சில அருமையான புத்தகங்கள் என் வாழ்வின் எண்ணங்களை மாற்ற உதவியாக இருந்தது. எனவே, மாணவர்கள், ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை அன்றே படித்து எழுதி பார்ப்பதுடன் உள்மனதில் ஓவியம் போன்று பதிய வேண்டும். வீட்டில் பெற்றோர் உதவியுடன் ஒரு சிறு நூலகம் அமைத்து தினமும் 30 நிமிடமாவது படிக்க வேண்டும். விடாமுயற்சியிருந்தால் தோல்வி மனப்பான்மைக்கு தோல்வி கொடுத்து வெற்றி பெற வேண்டும்.



என்னால் எதை கொடுக்க முடியும் அல்லது உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் என்ற கருத்தை இளைஞர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். உறக்கத்தில் வருவதல்ல கனவு; உன்னை உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு. எனவே, இளைஞர்களின் வாழ்க்கையில் கடுமையாக உழைத்து அறிவை தேடி விடாமுயற்சி செய்து வெற்றி பெற வேண்டும் என்றார். (அ-2)

# பொலிஸார் பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியது

## 11 பொலிஸார் பலியாகினர்

குஜராத் மாநிலத்தில் பொலிஸார் பயணித்த வான் ஒன்று வீதியோரக் கிணற்றில் விழுந்ததில் 11 பொலிஸார் பலியாகினர்.

குஜராத்தின் தாகோத் மாவட்டம் ஜாலோத் தாலுகாவில் மாநில முதல்வர் நரேந்திர மோடி பங்கேற்ற தேர்தல் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இப்பொதுக்கூட்ட பாதுகாப்புப் பணியில் பங்கேற்ற பின்னர் 15 பொலிஸார் ஒரு வானில் தாகோத் நகர் நோக்கி சென்றபோது ஓட்டுநருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

இதனால் கட்டுப்பாட்டை இழந்த வான் வீதியோர கிணறு ஒன்றில் தலைகுப்புற கவிழ்ந்தது.

குறித்த விபத்தில் பெண் பொலிஸார் 6 பேர் உட்பட 11 பொலிஸார் பலியாகினர். 4 பேர் மீட்கப்பட்டனர்.

இவ்விபத்து குறித்து வருத்தம் தெரிவித்துள்ள முதல்வர் நரேந்திர மோடி வான் ஓட்டுநர் மற்றும் பலியான பொலிஸாரின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்படுவதாக அறிவித்துள்ளார். (அ-2)

# ஒரு மாத காலத்திற்கு டில்லியில் பனிப்பொழிவு

ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் வட மாநிலங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். பனிப்பொழிவு உச்சத்தை எட்டும் போது மக்கள் உறைந்து போகும் அளவுக்கு புகை மூட்டமும் ஏற்படும். தற்போது வடமாநிலங்களில் வாட்டி வதைத்து வரும் குளிர் இவ்வாரம் அதிகரிக்கும் என்று தெரிய வந்துள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 20ஆம் திகதி முதல் சுமார் ஒரு மாதத்துக்கு பனிப்பொழிவு வரலாறு காணாத அளவுக்கு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பனிப்பொழிவுடன் புகை மூட்டமும் அதிகரிக்கும். இதன் காரணமாக ஒரு மீற்றருக்கு பின்னர் எதுவுமே தெரியாத அளவுக்கு வெண்பனி சூழ்ந்து இருக்கும்.

எனவே, மக்களை உஷாராக இருக்கும்படியும் வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தி உள்ளது. கடும் பனிப்பொழிவு மற்றும் புகை மூட்டம் காரணமாக தலைநகர் டில்லியில் பேருந்து, புகையிரதம், விமானம் உள்ளிட்ட எல்லா போக்குவரத்தும் தினமும் காலை நேரத்தில் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அதிகாலை நேரத்தில் வாகனப் போக்குவரத்து முற்றிலும் முடங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

புகை மூட்டம் சில மணி நேரத்துக்கு நீடிக்கும் என்பதால் டில்லியில் விமான போக்குவரத்தும் பாதிக்கும் என்று விமான நிறுவனங்களை வானிலை இலாகா உஷார்படுத்தியுள்ளது. அதிகாலை நேரத்தில் டில்லி வரும் விமானங்கள் தரை இறங்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தாமதமாக டில்லி வரும் விமானங்களில் பயணிகளுக்கு உணவு உள்ளிட்ட எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று மத்திய விமானத்துறை உத்தரவிட்டுள்ளது.




# மும்பை தாக்குதல் தொடர்பில் நம்பகமான ஆதாரம் வேண்டும்

## இந்தியா வந்த பாக். அமைச்சர் வலியுறுத்து

(புதுடில்லி)

விமானம் தரையிறங்குவதில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக திட்டமிட்ட நேரத்தைவிட 4 மணி நேரம் தாமதமாக இந்தியாவிற்கு பாகிஸ்தான் உள்துறை மந்திரி ரஹ்மான் மாலிக் வந்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், மும்பைத்தாக்குதல் வழக்கில் தொடர்புடையதாக கூறப்படும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் ஹபீஸ் சயீத்துக்கு எதிரான நம்பகத்தகுந்த ஆதாங்கரைள இந்தியா ஒப்படைத்தால் அவருக்கு எதிராக இந்திய மண்ணில் இருந்தே கைது பிடியாணை பிறப்பிக்க தயாராக இருக்கிறேன். எங்கள் நோக்கங்கள் தெளிவாக இருக்கின்றன. எவர் ஒருவர் தவறு செய்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்விடயத்தில் இருநாடுகளும் நீதிமன்ற உத்தரவுகளை மதிக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே கூறியிருக்கிறோம்.

இந்தியாவுடன் அமைதி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் நண்பர்களாக இருக்க வேண்டும். இரு நாட்டு மக்களுக்குமிடையிலான பரஸ்பர தொடர்பு சிறப்பாக இருக்கும்போது மட்டுமே அது சாத்தியமாகும் என்றார்.

3 நாட்கள் பயணமாக இந்தியா வந்துள்ள மாலிக் பிரதமர் மன்மோகன்சிங், உள்துறை மந்திரி சல்மான் குர்ஷித் ஆகியோரை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளார். (அ-2)

# பொருளாதார வளர்ச்சிக்கு கசப்பான மருந்து அவசியம்

## சிதம்பரம் தெரிவிப்பு


(புதுடில்லி)

மக்களவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார சுகாதாரத்தை மீட்பதற்கும் உயர் வளர்ச்சிப் பாதைக்கு மீண்டும் திரும்பவும் இந்த ஆண்டு சில கசப்பான மருந்துகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தவிர வேறு வழியில்லை. இது நல்ல மருந்து. இதன்மூலம் அடுத்த நிதியாண்டு அதிக வளர்ச்சியை எதிர்நோக்க முடியும்.

பணவீக்க விகிதம் மிகப் பெரிய சவாலாக இருப்பதுடன் அரசுக்கு பெரிய கவலையை ஏற்படுத்துகிறது. நுகர்வோர் விலை, குறியீட்டெண், பணவீக்கம் அதிகரித்தபோதிலும் மொத்தவிலை குறியீட்டெண் பணவீக்கம் குறைந்து வருவது ஆறுதல் அளிக்கிறது. இதனால் அடுத்த இரண்டு முதல் 3 மாதத்தில் பணவீக்க விகிதம் குறையும் என்றார். (அ-2)



ம.தி.மு.கவிலிருந்து விலகிய நாஞ்சில் சம்பத் சில வாரங்களுக்கு முன் தன்னை அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டார். ம.தி.மு.கவிலிருந்த ஆதரவாளர்களும் விலகி முதல்வரும் அ.தி.மு.கவின் பொது செயலாளர் ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டதைப் படத்தில் காணலாம்.

# 95 வழக்குகளுக்கு ஒரேநாளில் தீர்ப்பு

டில்லி உச்ச நீதிமன்றில் நேற்று முன்தினம் நீதிபதி 95 வழக்குகளிற்கு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி சுதந்தர் குமார் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார். வருகிற 17ஆம் திகதியில் இருந்து 15 நாட்கள் உச்ச நீதிமன்றுக்கு குளிர்கால விடுமுறை விடப்படுகிறது.

எனவே, நீதிபதி சுதந்தர் குமாருக்கு நேற்றைய தினமே கடைசி பணி நாளாகும். இந்நிலையிலேயே கடந்த 13 ஆம் திகதியன்று அவர் ஒரே நாளிலே 95 வழக்குகளில் தீர்ப்பு அளித்தார். நீதித்துறை வரலாற்றில் இது சாதனையாக கருதப்படுகிறது.

சிவில் கிரிமினல் உட்பட பல்வேறு வகையான வழக்குகளில் அவர் தீர்ப்பு அளித்தார். அவற்றில் அமர்நாத் யாத்திரை பற்றிய தீர்ப்பு முக்கியமானதாகும்.

மத வழிபாட்டு தலங்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது அரசியல் சட்டப்படி அரசின் கடமை என்று கூறிய அவர் அமர்நாத் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருமாறு மத்திய அரசுக்கும் காஷ்மீர் மாநில அரசுக்கும் உத்தரவிட்டார்.

# மும்பையிலிருந்து கடத்தப்பட்ட 9.6 கிலோகிராம் தங்கம் பறிமுதல்

(பெல்காம்)

கர்நாடக மற்றும் மராட்டிய மாநிலத்தின் எல்லை மாவட்டமான பெல்காம் மாவட்டத்தில் கடத்தல் நடைபெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த சோதனையின்போது ஒரு வாகனத்தில் வந்த 3 பேரிடம் ஏராளமான பணம் மற்றும் தங்க நகைகள் வைத்திருப்பது தெரிய வந்தது.

அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் மும்பையில் இருந்து முறையான ஆவணங்கள் இல்லாமல் 3 பேரும் நகை மற்றும் பணத்தை கடத்தி வந்தது தெரிய வந்தது. அவர்களிடம் இருந்து 9.6 கிலோ தங்க நகைகளும் ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரொக்கப்பணமும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவற்றின் மொத்த மதிப்பு 3 கோடியே 12 இலட்சம் ரூபாவாகும். (அ-2)

# இந்தியாவை வங்காளம் வழிநடத்தும் காலம் வரும்

## மம்தா தெரிவிப்பு

(கொல்கத்தா)

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்குப் பின் மத்திய அரசில் திரிணாமுல் காங்கிரஸ் மிகப்பெரிய பங்கு வகிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் தொழில் அதிபர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

டில்லியில் இருந்து இந்தியாவை திரிணாமுல் காங்கிரஸ் வழிடத்தும் என்று கூறியுள்ளார்.


மேலும் தேசிய அரசியலில் பிராந்திய கட்சிகளின் முக்கியத்துவம் குறித்து குறிப்பிட்ட மம்தா பானர்ஜி பிராந்திய மற்றும் தேசிய அபிலாசைகளை பிராந்திய கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். மக்களின் தேவைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். பெரும்பாலான தேசிய கட்சிகள் காங்கிரசைப் போன்று சுயநலமாக உள்ளன என்று விமர்சனம் செய்தார்.

தொழிற்சாலைகளுக்காக அரசு நிலங்கள் ஏலம் விடப்படும். நிலம் கையகப்படுத்துதல் கட்டாயம் ஆக்கப்பட மாட்டாது என்றும் மம்தா கூறியுள்ளார்.

கல்வி, சுகாதாரம், சுற்றுலா, போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்ய தொழில் அதிபர்கள் முன்வரவேண்டும் என்று மம்தா கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்ப்பறவை விமர்சனம்



துப்பாக்கி, இரத்தமில்லாமல் இலங்கை கடற்படையின் தாக்கு தலை காதலோடு இணைத்து சொல்லியிருக்கிறார் இயக்குனர் சீனு ராமசாமி.

நீண்ட நாட்களுக்கு பின்பு தமிழ் சினிமாவில் நுழைந்திருக்கும் நந்திதாதாஸ், தன் கணவரின் வாழ்க்கையை திறிலாகத் தொடங்குகிறார். வீட்டிற்கு வரும் நந்திதாவின் மகன் வீட்டை விற்க அனுமதி கேட்க, இது என் கணவன் வாழ்ந்த வீடு என்றும் 25 வருடங்களுக்கு முன்பு கடலுக்கு சென்றவர் கண்டிப்பாக திரும்பி வருவார் என கூறுகிறார்.

அன்று இரவே தன் வீட்டு தோட்டத்தில் "சமாதியில் பாடும் பாடலை" நந்திதா பாட, இதைப்பார்த்த மகன் மறுநாள் காலை அந்த இடத்தை தோண்டுகிறார்.

அந்த இடத்தில் எலும்புக்கூடுகள் கிடைக்க இது, தனது தந்தை தான் என உறுதி செய்யும் மகன், தாய் நந்திதாவை பொலிஸில் காட்டிக்கொடுக்கின்றார். பொலிஸ் விசாரணையில் தன் கணவனை தானே கொலை செய்து வீட்டிற்கு பின்புறம் புதைத்ததாக கூறும்போது நீர்ப்பறவை பறக்க தொடங்குகிறது.

பெற்றோர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கும் நிலையில் கிளிநொச்சியிலிருந்து அகதியாக வந்த விஷ்ணு சரண்யா பொன்வண்ணன் தம்பதியினர் தத்து வளர்க்கின்றனர்.

பெரும் குடிகாரனாக திரியும் விஷ்ணு, அப்பழக்கத்திற்கு அடிமையாகி கை, கால் நடுங்கும் நேரத்தில் ஊர் ஊராக கடன் வாங்கி குடிக்க ஆரம்பிக்கிறார்.

இந்த சமயத்திலேயே கிறிஸ்தவ ஊழிய பெண்ணாக வரும் சுனைனாவை (யஸ்தர்) சந்திக்கிறார். தன் அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லை என்று கூறி பணம் வாங்கிவிட்டு செல்லும் நாயகன் விஷ்ணு, அதையும் குடித்துவிடுகிறார். பின், விஷ்ணு குடிகாரன் என்கிற விடயம் அறிந்த சுனைனா விஷ்ணு தலை மேல கை வைத்து ஆசிர்வாதம் செய்ய நாயகனுக்கு காதல் சிறகடிக்கிறது.

இருப்பினும் குடியை மறக்க முடியாமல் சிக்கித்தவிக்கும் நாயகனை பெற்றோர் மறுவாழ்வு மையத்தில் சேர்க்கின்றனர்.

அங்கிருந்து தப்பித்து வரும் விஷ்ணு, தேவாலய விழாவை முடித்துக்கொண்டு அனைவரும் உறங்கும் சமயம் சுனைனா பக்கத்தில் படுத்துத்தூங்க மறுநாள் காலை நாயகனுக்கு அடி உதை கிடைக்கிறது.

இந்த சம்பவத்தால் மிகவும் அசிங்கப்பட்ட விஷ்ணு, மீண்டும் மறுவாழ்வு மையத்தில் சேர்ந்து குடியை மறக்கிறார்.

குடியை மறந்து விட்டு சொந்த ஊர் திரும்பும் விஷ்ணு சுனைனாவை காதலிக்க முற்படுகிறார். இந்த சமயத்தில் வேலையில்லாத வெட்டிப்பயலுக்கு என் மகளை எப்படி கொடுப்பது என்று? நாயகி அம்மா கேள்வி கேட்க வேலை தேடி அலைகிறார்.

மீனவ சமுதாயத்தில் பிறந்து வெளியில் தொழிலாளியாக வேலை செய்வதை விட "கடலில் நீ தான் முதலாளி" என்று சுனைனா சொல்லும் யோசனைகள் விஷ்ணுவிற்கு ஆறுதலாக அமை றன.

ஆ ல் ஊரில் ஒரு கும்பல், மீனவ ஜாதி அல்லாதவர்கள் கடலில் மீன்பிடிக்க அனுமதி கிடையாது என விஷ்ணுவை விரட்டியடிக்கின்றனர். இந்த பிரச்னை தேவாலய நீதிமன்றத்திற்கு செல்ல, அங்கு விஷ்ணுவுக்கே சாதகமான தீர்ப்பு கிடைக்கிறது.

இருப்பினும் எதிர் தரப்பினர், யாரும் வேலைக்கு சேர்க்க மாட்டோம் என தெரிவிக்க சொந்த படகு வாங்கி மீன் பிடிப்பேன் என சபதமிடுகிறார் நாயகன்.

இந்த படகை வாங்க உப்பளத்திற்கு போய் வேலை செய்யும் விஷ்ணுவிற்கு எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கிறது. கௌரவ வேடத்தில் நடித்திருக்கும் இயக்குனர் சமுத்திர கனி, முன்பணம் பெற்றுக்கொண்டு தவணையில் படகொன்றை கட்டிக்கொடுக்கிறார்.

படகு தயாரானதும் சுனைனாவை திருமணம் செய்து கொள்ளும் நாயகன், தினமும் கடலுக்கு செல்கிறார். இந்த சமயத்தில் ஒரு நாள் கடலுக்கு சென்ற நாயகன், இரண்டு நாள்களாகியும் கரை திரும்பவில்லை.


குடும்பமே பதற்றத்தில் இருக்கும் அந்நேரம், மகனை தேடி தந்தை ராம் கடலுக்கு செல்கிறார். அங்கே இலங்கை கடற்படை விஷ்ணுவை துப்பாக்கி தோட்டாக்களால் துளைத்ததை கண்டு அதிர்ச்சியுடன் தனது மகனின் பிணத்தை கரைக்கு மீட்டு வருகிறார்.

வீட்டோடு இருந்த பையன் வீட்டிலேயே புதைத்து விடுவோம், பொலிசுக்கு தெரிந்தால் நியாயம் கிடைக்கிறதோ இல்லையோ உடம்பை போஸ்ட் மார்டம் பண்ணி நாசம் செய்து விடுவார்கள் என புலம்பும் சமயம் இயக்குனர் சீனு ராமசாமி பார்வையாளர்களை அழ வைக்கிறார்.


இறுதியாக இவ்வழக்கு நீதிமன்ற வாசலை அணுகிய போது, இவ்வளவு நாளாக இதை ஏன் மறைத்தீர்கள் என நீதி பதி கேள்வி கேட்க, சொன்னால் மட்டும் நியாயம் கிடைத்துவிடப் போகிறதா? என நந்திதா பதிலளிக்க இந்திய நீதித்துறையின் அவலம் வெட்ட வெளிச்சத்திற்கு வருகிறது.

தமிழ்வாத்தியாராக வரும் தம்பி ராமய்யா, ஒளிப்பதிவாளர் சுப்பிரமணியனின் ஒளிப்பதிவு, ஏ.ஆர்.ரஹ்நந்தனின் இசை என அனைத்தும் படத்துக்கு வலுசேர்ப்பதுடன் பார்வையாளர்களை படம் பார்க்க தூண்டு கிறது என்பதை மறுக்க முடியாது.

## நீர்ப்பறவை விமர்சனம்



## என்வெற்றிக்கு கமலே காரணம்; ரஜனி புகழாரம்



நடிகர் ரஜினிகாந்த் தனது 62வது பிறந்தநாளின்போது தான் பெரிய ஹீரோவாகக் காரணமாக இருந்த நடிகர் கமல் ஹாசன் என புகழாரம் சூட்டினார்.

1975 இல் நான் நடிக்க வந்த புதிதில் கமல் ஹாசன் பெரிய நடிகர். அவர் அப்போது எவ்வளவு பெரிய நடிகர் என்பது இந்த தலைமுறைக்கு தெரியாது. அவர் தற்போதை விட அப்போது பெரிய நடிகராக இருந்தார். எனது குரு பாலச்சந்திரின் அபூர்வ ராகங்கள், மூன்று முடிச்சு, அவர்கள் ஆகிய படங்களில் ஹீரோவாக நடித்தேன். அதன் பிறகு நான் நடித்த 16 வயதினிலே, இளமை ஊஞ்சல் ஆடுகிறது, ஆடு புலி ஆட்டம், அவள் அப்படித் தான் ஆகியவை ஹிட் படங்கள். அப்போது கமல் மட்டும் ரஜினியை எடுக்காதீர்கள் என்று ஒரு வார்த்தை சொல்லி இருந்தார் என்றால் என்னை யாருமே அந்த படங்களில் நடிக்க வைத்திருக்க மாட்டார்கள்.

கமல் பரிந்துரையின் பேரில் தான் என்னை இளமை ஊஞ்சல் ஆடுகிறது படத்தில் எடுத்தார்கள். நான் பெரிய நடிகனானதும் ஒரு நாள் கமல் என்னை அழைத்து பேசினார். ரஜினி நீங்கள் தனியாக சிங்கிள் ஹீரோவாக நடித்தால் தான் உங்களுக்கு எதிர்காலம். இல்லை என்றால் சினிமா உங்களைப் பயன்படுத்திக் கொள்ளும். நீங்கள் வளரவே முடியாது என்றார். அவர் சொன்னதைக் கேட்டு நான் தனி ஹீரோவாக நடிக்க ஆரம்பித்து பெரிய ஆளாக ஆனேன். மறுபடியும் ஒரு நாள் கமல் அழைத்தார். அப்போது அவர் கூறுகையில், தமிழ் சினிமாவில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சிவாஜி, எம்.ஜி.ஆருக்கு இடையே பகை கிடையாது. ஆனால் சினிமா உலகம் அவர்களை பிரித்து வைத்துவிட்டது. சினிமா உலகம் அவர்களைப் பிரித்ததால் அவர்களின் ரசிகர்களும் பிரிந்தார்கள். அந்த நிலை நமக்கும் வந்துவிடக் கூடாது. நான் பணியாற்றும் தயாரிப்பாளர்கள், இயக்குனர்களுடன் நீங்களும் பணியாற்ற வேண்டும் என்றார். அவருக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. கமல் போன்ற ஜாம்பவான் இருக்கும் கோலிவுட்டில் நான் எப்படி பெரிய நடிகன் ஆனேன் என்று மம்மூட்டி, மோகன் லால், சிரஞ்சீவி, அமிதாப் பச்சன் ஆச்சரியப்பட்டனர். காரணம் ரொம்ப சிம்பிள். கமல் ஹாசனின் நடிப்பைப் பார்த்து வளர்ந்த நடிகன் நான். கமல் அருகில் இருக்கும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்தது. "அவர்கள்" பட ஷூட்டிங்கில் நான் வெளியே உட்கார்ந்திருப்பதைப் பார்த்து பாலச்சந்தருக்கு கோபம் வந்துவிட்டது. என்னை அழைத்து கமல் எப்படி நடிக்கிறார் என்பதை கவனியுங்கள், அப்போது தான் உங்கள் நடிப்புத் திறமை கூடும் என்றார். அதில் இருந்து கமல் நடித்தால் நான் எங்கேயும் போகாமல் அங்கேயே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருப்பேன் என்றார் சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்.



## இளையராஜாவின் சாதனை




இசைஞானி இளையராஜாவின் 920வது படமாக நீதானே என் பொன்வசந்தம் அமைந்துள்ளதன் மூலம் அவரது சாதனைகள் பெருகிக்கொண்டிருக்கிறது.

இந்திய திரையுலகில் யாரும் தொடாத உச்சத்தைத் தொட்ட சில பெருமைகள் இசைஞானிக்கு உண்டு. விருதுகளைத் தாண்டிய பெருமைக்குச் சொந்தக்காரராகத் திகழும் இவர், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராட்டி மற்றும் ஆங்கிலப் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

1980 களிலேயே ஹாலிவுட் படத்துக்கு இசையமைத்த பெருமை இசைஞானிக்கு உண்டு.


இசைஞானியின் முதல்படம் அன்னக்கிளி, 100வது படம் மூடுபனி, 300வது படம் உதயகீதம், 400வது படம் நாயகன் என தற்போது ஆயிரம் படங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறார் இசைஞானி. இப்போது அவரது இசையில் வெளியாகிய நீதானே என் பொன்வசந்தம் அவரது 920வது படமாகும்.

இது தவிர 1980 களில் ஒரே ஆண்டில் 50 படங்களுக்கு இசையமைத்தவர் இளையராஜா இந்த சாதனையை எந்த மொழியிலும் இசையமைப்பாளர் யாராலும் இதுவரை தாண்ட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



படம்: கண்ணா லட்டு தின்ன ஆசையா

சந்தானம் பவர் ஸ்டார் கூட்டணியில் உருவாகியிருக்கும் கண்ணா லட்டு தின்ன ஆசையா
பட டிரைலர் கடந்த 10ஆம் திகதி வெளியானது. வெளியான மூன்றே நாட்களில் 3 லட்சம்
பேர் டிரைலரை பார்த்து ரசித்துள்ளனர். ஒரு லட்டுக்காக 3 நாயகர்கள் போட்டியிடும் போது
ஏற்படும் சம்பவங்களை நகைச்சுவையாக படத்தில் காட்டியுள்ளார்களாம். புதுமுக நாயகன்
சேது அறிமுகமாக நாயகியாக விஷாகா சிங் நடித்துள்ளார். படத்தை கே.எஸ். மணிகண்டன்
இயக்க தயாரிப்பாளர் ராமநாராயணனுடன் சந்தானம் இணைந்து தயாரித்திருக்கிறார்.



## நடிகர் தேர்வுக்கு இப்படியும் நேர்முகத் தேர்வா..?

வாட்டசாட்டமான ஆண்களை வரவழைத்து அவர்களின் சட்டையைக் கழற்ற வைத்து நேரடியாக இன்டர்வியூ செய்தார் ஹாலிவுட் நடிகை கர்ட்னி ஸ்டோடன். இந்த நேரடி இன்டர்வியூவில் அவருக்கு உதவியாக கணவர் டோக் ஹட்சின்சனும் கூட உட்கார்ந்திருந்தார் என்பதுதான் விசேஷமானது.

பிரபல அமெரிக்க பாடகி ஸ்டோடன். ரிவியிலும் தோன்றி வருகிறார். இவர் ஒரு புதிய இசை அல்பத்தை உருவாக்கவுள்ளார். வீடியோ அல்பமான இதில் நடிப்பதற்காக சில ஆண்கள் தேவைப்படுகிறார்கள். அந்த ஆண்களை தேர்வு செய்வதற்காக இவர் ஒரு நூதன நேர்முகத் தேர்வை வைத்தார். அதில் கலந்து கொண்ட ஆண்களுக்கு சட்டையைக் கழற்றி உடம்பு முழுவதும் தடவியும், உற்றும் பார்த்து தேர்வு செய்தார். இந்த பணியின்போது ஸ்டோடனின் கணவர் டோகும் அருகேயே இருந்து மனைவிக்கு ஒத்தாசையாக உதவி செய்தார். சட்டையில்லாமல் வந்த ஆண்களின் கவர்ச்சியான, கட்டுமஸ்தான, வாட்டசாட்டமான உடல் அமைப்பை ரசித்தபடியும், கேலி செய்தபடியும், விமர்சித்த படியும், எழுந்து போய் அருகில் நின்று போஸ் கொடுத்தபடியும் இன்ரவியை நடத்தினார் ஸ்டோடன். ஸ்டோடன் நடத்திய இந்த இன்டர்வியூவில் நடிகர்கள், மாடல்கள், நடனக் கலைஞர்கள் என சகல தரப்பினரும் கலந்து கொண்டு உடம்பை காட்டியுள்ளனர். ஸ்டோடனுக்கு 18 வயதுதான் ஆகிறது. அதேசமயம், அவரது கணவருக்கு 52 வயது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இன்டர்வியூவின்போது ஸ்டோடனின் தாயார் கிறிஸ்டா கெல்லர், வீடியோ ஆல்பத்தின் இயக்குநர் மைக்கேல் செரட்டோ ஆகியோரும் இருந்தனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு எல்லாத் துறைகளையும் அரசு ஆக்கிரமிக்கிறது

## மாவை.எம்.பி.ஆவேசம்

(பூந்தோட்டம்)

**மற்றவர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர்களின் அடையாளத்தையே இல்லாமல் செய்யும் நடவடிக்கையை இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. ஆகையால்தான் எமது போராட்டங்களை இன்னும் மிக பலமாகவும் பரந்தும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது என யாழ். பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்குமாறு கோரிய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்;

கடந்த சில மாதங்களாக எமது தேசத்திலே இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்தும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்கள் அகற்றப்பட்டாமல் மீள்குடியேற்றங்கள் இடம்பெறும் என்பதனை வலியுறுத்தியும் நாம் அகிம்சை வழியிலான போராட்டங்களை நடத்தி வருவதை உலகம் நன்கு அறியும்.

ஆயிரம் ஆயிரம் ஏக்கர் எமது நிலங்களையும் எமது வீடுகளையும் அழித்தது மட்டுமல்லாது அதற்கும் அப்பால் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்திருப்பதை நாம் தீவிரமாக எதிர்த்து நிற்கின்றோம். இன்று அரசாங்கத்தை பார்த்தால் தமது பெரும்பான்மை பலம் என்பதை வைத்துக் கொண்டு எல்லாதுறைகளிலும் ஆக்கிரமிப்பை நடத்தி வருகின்ற ஓர் உச்சக்கட்டத்தை நீதித்துறையில் ஆக்கிரமித்துள்ளதையும் நாம் இன்று காணக்கூடியதாக உள்ளது.

இன்று எமது கோரிக்கை இந்த வன்னி மாவட்டத்திலே எமது மக்கள் ஆயிரமாக திரண்டு நின்று ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டும். ஜனநாயக சக்திகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோருகின்றோம். இதற்கு செவி சாய்க்காதுவிட்டால் தொடர்ந்தும் நாம் இந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியும் தீவிரப்படுத்த வேண்டியும் இருக்கும்.

இதனையும்விட எமது இலட்சக்கணக்கான மக்களின் மீள்குடியேற்றத்தை இந்த இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். புதிதாக எமது தமிழ் நிலத்தை வேற்று இனத்தவர்களுக்கு விற்கின்றார்கள். அபகரிக்கின்றார்கள். எமது நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

எமது நிலங்களில் எமது மக்கள் குடியேற்றப்பட வேண்டும். எமது மக்கள் தமது வீடுகளிலும் தமது மண்ணிலும் வாழ வேண்டும். தமது மண்ணிலே தமிழ் மக்கள் ஆள வேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதியாகவும் அகிம்சை ரீதியாகவும் எமது மக்களை அணிதிரட்டி பலமாகவும் பரந்துபட்டும் விரிவுபடுத்தி போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம். (அ-2-266)

## க.தொ.சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் புளியம்பொக்கணை சமாச செயலகத்தில் மாவட்ட உதவித் திட்ட பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக கு.அருமைராசா, உபதலைவராக மு.தவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 7 இயக்குநர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளி.மாவட்ட மீன்பிடி திணைக்கள பரிசோதகர், கிளி.மாவட்ட நன்னீர் மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர், கண்டாவளைப் பிரதேச செயலர், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட அமைப்பினர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், சமாச எல்லைக்குட்பட்ட 7 சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-263)

## கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கண்டாவளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்கு குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தர்மபுரம் தொழிற்பயிற்சி நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளும் கண்டாவளை பிரதேச செயலர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-263)

# பிரதம நீதியரசருக்கு தேய்ந்து போன நூலைக் கொடுக்கிறது ஐ.தே.கட்சி

## அமைச்சர் டளஸ் கிண்டல்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாக்கவிற்கு எதிர்க்கட்சி திரித்து தேய்ந்து போன நூலை கொடுத்துள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பதவியில் அமர்ந்தால் அவருடைய ஆசனத்தை மாதத்திற்கு ஒருமுறை கழுவ வேண்டிவரும் என அப்போது எதிர்க்கட்சியில் இருந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுபோன்று தற்போதைய பிரதம நீதியரசரை மிகவும் நல்லவர் என எதிர்க்கட்சி கூறுவது அவரை ஏமாற்றுவதற்கே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு நடந்தது. அதுவே ஒருகாலத்தில் அவருடன் ஒன்று சேர்ந்து இருந்த சிலர் பின்னர் அவரை நிர்க்கதியாக்கி சென்றதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஒன்பது மாதங்களில் 2704 பேர் தற்கொலை

## பொலிஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஒன்பது மாதங்களில் 2 ஆயிரத்து 704 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதில் 2 ஆயிரத்து 92 பேர் ஆண்களும் 612 பேர் பெண்களுமாவர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் தற்கொலை செய்வோர் வீதம் அதிகரித்துள்ளது என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

தற்கொலைச் சம்பவங்களில் தூக்கில் தொங்குதல் மற்றும் விசம் அருந்தி உயிர் நீத்தலே அதிகமாகவுள்ளது.

மன அழுத்தம், சமூக தொடர்பின்மை மற்றும் அறியாமை போன்ற காரணங்களினாலேயே கூடுதலான தற்கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# அம்பாறையில் நில அதிர்வு தொடர்கிறது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் தமண பிரதேச செயலர் பிரிவின் வடினாகல, கிச்சிலேகம, தேவாலஹிந்த, கெத்சிறிகம, கலபாமுல ஆகிய பிரதேசங்களில் மூன்று நில அதிர்வுகள் உணரப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிய சத்தத்துடன் நேற்று முன்தினம் காலை 6.33 அளவிலும் முற்பகல் 10.15 அளவிலும் மதியம் 1.03 அளவிலும் இந்த நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலஅதிர்வுகளுடன் கடந்த சில வாரங்களில் அம்பாறையில் 34 நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இது இயற்கையான அதிர்வுகள் இல்லை என்றால் அதற்கான காரணத்தை க்ண்டறியுமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை நில சரிதவியல் மற்றும் சுரங்க பணியக அதிகாரிகள் பிரதேசத்தில் ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளதாக பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சுற்றுலா விசாவில் வந்து தங்கியிருந்தோர் ஆயிரம் பேர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

சுற்றுலா விசாக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆயிரம் பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாக்கள் மோசடி செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குடிவரவு, குடியல்வுப் பிரிவின் புலனாய்வு அதிகாரிகளே அதிகளவானோரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டோரில் அதிகளவானவர்கள் பாலியல் தொழில்களில் ஈடுபட்ட வெளிநாட்டு பெண்களாவர்.

வெளிநாட்டு பெண்களை பாலியல் தொழில்களீல் ஈடுபடுத்தும் பாரியளவு வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)





சுபாஸ் விருந்தினர் விடுதி நீண்டகாலத்திற்கு பின்பு நேற்று முன்தினம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுபாஸ் விருந்தினர் விடுதியின் பிரதம கணக்காளர் நிகால் சமரசிங்க மங்கல விளக்கேற்றுவதையும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும் ஏனைய மதகுருமார் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர் .கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம மக்களுக்கு சேவை செய்யவே நாடாளுமன்றுக்கு தெரிவானேன்

## நாமல் எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

தந்தையின் அரசியல் பலத்தை பயன்படுத்தி உதவிகளை பெற்றுக்கொள்ள தாம் தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது தந்தை ஜனாதிபதி என்பதால் 20 அல்லது 30 வருடங்களின் பின்னர் தான் நாட்டின் தலைவராக முடியும் என சிலர் கூறுகின்றனர். எனினும் அவ்வாறான தேவை தமக்கு இல்லை என அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான தேவை இருக்குமாயின் 15 நாட்கள் அம்பாந்தோட்டையிலுள்ள கிராமங்களிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மாதத்தில் 8 நாட்கள் உணவு, குடிநீரின்றி அலைந்து திரிய வேண்டிய தேவை தமக்கு இருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமங்களுக்கு சேவை செய்வதற்காகவே ஜனாதிபதி தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அவமானப்படுத்தியவர்களுக்கு தண்டனை வழங்குங்கள்

## ஷிராணி சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

என்னை அவமானப்படுத்தியோருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சமல் ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

குற்றவியல் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

நீலகண்டன் சட்டத்தரணிகள் நிறுவனத்தின் ஊடக பிரதம நீதியரசர் சபாநாயகரிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் சில உறுப்பினர்கள் மிகவும் இழிவான சொற்களை பயன்படுத்தி அவமானப்படுத்தினர்.

பிரதம நீதியரசர் பெண் என்று பாராது இவ்வாறு அவமானப்படுத்தினர். இவ்வாறான செயற்பாடுகளை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புணர்ச்சியற்ற செயலை சபாநாயகர் கண்டிக்க வேண்டுமென ஷிராணி பண்டாரநாயக்க கோரியுள்ளார். (அ-2)

# டிப்பர் வாகனத்துடன் விபத்து; நபரொருவர் படுகாயம்

## அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

(கனகபுரம்)

டிப்பர் வாகனமும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் பளை புதுக்காட்டு சந்தியை அண்மித்த இந்தியன் வீட்டுத்திட்டத்திற்கண்மையில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது,

இயக்கச்சியில் இருந்து பளை நோக்கி முன் பின்னாக பயணித்துக் கொண்டிருந்த வேளை திடீரென துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் அருகில் உள்ள இந்தியன் வீட்டுத்திட்டத்திற்கு செல்வதற்காக திரும்பியவேளை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் மாசார் பளையைச் சேர்ந்த ஜெயகுலராசா (வயது 48) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-259)

# பான் கீ மூனுக்குள்ள அதிகாரம் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் உண்டு

(கொழும்பு)


ஐ.நா.வின் அனுமதியின்றி பான் கீ மூனுக்கு தாருஸ்மான் குழுவை அமைக்க முடியுமானால் இலங்கை ஜனாதிபதிக்கு பிரதம நீதியரசர் தொடர்பான அறிக்கை தொடர்பில் தமது ஆலோசனை வழங்க ஏன் குழு ஒன்றை அமைக்க முடியாது? என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெகத் வெல்லவத்த கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த தீர்மானம் இலங்கையில் நீதித்துறையை பாதுகாக்கும் நடவடிக்கை என்றும் விரிவுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை வைத்துக்கொண்டு நாட்டில் அரசியல் தளம்பலை ஏற்படுத்த சில குழுவினர் முயற்சிக்கின்றனர்.

எனினும் தமது சொத்துக்களை முழுமையாக வெளியிடாத வகையில் ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியில் இருந்து விலக்கிவிட போதுமான சாட்சியாகும் என்று வெல்லவத்த குறிப்பிட்டுள்ளார். இதனை தவிர வங்கிக் கணக்குகளை காட்டாமை, செலிங்கோ குழுமத்துக்கு சொந்தமான வீடு ஒன்றை கொள்வனவு செய்தமை, நொத்தாரிசு ஒருவருக்கு காசோலை வரைந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு பிரதம நீதியரசர் உரிய பதிலை வழங்கவில்லை.

இந்த நிலையில் பிரதம நீதியரசருக்கு எதிராக அரசியல் ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதாக எவ்வாறு சட்டத்தரணிகள் கேள்வி எழுப்ப முடியும் என்று வெல்லவத்த கேட்டுள்ளார். (அ-2)



அநுராதபுரம் ஜெயஸ்ரீ மகா போதி விகாரைக்கு நேற்றுக்காலை விஜயம் செய்த எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழிபாட்டிற்கு செல்வதை படத்தில் காணலாம்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் நாள்தோறும் பிரச்சினைகள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் வடபகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நாள்தோறும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குருநகரில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட வடக்கு கிழக்கு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தொழிற்சாலையின் மூலம் யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் மிகவும் குறைந்த விலையில் ஐஸ் கட்டிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன தீர்வு கண்டுள்ளார். அதுமட்டுமன்றி தமிழர்களின் அரசியல் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வருகிறார். வெளிப்படையாக குரல் கொடுக்க வேண்டும் என என்னிடமும் பல முறை கூறியுள்ளார்.

மேலும் யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் உட்பட வடக்கு மாகாணத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினை இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளில் அத்துமீறல் நடவடிக்கையே கடற்றொழிலாளர்களின் மனதை வாட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# அரசுக்கு ஆதரவாகவே ஐ.தே.க. செயற்படுகிறது

## இணையும் திட்டம் இல்லை என்கிறார்– அனுரகுமார

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளும் திட்டமில்லை என ஜே.வி.பி. அறிவித்துள்ளது. எந்தவொரு காரணத்திற்காகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் திட்டம் கிடையாது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பம் முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவையான வகையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை. குற்றப் பிரேரணை நீதிமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாடு என்பதை ஐக்கிய தேசியக் கட்சி மூடி மறைக்க முயற்சித்தது.

இந்த அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையிலேயே ஐக்கிய தேசியக்கட்சி செயற்பட்டது. குற்றப் பிரேரணை தொடர்பிலான நடவடிக்கைகள் நாடாளுமன்றிற்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டுமென கபடமான ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்தது. அதன் பின்னர் ஜனாதிபதியின் சுயாதீன ஆணைக் குழு என்ற யோசனையையும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# 100 ஹெக்ரேயர் காணி விவகாரம் குறித்து நடவடிக்கை எடுங்கள்

## தொண்டமான் ஜனாதிபதிக்கு கடிதம்

(மொனராகலை)

மொனராகலை உலந்தாரவிலுள்ள 100 ஹெக்டேயர் காணி விவகாரம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரதியையே அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலந்தாரவிலுள்ள 100 ஹெக்டேயர் காணி பெருந்தோட்டத்திற்கு எதிரான அபிவிருத்தி திட்டத்திற்கு பயன்படுத்தப்படுமாயின் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

புதிதாக தேயிலை வளர்ப்பதற்காக இந்த 100 ஹெக்டேயர் அந்தக்காணி வர்த்தகர் ஒருவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசாங்கத்தினால் அந்தக் காணி பொறுப்பேற்கப்பட்டது.

இந்நிலையில் காணியை பெருந்தோட்டத் திட்டத்திற்கு எதிராக பயன்படுத்துவதனால் இங்கு வாழும் 80 குடும்பங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்படுவர். இங்குள்ள விளையாட்டு மைதானம், அதனோடிணைந்த கட்டடம், மயானம் உள்ளிட்டவை இந்த சமுதாயத்திடமிருந்து பறிபோய்விடும்.

ஹெயஸ்குரூப்புக்கு சொந்தமான இந்த தோட்டத்தில் மக்கள் தமது வழமையான வாழ்வை தொடரும் வகையில் இங்கு வாழும் மக்களுக்கு 100 ஹெக்டேயர் நிலம் ஒதுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளே சமூகங்களுக்கிடையில் இன ஒற்றுமைக்கு வழி வகுக்கும் என்பதுடன் எஞ்சியுள்ள 994 ஹெக்டேயரிலிருந்து காணியை பெற்று இந்த 80 குடும்பங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MAYA CALENDAR

## மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு


# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!


-ராஜ்சிவா- 15

### மாயன் இனத்தின் வளர்ச்சி


மாயன் சரித்திரங்கள் எல்லாமே, இன்றிலிருந்து, ஆயிரம் வருடங்களிலிருந்து பத்தாயிரம் வருடங்கள் வரைக்கும் முற்பட்ட காலத்திற்கு உரியவை. இந்தக்கால இடைவெளிகளில் உலகில் பல நாகரீகங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால், மிகமிக ஆரம்பகால நாகரீகங்கள் எனப் பார்க்கும் போது அதில் சிந்துவெளி நாகரீகமும் ஒன்றாக அடங்குகிறது. இது 5000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நாகரீகம் சிந்துவெளி நாகரீகம். தமிழர்களின் நாகரீகமாகும். 5000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய தேசத்தில் உயிர்ப்புடன் இருந்த ஒரேமொழி தமிழ்மொழி மட்டும்தான். மாயன் இனத்தின் பெயருக்கும் நம்மிடையே வழங்கி வந்த இந்த மாயா என்னும் பெயருக்கும் உள்ள தொடர்பு தற்செயலானதாக இருக்க லாம் எனத்தோன்றவில்லை. உலகில் வேறு எங்குமே இல்லாத மாயா எப்படி நம்மிடத்தில் மட்டும் வந்தது? அதுவும் இவ்வளவு புரவலாக....!


தமிழர்கள் முற்காலத்தில் கப்பலில் மேற்கு நோக்கிக் கடற்பயணத்தில் ஈடுபட்டதற்கான சான்றுகள் நிறையக் கிடைத்திருக்கின்றன. அப்படி அவர்கள் பயணம் செய்தபோது பாவித்த வரைபடங்களாகக் கீழே கொடுக்கப்பட்ட இவை இரண்டும் எமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த இரண்டு வரைபடங்களையும் சரியாகக் கவனியுங்கள். ஆங்கிலத்தில் குறிப்புகளை ஆராய்ச்சியாளர்கள் எமது விளக்கத்திற்காகக் கொடுத்திருக்கின்றனர்.




முதலாவதாக இருக்கும் வரைபடத்தின் படி Kethumal (chethumal) என்னும் மாயன் இடம்வரை மேற்கே தமிழர்கள் சென்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கீழே உள்ள தற்கால வரைபடத்தின்மூலம் அந்த chethumal எங்கிருக்கிறது என்பதை நீங்கள் சரி பார்த்து அறிந்து கொள்ளலாம். அத்துடன் தமிழர்கள் பிரயாணம் செய்த கப்பல், படத்தில் இருப்பதாகவும் இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.












தமிழரசனான பல்லவ அரசனின் மாமல்லபுரக் கட்டடங்களையும் மாயனது கட்டடங்களையும் சற்றே ஒப்பிட்டுப்பாருங்கள்.

குறிப்பாக மாயனின் முக்கிய கட்டடம் ஒன்றும் மாமல்லபுரக் கட்டடம் ஒன்றும் அச்சு அசலாக ஒன்றுபோலக் காணப்படுகிறது. இது தற்செயலாக இருக்க முடியுமா என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள். இந்த ஆதாரமும் போதாது என்று நீங்கள் அடம்பிடித்தால் ஆதிகாலத்தல் நமது மூதாதையர்கள் விளையாடிய விளையாட்டான சொக்கட்டான் அல்லது தாயம் என்று அழைக்கப்படும் விளையாட்டு ஓலைச் சுவடியில் வரையப்பட்டிருப்பதைப் பாருங்கள். அதே விளையாட்டு மாயன்களும் அதேவரைபடம் கொண்டு வரைந்து விளையாடியிருக்கின்றார்கள் என்றால் என்ன சொல்வீர்கள்? இதுவும் தற்செயலா?





சரி, இவையெல்லாவற்றையும் விட்டுவிடலாம்....! மாயன்களுக்கும் நமக்கும் உள்ள சில பெயர்களின் ஒற்றுமைகளை இப்போது பார்க்கலாமா? இலங்கை என்னும் பெயர் நீங்கள் அறிந்ததே! தமிழில் இலங்கம், இலங்கா என்பது மருவி இலங்கை என்றாகியது. ஆனால், மாயனின் பல இடங்களின் பெயர்கள் லங்கா என்பதில் முடிகிறது. குறிப்பாக சிலங்கா என்ற ஓசையுடன் உள்ள xilanca என்னும் மாயன் இடமும் இஸ்பலங்கா என ஓசை வரும் xbalanca என்பதும் பலங்கஎன்று ஓசை வரும் palengue என்னும் இடமும் எம்மை ஆச்சரியப்படுத்துகின்றன. அத்துடன் சேரன் என்னும் மாயனின் அரசன் பெயரும் வியப்பளிக்கிறது.

முடியாது! முடியவே முடியாது! இதை எல்லாம் ஒத்துக்கவே முடியாது! என்று நீங்கள் இன்னும் நம்ப மறுத்துப் பிடிவாதம் பிடித்தால், அடுத்து நான் சொல்லப்போவதை அவதானமாகக் கவனியுங்கள். உலகமே மாயன்களையும் எகிப்தியரையும் அவர்களின் கட்டடக் கலைக்காக மிகவும் வியக்கிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் கட்டிய பிரமிட்டை வியப்புடன் பார்க்கிறது. பிரமிட் என்றால் எகிப்தியரைப் பொறுத்தவரை இறந்தவர்களை அடக்கம் செய்த இடமாகிறது. ஆனால், மாயனைப் பொறுத்தவரை அவர்களின் பிரமிட்டுக்கள் கடவுளுக்காகக் கட்டப்பட்ட கோவில்கள். புனிதமான இடங்கள். ஆனால், இங்கு நாம் கவனிக்கத் தவறிய மிகப்பெரிய விடயம் ஒன்று உண்டு. பிரமிட் என்றால் அதன் வடிவம் என்ன? நான்கு பக்கங்களும் தட்டையான தளங்களையுடைய கூம்பு போன்ற ஒரு அமைப்புத்தானே! அப்படிப் பார்த்தால் நமது கோவில்களின் கோபுரங்கள் அனைத்துமே பிரமிட் வடிவங்களில் தானே கட்டப்பட்டிருக்கின்றன. இதை நாம் எப்படிக் கவனிக்காமல் விட்டோம்? நமது கட்டட வடிவத்தை அவர்கள் கவர்ந்து கொண்டார்களா? இல்லை. அவர்களது கட்டட வடிவத்தை நாம் பெற்றுக் கொண்டோமா? இதற்குப் பதில் மாயன்களின் சரித்திரத்திலேயே உண்டு. மாயன்களுக்குக் கிழக்கிலிருந்து வந்தவர்கள்தான் சகல அறிவையும் கற்றுத் தந்தார்கள் என்று இருக்கிறது. அப்படிக் கிழக்கில் இருந்து வந்தவர்கள் ஒன்று சுமேரியராக இருந்திருக்க வேண்டும். இல்லை, தமிழர்களாக இருந்திருக்க வேண்டும். அதுவும் இல்லை என்றால் சுமேரியர்கள் கூடத் தமிழர்களின் தொடர்புள்ளவர்களாக இருக்கச் சாத்தியம் உண்டு. இவையெல்லாவற்றுக்கும் சாட்சியங்களும் உண்டு. இப்போது மாயன்களுக்கும் தமிழர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்பதற்காக சாத்தியங்கள் உண்டு என்பதை நீங்களே பார்த்தீர்கள். அத்துடன் இன்னுமொரு முக்கியமான இந்தக் கோவில்களின் அமைப்பையும் பாருங்கள். ஆச்சரியத்தின் உச்சத்துக்கே போய்விடுவீர்கள். உதாரணத்திற்கு மாயனின் கோவில் ஒன்றையும் அதாவது பிரமிட் ஒன்றையும் நமது கோவில் கோபுரம் ஒன்றையும் படமாகத் தருகிறேன் பாருங்கள்.

> அமெரிக்காவில் பிறந்த எழுத்தாளரும் சரித்திர ஆய்வாளருமான மாட்லாக் என்பவர், தமிழனுக்கும் இந்துக்களுக்கும் மாயன்களுக்கும் சம்பந்தம் உண்டு என்று உறுதியாகச் சொன்னார். இவர் இது பற்றி நிறையப் புத்தகங்ள் எழுதி வெளியிட்டும் இருக்கிறார்.
> -ராஜ்சிவா





### மயான்களுக்கும் இந்துக்களுக்கும் உள்ள தொடர்பு


இதற்கு மேலும் நான் ஆதாரங்களைத் தேடித் தரவேண்டியது இல்லை என்றே நம்பிகிறேன். ஆனாலும் கோவில்களின் கோபுரங்களுடன் நமது அடுத்த ஒரு பிரமிக்கத்தக்க ஆய்வொன்றைச்செய்துவிட்டு மேலே செல்லலாம். நீங்கள் இந்தத் தொடரின் ஆரம்ப அத்தியாயங்களை நிச்சயம் மறந்திருக்க மாட்டீர்கள். அதில் நான் மாயன்களுக்கும் ஏலியன்களுக்கும் தொடர்பு இருக்கலாம் எனப் பல சாட்சியங்களைத் தந்திருந்தேன். மாயன்களுக்கு இவ்வளவு பிரமிக்கத்தக்க அறிவை யாரோ கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் ஏலியன்களாகவும் இருக்கச் சாத்தியம் உண்டு எனப் பல அத்தியாயங்களில் சொல்லியிருக்கிறேன். ஒருவேளை அப்படி இருந்திருந்தால் அந்த ஏலியன்கள் பறக்கும் விமானத்தின் மூலமாகத்தான் மாயன்களை வந்தடைந்திருக்க வேண்டும் அல்லவா? அப்படி என்றால் விமானம் என்பதும் இங்கு முக்கியமாகின்ற. இப்போது மிகவும் ஆச்சரியப்படக் கூடிய ஒரு செய்தியைக் கவனியுங்கள். நாங்கள் நமது கோவில்களின் கோபுரங்களை எப்படி அழைப்போம் தெரியுமா? விமானம் என்றுதான் அழைக்கிறோம். அதே நேரம் எமது பண்டைய காவியங்களில் பறந்து வரும் ஒவ்வொரு உபகரணமும் விமானம் என்றுதான் அழைக்கப்படுகின்றது. இது உங்களை ஆச்சரியப்படுத்த வில்லையா? கட்டடமும் பறக்கும் சாதனமும் ஒரே பெயரில் அழைக்கப்படுகிறது. இந்த ஒற்றுமை உலகில் வேறு எந்த மொழிகளிலுமோ இனங்களிலுமோ கிடையாது. இது எப்படிச் சாத்தியமாயிற்று. சிவபுராணத்தில் வரும் மிக முக்கிய ஒரு கதையையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். தரகாசுரன் என்னும் அசுரன் முருகனால் அழிக்கப்பட அவனது மூன்று மகன்களான வித்யுன் மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகியோர் கடுந்தவம் செய்து சிவனிடமிருந்து மூன்று பறக்கும் கோட்டைகளைத் தவமாகப் பெறுகின்றனர். பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று உலோகங்களாலானவை அந்தக் கோட்டைகள். அந்தக் கோட்டை களின் மீதேறிப் பறந்தபடி தேவர்களை அவர்கள் மூவரும் துன்புறுத்தினார்கள் என்பது புராணம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பணம் திரும்பக் கிடைத்தது



மாட்டூரில் வாரம் ஒரு முறை புதன்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடைபெற்று வந்தது. ஒருமுறை சீனன் என்பவன் நல்ல பசுவாக வாங்க ஒரு செவ்வாய்க்கிழமை இரவில் அவ்வூருக்கு வந்தான். அவ்வூரில் அயலூரிலிருந்து வருபவர்கள் தங்க ஒரே சத்திரம்தான் இருந்தது. சீனன் அங்கு போய் சத்திரத்து நிர்வாகி பசுபதியிடம் ஒரு

## அம்புலிமாமா கதைகள்


பையைக் கொடுத்து இந்த ஐந்நூறு ரூபாயை பத்திரமாக வைத்திருந்து நாளை காலையில் நான் கேட்கும்போது கொடுங்கள் என்றான்.

பசுபதியும் பணத்தை வாங்கி வைத்துக் கொண் டான். பசுபதி ஏமாற்றுப்பேர்வழி. சீனன் கொடுத்த பணத்தை அவன் தனதாக்கி கொள்ளத் தீர்மானித்தான்.

மறுநாள் காலை சீனன் பசுபதியிடம்தான் கொடுத்த பணத்தைக்கொடுக்கும்படி கேட்டான்.

பசுபதியோ பணமா? நீ என்னிடம் எதுவும் கொடுக்கவில்லையே என்று பட்டென்று கூறி அதட்டி சத்திரத்திலிருந்து விரட்டிவிட்டான். சீனன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே சத்திரத்தில் இருந்து வெளியே வந்தான். அப்போது அவன் பின்னாலேயே வந்த ஒருவன் சீனனைப் பார்த்து நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். இந்தப் பசுபதி உங்களை ஏமாற்றிவிட்டான். உங்கள் பணம் கிடைக்கவேண்டும் என்றால் நீங்கள் இதே தெருவில் உள்ள பரமேசுவரனைப் பாருங்கள். அவர் ஏதாவது வழி சொல்வார் என்றான்.

சீனனும் உடனே பரமேசுவரனின் வீட்டிற்குப்போய் தன்னைப் பசுபதி ஏமாற்றிவிட்டதை விபரமாகக் கூறினான். பரமேசுவரனும் சரி நீ அடுத்த செவ்வாயன்று ஐந்நூறு ரூபாயுடன் வா... உன் பணத்தைப் பசுபதி திருப்பிக்கொடுக்க வழிசெய்கிறேன் என்றான். சீனனும் ஐந்நூறு ரூபாயுடன் மறு செவ்வாய்க்கிழமை பரமேசுவரனின் வீட்டிற்கு வந்தான். அப்போது பரமேசுவரன் தன்னோடு இருந்த ஒருவரை சீனனுக்குக்காட்டி இவர் இந்த ஊரின் கிராம அதிகாரி. இவர் இப்போது உன்னோடு சத்திரத்திற்கு வருவார். இவர் முன்னிலையில் நீ பசுபதியிடம் பணத்தைக்கொடுத்து மறுநாள் காலையில் வாங்கிக் கொள்வதாகச் சொல். பசுபதியும் பணத்தை வாங்கிக்கொள்வான். நீ நாளை காலையில் அவனிடம் கொடுத்த பணத்தைக்கேள். அவன் உடனே கொடுத்துவிடுவான். அதை வாங்கிக் கொண்டு இங்கே வா என்றான்.



சீனனும் கிராம அதிகாரியைக் கூட்டிக்கொண்டு சத்திரத்திற்குச் சென்றான். அவர் முன்னிலையில் அவன் ஐந்நூறு ரூபாயைப் பசுபதியிடம் கொடுத்து இந்தப் பணத்தை நீங்கள் வைத்திருங்கள். நாளை காலையில் வாங்கிக்கொள்கிறேன் என்றான். பசுபதியும் பணத்தை வாங்கிக்கொண்டான். சீனன் இரவில் சத்திரத்தில் தங்கினான். காலையானதும் அவன் எழுந்து போய் தன் பணத்தைக் கொடுக்கும்படி கேட்கவே பசுபதியும் பணத்தைக் கொடுத்து விட்டான்.

சீனனும் உடனே பணத்தோடு பரமேசுவரனின் வீட்டைச் சென்றடைந்தான். அப்போது கிராம அதிகாரியும் அங்கே இருந்தார்.

பரமேசுவரனும் இப் போது இவரோடு சத்திரத்திற்குப் போ என்றான். சீனனும் கிராம அதிகாரியுடன் மறுபடியும் சத்திரத்திற்குச் சென்றான். கிராம அதிகாரியும் பசுபதியிடம் நேற்று இவர் கொடுத்த பணத்தை எடுத்து வந்து கொடு என்றார்.

பசுபதி திகைத்துப் போனான். ஆனாலும் சமாளித்துக் கொண்டு பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். கிராம அதிகாரியும் சீனா உன் பணம் உனக்குக்கிடைத்து விட்டது. இனி நாம் போகலாம் என்றார்.

# சிலையின் விலை



மன்னர் மாதவசேனர் கலா ரசிகர். அவர் பல அழகிய ஓவியங்களையும் சிலைகளையும் சேகரித்து ஓர் அருங்காட்சியகத்தை அமைத்தார். அதை நன்கு கவனித்து நிர்வகிக்க கலையை மதித்து ரசிக்கக்கூடிய ஒருவனைத் தேர்ந்த எடுக்க விரும்பினார்.

அதனால் அருங்காட்சியகத்தின் நிர்வாகி என்ற பதவிக்கு தேர்வு ஒரு குறிப்பிட்ட நாளில் நடக்கும் என்று நாடெங்கிலும் பறைசாற்றுவிக்கப்பட்டது. அத்தேர்விற்கு பல கலைஞர்கள் வந்தார்கள். அவர்களை வடிகட்டி மூன்று பேர்களை ஆஸ்தான பண்டிதர் தேர்ந்தெடுத்தார்.

மன்னரும் அந்த மூவரையும் கூட்டிக்கொண்டு அருங்காட்சியகத்திற்கு சென்றார். அங்கு ஓர் அழகிய சிலையை அவர்களுக்கு காட்டி அவர் இவ் அழகிய சிலைக்கு எவ்வளவு பணம் கொடுத்து வாங்கி எடுத்துக் கொண்டு போவீர்கள்? என்று கேட்டார். சாகரன் இந்த அழகிய சிலைக்கு என் சொத்து முழுவதையும் விலையாகக் கொடுத்துவிட்டு இதை எடுத்துக் கொண்டு செல்வேன் என்றான். சேகரனும் என்னிடம் உள்ளவற்றை எல்லாம் விற்று இதை வாங்கிக் கொண்டு போய்விடுவேன் என்றான். சுதாகரனோ அரசே இதன் விலையை மதிப்பிடவே முடியாது. இந்த அழகிய கலை அம்சம் கொண்ட சிலையை எல்லோரும் பார்த்து ரசிக்க வேண்டும். இது இங்கேயே இருக்க வேண்டிய அற்புதப் படைப்பு. இதை விலைகொடுத்து வாங்கவும் மாட்டேன். விற்கக்கூடாது என்றும் கூறு வேன் என்றான். மன்னர் சுதாகரனையே அருங்காட்சியக நிர்வாகியாக நியமித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் மாத இராசி பலன்

# 16.12.2012-13.01.2013




மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

**வழக்குகளில் வெற்றி கிட்டும்!**

**மற்றவர்களின பிரச்சினைகள் தீர தாமாக முன்வந்து, உதவி செய்யும் சிம்ம இராசி நேயர்களே!**

மார்கழி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது மாதத் தொடக்கத்திலேயே வெற்றிகள் ஸ்தானத்தில் இராகுவும் எதிரிகள் ஸ்தானாதிபதி சனியும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே, நீண்ட நாள் வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும். நினைத்ததை, நினைத்த நேரத்தில் செய்து முடிப்பிர்கள். எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்தபடியே வந்துசேரும்.

சுக்கிரனும் புதனும் சுகஸ்தானத் தில் சஞ்சரிக்கிறார்கள். அதை பஞ்சம அஷ்டமாதிபதியான குரு வக்ரம் பெற்று, பார்க்கிறார். எனவே, பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி திடீர் முடிவுகள் எடுத்துச் செயற்படு வீர்கள். ஏழரைச்சனி விலகியதால் இனி எந்தக் கவலையும் இல்லை. வாழ்வை வளமாக்கும் விதத்தில் சஞ் சாரம் அமைகிறது. எனவே, தொழில் முன்னேற்றம், ஒப்பந்தங்களில் கை யெழுத்திடுதல், துணையாக இருப் பவர்களால் மேன்மை, துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டு செயற் பட்டு சாதனை படைப்பீர்கள். அஞ்சல் வழியில் ஆச்சரியப்படத்தக்க செய்தி வந்து சேரும். உச்சம்பெற்ற செவ் வாய் உங்களுக்கு இடம், பூமியால் இலாபத்தை வழங்கும் வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும்.

இதுபோல பூமிகாரகன் பலம் பெற்று இருக்கும் நேரத்தில் வாங்கிய பூமியை விற்கவோ, விற்ற பூமியை வாங்கவோ நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். சொந்த வீட்டை பழுது பார்க்க சகோதரர்கள் ஒத்துவரவில் லையே என்று நினைத்திருக்கலாம். ஆனால், ஆச்சரியப்படும் விதத்தில் சகோதரர்கள் தாமாகவே வந்து உங் களை அனுசரித்து செல்வது கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். புதிய தொழில் மாற்றங்கள் நிகழும் மாதமிது.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகி றார். 2,11 க்கு அதிபதியான புதன் 5 இல் சஞ்சரிக்கும்போது பிள்ளை களால் உதிரி வருமானம் கிடைக்கும். வேலைக்கு செல்லாமல் வீட்டிலே இருக்கும் பிள்ளைகள் உத்தியோகம் கிடைத்து மகிழ்ச்சி காண்பர். எனவே, உங்கள் வருமானத்தோடு அவர்கள் வருமானமும் வந்து இணைந்து தாராள மாக செலவிட்டு மகிழப்போகிறீர் கள். புத- ஆதித்ய யோகமும் இருப்ப தால் வளர்ச்சி அதிகரிக்கும். இந்த நேரத்தில் வங்கிகளில் வைப்பு நிதி உயரும். வருமானம் திருப்திதரும்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!**

ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். சுக்கிரன், சூரியன், புதன் 3ம் இணைந்து சஞ்சரிக்கும்பொழுது, இக்காலம் ஒரு பொற்காலமாகவே அமையும். நான்கு தினங்கள் மட்டுமே தனுசில் 3 கிரகங்கள் ஒன்றுகூடி இருந் தாலும் அதற்குள் நினைக்க இயலாத யோகத்தை கொடுக்கலாம். விலை உயர்ந்த பொருட்களை அல்லது சொத் துக்களை விற்பனை செய்து போது மான வருமானத்தை அடைய வழி வகுக்கும் நேரமிது. பிள்ளைகள் கல்வி நலன் கருதி கடல் தாண்டிச் செல்வ தற்கும் எதிர்பார்த்த இடத்தில் இருந்து சலுகைகள் கிடைக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 9 ஆம் திகதி புதன் மகர இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இந்தகாலம் கொஞ்சம் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டிய காலமா கும். இல்லத்தில் அமைதி குறையா மல் பார்த்துக்கொள்வது நல்லது. இந்தமாதம் சிவன்வழிபாடு சிறப் பினை தரும். வெள்ளிக்கிழமை திருப்பள்ளி எழுச்சிக்கு சென்றால் துள்ளி ஓடும் துயரங்கள்.

இந்த மாதம் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உற்சாகத் துடன் பணிபுரிவீர்கள். விட்டுப் போன திருமணப் பேச்சுக்கள் மீண்டும் வந்து முடியும். வீடு, வாக னம் பராமரிப்பில் ஒரு சிறு தொகையை செலவிட்டு மகிழ்வீர் கள். கணவன்- மனைவிக்குள் அந்நி யோன்யம் அதிகரிக்கும். பொது வாழ்வில் ஈடுபட்டு இருப்பவர்களு க்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். ஜனவரி 5,6,7 ஆம் திகதி களில் மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும்.

## வாழ்வு வளமான விதத்தில் அமையும் எனவே, இனி எந்தக் கவலையும் வேண்டாம்

## சிவல்புரி சிங்காரம்




உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

**குருபார்வையால் குழப்பங்கள் நீங்கும்!**

**சந்தோஷங்களை மட்டுமே சந்திக்க வேண்டும் என்று விரும்பும் கன்னி இராசி நேயர்களே!**

மார்கழி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை உங்கள் இராசியிலேயே பதிகிறது. இராசிநாதன் தனாதிபதி யும் ஒன்றாக இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர் கள். நிகழ்கால தேவைகள் அனைத் தும் பூர்த்தியாகும்.

குருவின் பார்வைக்கு பலம் அதிகம் உண்டு என்பதால் குடும்பத் தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். கொடிகட்டி பறந்த பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பிள்ளை களின் முன்னேற்றம் கருதி அவர் களுக்கு தேவையான கணினி, மடிக்கணினி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்கித்தர முன்வரு வீர்கள்.

அஷ்டமாதிபதி உச்சம் பெற்று இருப் பதால் வீட்டு பராமரிப்பு செலவும் உருவாகும். விலைக்கு வாங்கிய மனையை விற்றுவிட்டு புதிய மனை யில் வீடுகட்டி குடியேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். 2 ஆம் இடத்தில் சனி இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாமல் போகலாம். ஏழரை சனியின் ஆதிக்கம் இருப்பதால் அது பொங்கு சனியா? முதல்சுற்றா? மூன்றாவது சுற்றா? என்பதை கண்ட றிந்து வழிபாடுகள் மேற்கொள்ளுங் கள்.

சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கம் இருப்பதால் அதற்குரிய பரிகாரங்களை சர்ப்ப ஸ்தலங்களில் செய்து கொண் டால் சந்தோஷங்களை மாதம் முழு வதும் சந்திக்கலாம்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகி றார். இராசிநாதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். தாய் வழி ஆதரவு பெருகும். தக்கவிதத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏறபட்டு புதிய தொழில் தொடங்கும் திட்டங் களை நிறைவேற்றுவீர்கள். அரசியல் வாதிகளின் அனுகூலம் உண்டு. செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங் களை முடித்துக் கொடுப்பார்கள்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!**

ஜனவரி 5 ஆம் திகதி சுக்கிரன் தனுசு இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். 2,9 க்கு அதிபதி 4 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சகல யோகங்களும் வந்து சேரும். எதைத் தொட்டாலும் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை கள் அகலும். சென்ற மாதத்தில் நடை பெறாமல் இருந்த காரியங்கள் இப் போது துரிதமாக நடைபெறத் தொடங் கும். தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்துசேரும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 9 ஆம் திகதி மகர இராசி யில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இராசி நாதன் 5 இல் சஞ்சரிக்கும்போது யோகம்தான். பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்களை மாற்றிக் கொள்ளும் எண்ணம் மேலோங்கும். பிணிகள் அகன்று பெருமையுடன் உலா வரு வீர்கள். சனியோடு இணைந்த இராகு வும் சஞ்சலம் தீர்க்கும் குருவின் பார் வையும் இந்த நேரத்தில் உங்கள் எண்ணங்களை ஈடேற்றி வைக்கும். இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். எந்த ஒரு காரியமும் தடையின்றி நடைபெறும்.

இம்மாதம் இனிய மாதம்தான். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றிபெறுவீர்கள். சம்மதம் தெரிவித்துவிட்டு விலகிச் சென்ற ஒப்பந்தங்கள்கூட மீண்டும் வந்து சேரும். கணவன்- மனைவிக்கு இடையே பாசமும் நேசமும் அதி கரிக்கும். இல்லத்தில் நல்ல சம்பவங் கள் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஜனவரி 5,6,7,8 ஆகிய திகதிகளில் மறக்கமுடியாத சம்ப வம் ஒன்று நடைபெறலாம். இம் மாதம் சர்ப்ப சாந்தியை முறையாக செய்தால் சந்தோஷங்களை வரவ ழைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

## இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும் உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் தவறால் அறியப்படாத உண்மைகள்

ஒரு போரில் 50,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாக- காயப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல், பத்திரிகையாளர்களுக்கு, அனுமதி மறுக்கப்பட்ட ஒரு யுத்த களத்திலிருந்து கிடைத்திருப்பதாக ஐ.நா. சபை இன்று அறிவிக்கிறது என்று வைத்துக்கொண்டால், உலகம் அதைக் கவனித்திருக்காதா? படுகொலையைத் தடுக்க முனைந்திருக்காதா? இலங்கைப் போர் பற்றி 2009 ஆம் ஆண்டே ஐ.நா. அமைப்பிடம் இத்தகவல் இருந்தது என்பது இப்போது நமக்குத் தெரியும். ஆனால், அவர்கள் அதை அமுக்கிவிட்டார்கள். இப்போது ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் ஒரு உள் ஆய்வுக்கு உத்தரவிட்டதால் இத்தகவல் தெரிய வந்துள்ளது.

இலங்கை உள்நாட்டுப்போரில் ஐ.நா.வின் செயற்பாடு மோசமான தோல்வி, இனி மீண்டும் அப்படி நடக்கக் கூடாது என்று இந்த உள ஆய்வறிக்கையின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் உத்தரவின் பேரில் சால்ஸ்பெட்ரி தயாரித்த இந்த அறிக்கையின் முன்வரைவிலுள்ள தொகுப்புரையை ஐ.நா. நீக்கிவிட்டது. அப்பகுதி, ஐ.நா. பாதுகாப்புக் குழுவும் செயலகமும் ஐ.நா.வின் இலங்கைக் குழுவின் ஒத்துழைப்போடு படுகொலை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையை உரக்க அறிவித்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்குமென்று பலர் நம்புகிறார்கள் என்று கூறுகிறது.

ஐ.நா.வின் பன்னாட்டு ஊழியர்கள் இலங்கையில் பெரும்பான்மையான மக்களின் படுகொலைக்கு இலங்கை அரசுதான் காரணம் எனக் கூறிய போதும்கூட ஐ.நா. உயரதிகாரிகள் விடுதலைபப் புலிகளையே தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வந்தார்கள் என்பதை பெட்ரியினுடைய அறிக்கை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் பக்கச் சார்பு இலங்கைப் போர் குறித்த உலகளாவிய ஊடகங்களில் ஒரு பக்கச்சார்பான செய்திகள் வெளிவருவதற்கு காரணமாக அமைந்தது. ஏனெனில் இந்தச் சார்புநிலை மிகுந்த செல்வாக்கும் நம்பிக்கைக்குரியதுமான ஐ.நா.விலிருந்தே உருப்பெற்றது.

2009 மார்ச் 9 ஆம் திகதி தனது பணியாளர்கள் தயாரித்த மரணம் மற்றும் படுகாயம் அடைந்தவர்களின் பட்டியலையும் வெளியுறவுத் துறையினருக்கான செய்தி அறிவிப்பையும் ஐ.நா. வெளியிடவில்லை. அந்தச் செய்தி அறிவிப்பு, ஐ.நா. பதிவு செய்த கிட்டத்தட்ட அனைத்துப் பொதுமக்களின் படுகொலைக்கும் படுகாயங்களுக்கும் இராணுவத் தாக்குதல்களே காரணம் என்று குறிப்பிடுகிறது. மேலும் பொது மக்களின் பாதுகாப்புக்காக என்று அரசு வாக்களித்த பாதுகாப்பு வலையத்திற்கு உள்ளேதான் படுகொலைகளில் மூன்றில் இரண்டு பங்கு நடந்திருக்கிறது என்பதை ஐ.நா. அம்பலப்படுத்தத் தவறியது. இதற்கு மூன்று நாட்களுக்குப் பின்னர் இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிடம் பிரதிநிதி நீல் புஹ்னே மற்றும் துணைச் செயலாளர்கள் பலரும் அவர்கள் தயாரித்த படுகொலை, படுகாயம் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்த மறுத்து அவை சரி பார்க்கப்பட வேண்டியவை என்று கூறினார்கள். சார்லஸ் பெட்ரி தனது அறிக்கையில் இதை செய்தி அறிவிப்புக்களில் ஐ.நா. யதார்த்தத்தை எதிர்கொள்ள மறுத்தது என மழுப்பலாகக் குறிப்பிடுகிறார்.

ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் ஆணையர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் பற்றிப் பேச முனைந்தபோது பான் கி மூனின் மூத்த ஆலோசகர் விஜய் நம்பியார், நவநீதம்பிள்ளை அறிக்கையின் கடுமையைக் குறைக்க அவரைப் கட்டாயப்படுத்தினார் என்பதை இவ்வறிக்கையின் பின்னிணைப்புகளில் இணைக்கப்பட்டுள்ள அந்தரங்கச்செய்திப் பரிமாற்றங்களில் காண முடிகிறது. நவநீதம்பிள்ளையின் அறிக்கைகள் இலங்கை அரசையும் விடுதலைப்பூலிகளையும் ஒரேமட்டத்தில் வைத்துப் பார்ப்பதாகவும் விஜய் நம்பியார் புகார் கூறியுள்ளார். உண்மையில் அந்தக் காலகட்டத்தில் நவநீதம்பிள்ளை தன் அறிக்கையில் குறிப்பிட்ட படுகொலை, படுகாயங்களின் எண்ணிக்கை குறைந்த மதிப்பீடுதான் என்பது ஐ.நா.விக்கே தெரியும். அதேகாலகட்டம் பற்றி சார்லஸ் பெட்ரி அறிக்கை தற்போது குறிப்பிடும் எண்ணிக்கை, அப்போது நவநீதம்பிள்ளையின் அறிக்கை குறிப்பிட்ட எண்ணிக்கையைவிட மிக அதிகம். அதாவது படுகொலை செய்யப்பட்டவர்களின எண்ணிக்கை 5,687. படுகாயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 10,067.

இந்த எண்ணிக்கை போர்ப்பிராந்தியத்தில் பணியாற்றிய பாதிரியார்கள், தமிழ் மருத்துவர்கள், நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அங்கிருந்த ஐ.நா. பணியாளர்களால் சேகரிக்கப்பட்டவை. எல்லாச் சுதந்திர பார்வையாளர்களுக்கும் போர்ப்பிராந்தியத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. எனவே, சில ஊக்கமுள்ள ஐ.நா. பணியாளர்கள் தொலைதூரத் தகவல் சேகரிப்புக் குழுவை உருவாக்கிக் கொழும்பிலிருந்தவாறே எல்லாச் செய்திகளையும் உறுதிப்படுத்தி வந்தார்கள். அவர்கள் தயாரித்த படுகொலை, படுகாயம் அடைந்தவர்கள் பட்டியல் என்பது மூன்று வெவ்வேறு நபர்களிடமிருந்து வந்த தகவல்களை உறுதிப்படுத்தித் தொகுக்கப்பட்டது. பெட்ரி அறிக்கை, இது மிகச் சிறந்த செயல்முறையைக் கொண்ட அருமையான நடைமுறை என்று கூறுகிறது. இந்த வழிமுறையில்தான் ஏப்ரல்வரை எட்டாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை ஐ.நா. உறுதிப்படுத்திக் கொண்டது. அதன்பின்னர் கடுமையான தாக்குதல்களுக்கிடையில் பதுங்கு குழிகளுக்கு வெளியே வந்து தகவல்களை உறுதிப்படுத்துவது சாத்தியமற்றதாகிவிட்டது.

ஐ.நா. பணியாளர்கள் தயாரித்த படுகொலை செய்யப்பட்டவர்கள், படுகாயங்கள் அடைந்தவர்கள் எண்ணிக்கையை போர்ப்பிராந்தியங்களில் பணியாற்றிய அனுபவம் கொண்ட ஐ.நா. தூதர்களே ஏற்க மறுத்து அவற்றின் நம்பகத் தன்மையைத் தொடர்ந்து கேள்விக்குட்படுத்தினார்கள் என்பதை இவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. சிரியாவிலோ ஆப்கானிஸ்தானிலோ குறிப்பிடப்பட்ட படுகொலை எண்ணிக்கை சேகரிக்கப்பட்ட முறையைவிட இந்தத் தகவல்கள் அதிக கவனத்துடன் சரிபார்த்துத் தயாரிக்கப்பட்டவை என்பது கணக்கில் கொள்ளப்படவில்லை. அத்தோடு தொடர்ந்து இலங்கைப் போர் பற்றிய அதிகாரபூர்மான ஆவணங்களில் ஐ.நா. குறிப்பிடும் 1,00,000 மரணங்கள் என்ற எண்ணிக்கையும் கணக்கிலெடுக்கப்படவில்லை. பெட்ரி அறிக்கையின் பின்னிணைப்புகளில் படுகொலை, படுகாயம் பற்றி அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் புதைந்து கிடக்கின்றன.

2009 இல் களத்திலிருந்த ஐ.நா.வின் தகவலாளர்கள் 17,810 பேர் கொல்லப்பட்டதாகவும் 36,905 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் கொடுத்துள்ளனர். ஐ.நா.குழு இந்த எண்ணிக்கையைப் பாதிவரை சரிபார்த்ததில் இந்த எண்ணிக்கை குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தார்கள். இந்தப் படுகொலையின் அதிர்ச்சியளிக்கும் எண்ணிக்கை அன்றே அம்பலப்பட்டிருந்தால் உலக சமுதாயம் இலங்கை அரசை கண்டித்திருக்கும். பல மரணங்களையும் போருக்குப் பிந்தைய அத்துமீறல்களையும் நிச்சயம் தவிர்த்திருக்க முடியும். பின்னர் ஒரு ஐ.நா. அறிக்கை 40,000 பேர்வரை கொல்லப்பட்டார்கள் என்னும் தகவல் நம்பகத்தன்மை கொண்டதுதான் என்று கூறுகிறது. பெட்ரியின் அறிக்கை இந்த எண்ணிக்கையையும் தாண்டிக் கடைசி ஐந்து மாதங்களில் 70,000 பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறது.

போர்ச் சூழலில் வாழ்ந்த மக்கள் தாக்குதல்களின் இடைவெளியில் வலுவற்ற பாதுகாப்பு அரண்களிலிருந்து வெளியேறிச் சிதறிக்கிடக்கும் உடற்பாகங்களை நாய்கள் தின்பதற்கு முன்னர் தேடிப்பிடித்துப் புதைத்தார்கள். குடும்பங்கள் விரக்தியின் உச்சத்தில் அனைவரும் ஒட்டுமொத்தமாக விரைவில் சாகடிக்கப்பட வேண்டும் என வேண்டிக் கொண்டனர். அன்பான பெற்றோர்கள், தப்பிப்பிழைப்பதற்கு எந்த வாய்ப்புமில்லை என்று தோன்றியதால் குழந்தைகளுடன் மொத்தமாகத் தற்கொலை செய்ய எண்ணினார்கள். மே 2009 வாக்கில் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் கைவிட்டு விட்டு ஓடினார்கள். துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து தப்பிப்பிழைக்க பிணங்களை மிதித்தும், தாண்டியும் ஓடினார்கள். யுத்தளகளத்திலிருந்து அவர்கள் தப்பியதும் ஐ.நா. பணத்தில் கட்டப்பட்ட தரமற்ற இடைக்கால முகாம்களில் கைதுசெய்து அடைக்கப்பட்டார்கள்.

நடந்துபோன பிழைகளை ஐ.நா. இப்போது நேர்செய்ய விரும்பினால் பான் கி மூன் ஒரு பன்னாட்டு ஆய்வுக்குழுவை அமைத்து இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும். கடந்த ஆண்டு அவர் நியமித்த ஒரு நிபுணர் குழுவின் பரிந்துரை இதுவாகவே இருந்தது. ஆனால், போதுமான அளவு உலக நாடுகளின் ஆதரவு இல்லாததால் அதைச் செயற்படுத்த பான் கி மூன் தயங்கிவிட்டார். இந்த உள் ஆய்விலிருந்து நமக்குத் தெரிய வருவது, இதைச் செயற்படுத்த அவருக்கு அதிகாரம் உண்டென்று அவருடைய சட்டப் பிரிவே அவரிடம் அறிவுறுத்தியிருந்தும் அவர் பின் வாங்கியிருக்கிறார். இந்த உள் ஆய்வறிக்கை வெளியே கசிந்த பிறகு இலங்கை விடயத்தில் நார் நாராக கிழிந்துகிடக்கும் ஐ.நா.வின் நம்பகத் தன்மையை மீட்டெடுக்க இலங்கை அரசின் போர்க்குற்றங்களை விசாரிப்பது அவசியமான நடவடிக்கையாகவே, கருதப்படுகிறது. பலியானவர்களின் பல்லாயிரம் குடும்பங்களுக்குக் குறைந்த பட்சப் பரிகாரமாக பான் கி மூன் இதைச் செய்தாக வேண்டும்.

**பிரான்ஸெஸ் ஹாரிசன் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாவின் தற்போதைய நிலை குறித்து கவனம் செலுத்தப்படுகிறது

## கனேடிய எம்.பி. கயில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை நிலைமைகள் குறித்து குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கயில் சீபாக் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டமை கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை போன்றவற்றின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள், தொடர்ச்சியான கைதுகள் போன்றன இடம்பெற்று வருவதாகவும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைதியானஜனநாயகவழிமுறைகளில் நடத்தப்படும் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் கோருவதாகக் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# எல்லைமீறி மீன்பிடிப்பதே வாழ்வாதாரத்துக்கு கேடு

## தென்னிந்திய மீனவர்களை சாடுகிறார் கோத்தா

ஒரு நாட்டின் எல்லையை மீறிப் போய் மீன் பிடித்தல் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு கேடாகவும் கடற்றொழில் செய்யும் சமூகத்தினரிடையே பதற்றத்தை தோற்றுவிப்பதாகவும் உள்ளது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தென்னந்தியாவிலிருந்து பெருந் தொகையான மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடலில் மீன்பிடிக்க வருவது இலங்கை - இந்திய அரசாங்கங்கள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவது காலி சம்பாசனையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு அரசாங்கங்களும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஆனால், இன்னும் இந்த பிரச்சினை தொடர்ந்து காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தில் இதன் தாக்கம் பெரிதாக உள்ளது. அவர்கள் பலகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அடக்குமுறையின் கீழ் இருந்து இப்போது தான் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பத்தொடங்கியுள்ளனர் என்றார். (அ-2)

# மாற்றுவலுவுடையோருக்கான மாவட்ட சுய உதவி குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

மாற்று ஆற்றலுடையோருக்கான மாவட்ட சுய உதவிக்குழு தெரிவு தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்ரிலால் பெர்னாண்டோ, FRIDSRO நிறுவன பணிப்பாளர் ஆகியோரும் சமூக சேவைகள் உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதேச மட்ட மாற்று ஆற்றலுடையோருக்கான சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாற்று ஆற்றலுடையோரின் சுய உதவிக்குழுவினரிடையே இருந்து மாற்று ஆற்றலுடையோருக்கான மாவட்ட சுய உதவிக்குழுவின் தலைவராக வி. குருபகராசா, உப தலைவராக ஏ.றங்கடம்பநாதன், செயலாளராக நடராஜா விஜயலட்சுமி, உப செயலாளராக சி.அன்ரனி குயின், பொருளாளராக மோ. நந்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9)

# ஷிராணி விவகாரம் தொடர்பில் கமலேஷ் சர்மா பீரிஸுடன் பேச்சு

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எஸ். பீரிஸிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொலைபேசி மூலம் கமலேஷ் சர்மா வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அவர் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் அதிகாரங்கள் சீரான முறையில் பேணப்பட வேண்டும் என்பது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கோட்பாடுகள், கொள்கைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பில் இருவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. (அ-2)




★ 1431-இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடிசூடினான்.

★ 1491-வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.

★ 1598-கொரிய ஜப்பானிக் கடற்படைகளுக்கிடையே இடம்பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.

★ 1653-சேர்ஒலிவர் குறொம்வெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.

★ 1707-ஜப்பானின் ஃபூஜி மலை கடைசித் தடவையாக வெடித்தது.

★ 1773-அமெரிக்கப் புரட்சி பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம் அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.

★ 1835-நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற பெருந்தீயில் 530 கட்டடங்கள் சேதடைந்தன.

★ 1920-சீனாவில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டத்தில் சுமார் 2 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1922-போலந்து அரசுத் தலைவர் கேப்ரியல் நருடோவிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1925-இலங்கை வானொலியின் சேவை கொழும்பில் ஆரம்பம்.

★ 1941- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.

★ 1971-வங்களாதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்து போர் முடிவுக்கு வந்தது.

★ 1971-பஹ்ரேன் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1991- கசகஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1770-லுடுவிக் ஃவான் பேத்தோவன் , ஜேர்மனிய மேற்கத்தேய இசை இயற்றுநர் (இ.1827)

★ 1866-வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (இ.1944)


★ 1917-ஆர்தர் சி. கிளார்க், ஆங்கில எழுத்தாளர் (இ.2008)

### இறப்புக்கள்

1916-கிரிகோறி ரஸ்புட்டீன் ரஷ்ய மதகுரு (பி.1869)

1999-ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்

### ஆர்தர் சி.கிளார்க்



சர் ஆர்தர் சார்ல்ஸ் கிளார்க் பிரித்தானிய அறிவியல் புதின எழுத்தாளரும் கண்டுபிடிப் படிப்பாளரும் ஆவார். ஏறத்தாழ 100 புத்தகங்களுக்கு ஆசிரியரான இவர் அறிவியல் பூர்வமான ஆதாரத்தையும் அறிவியல் கோட்பாட்டையுமே தமது எழுத்துத்துறைக்கு அதிகளவு பயன்படுத்தியவர். நம் உலகத்தின் எல்லைகளுக்கு அப்பாலும் மனிதனின் தலைவிதி பரந்துள்ளது என்ற தொலைநோக்கக் கருத்தை வலுவாக முன்னிறுத்தியவர்.

#### வாழ்க்கைக் குறிப்பு

கிளார்க் இங்கிலாந்தில் சொமர்செட் என்ற இடத்தில் 1917 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி பிறந்தார். அவரது தந்தை ஒரு உழவர். தாய் அஞ்சல் நிலையத்தில் தந்தி அனுப்புநராகப் பணியாற்றினார். நான்கு குழந்தைகளில் மூத்தவரான கிளார்க் அருகில் உள்ள டாண்டன் (Taunton) நகர உயர் நிலைப்பள்ளியில் புலமைப்பரிசில் (கல்வித்திறமைப் பரிசில்) பெற்ற மாணவனாகக் கல்வி பயின்றார்.

முதலாம் உலகப் போரில் படுகாயமடைந்திருந்த தன் தந்தையை தனது 13 ஆவது வயதில் கிளார்க் இழந்தார். சிறு வயதிலேயே வானியலில் ஈடுபாடு கொண்ட ஆர்தர் பழைய அமெரிக்க அறிவியல் புதின நூல்களைப் படிப்பது வழக்கம்.

#### பணிகள்

இவர் தனது 17 ஆவது அகவையிலேயே பிரித்தானியாவில் கோள்களியல் கழகத்தில் சேர்ந்தார். பின்னாளில் இதன் பொருளாளராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

#### இலங்கைக்கு புலம்பெயர்வு

தன் கற்பனைக்கும் சிந்தனைக்கும் எழுதுவதற்கும் ஏற்ற அமைதியான இடமாக கொழும்பு நகரைத் தேர்ந்தெடுத்தார். 1956 ஆம் ஆண்டில் இலங்கையில் குடியேறி அங்கிருந்து தனது எழுத்துக்களையும் ஆய்வுகளையும் தொடர்ந்தார். அங்கு அவர் இறக்கும் வரை ஏறக்குறைய 45 ஆண்டு காலம் வாழ்ந்தார்.

#### சிறப்பு

1998 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் இரண்டாம் எலிசபெத் அரசியால் நைட் பட்டம் பெற்றார். 2000 ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வருகை தந்த போது இப்பெருந்தகைக்கு சர் பட்டம் அளித்துச் சிறப்பித்தார். இலங்கை அரசின் மிக உயரிய விருதான ஸ்ரீ லங்காபிமன்யா என்ற விருது 2005 ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

#### மறைவு

2007 டிசெம்பர் 16 ஆம் நாள் தனது கடைசி பிறந்த நாளைக் கொண்டாடிய இவர் தனது மூன்று விருப்பங்களை வெளியிட்டார். அதில் ஒன்றாக இலங்கையில் நீடித்து நிலைக்கக் கூடிய அமைதி திரும்ப வேண்டும் என்பதே தனது விருப்பம் என்று தெரிவித்திருந்தார். 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி காலை அவர் கொழும்பில் உயிர் துறந்தபோது அவருக்கு வயது 90 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ம மனிதனின் துப்பாக்கி சூட்டில் 27 பேர் ஸ்தலத்தில் பலி



அமெரிக்காவில் ஆரம்ப பாட சாலை ஒன்றிற்குள் நுழைந்த இனந் தெரியாத மர்மமனிதன் மேற் கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 18 மாணவர்கள் உட்பட 27 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் கனெக்மகட் நகரில் உள்ள சான்டி ஹக் ஆரம் பப் பாடசாலையிலேயே இச்சம்ப வம் நேற்று முன்தினம் இடம்பெற் றுள்ளது.

குறித்த பாட சாலை வகுப் பறைக்குள் முகத்தைமூடிக் கொண்டு இரண்டு துப் பாக்கிகளு டன் புகுந்த மர்ம மனி தன் சரமாரியாக துப் பாக்கி சூடு நடத்தினான்.

இதனால் ஆசிரியர்க ளும் மாண வர்களும் பீதி யில் உறைந்தனர். காப்பாற்ற முடி ந்த மாணவர்களை ஆசிரிய ர்கள் காப்பாற்றினர். எனினும் துப்பாக்கி பிரயோக த்தில் 18 மாணவர்கள் உட் பட 27 பேர் கொல்லப்பட் டனர். 5 வயது முதல் 10 வயது வரையிலான மாணவர்கள் பயிலும் பாடசாலை யிலேயே இந்த துப்பாக்கி பிரயோ கம் இடம்பெற்றது.

தகவல் அறிந்த பொலிஸார் பாட சாலைக்குள் விரைந்தனர். இத னையறிந்த மர்ம மனிதன் பாட சாலை வளாகத்திலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளான். எனி னும் பொலிஸாரின் துப்பாக்கி பிர யோகத்தில் அவன் கொல்லப்பட்டான்.

சம்பவம் அறிந்த பெற்றோர் பாடசாலைக்குள் வந்தமையினால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதயத்தை சுக்குநூறாக உடைத்து விட்டது.

சம்பவத்தையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விடுத்துள்ள இர ங்கல் செய்தியில், இந்த சம்பவம் மிகவும் மோசமானது. உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறு தல் கூற வார்த்தைகள் இல்லை. குழந்தைகள் பலியான சம்பவம் தனது இதயத்தை சுக்குநூறாக உடைத்து விட்டதாக தெரிவித்துள் ளார். (அ-2)

# குழந்தைகள் மீது துப்பாக்கிச்சூடு; 22 குழந்தைகள் துடித்து மடிந்தனர்

## சீனாவில் துயரம்



பாடசாலைக்குச் சென்று கொண் டிருந்த குழந்தைகளை வாலிபர் ஒருவர் சரமாரியாக தாக்கியதில் 22 குழந்தைகள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்தனர்.

மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்திற்கு உட்பட்ட சென் பெங் கிராமத்தில் ஆரம்பப்பாட சாலை ஒன்று உள்ளது.

வழக்கம்போல் நேற்று முன் தினம் காலை மாணவ மாணவிகள் சென்று கொண்டிருந்தனர். அப் போது பாடசாலை நுழைவாயில் அருகே நின்றுகொண்டிருந்த வாலி பர் ஒருவர் குழந்தைகளை கண் மூடித்தனமாக தாக்கத் தொடங்கி னார்.

இதில் படுகாயமடைந்த 22 குழ ந்தைகள் இரத்தம் சொட்டச்சொட்ட கதறி துடித்தனர். அதன் பின் காய மடைந்த குழந்தைகள் அனைவ ரும் உடனடியாக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 2குழந்தைகள் உயி ருக்கு ஆபத்தான நிலையில் வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். கத்தியுடன் இருந்த அந்த வாலி பரை பள்ளி காவலாளிகள் மடக் கிப்பிடித்து பொலிசாரிடம் ஒப்ப டைத்தனர். (அ-2)

# பலியான குழந்தைகளுக்காக கண்ணீர் விட்டார் பராக் ஒபாமா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பாடசாலை சென்ற மாணவர்களை மர்மநபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் 20 குழந்தைகள் உட்பட 27 பேர் உயி ரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தினால் அதிர் ச்சியடைந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை வரை தேசியக் கொடி களை அரைக்கம்பத்தில் பறக்க விட வேண்டும் என்று உத்தரவிட்டுள் ளார்.

இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் இறந்த குழந்தைகளு க்கு அஞ்சலி செலுத்தும் விதமாக வும் அவர் உரையாற்றினார். தனது பேச்சுக்கு இடையில் நான்கைந்து முறை நாதழுதழுக்க பேச முடியா மல் தடுமாறிய ஒபாமா கண்களில் பெருக்கெடுத்த கண்ணீரை கட்டுப் படுத்த முயற்சித்தார். எனினும் ஓரிரு முறை விழிகளின் ஓரம் வழிந்த கண்ணீரை விரல்களால் துடைத்த படி ஒபாமா பேசினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ் த்துகையில்,

நமது இதயங்கள் நொறுங்கிப் போய் உள்ளன. இச்சம்பவத்தில் தங்கள் குழந்தைகளை பறிகொடுத்த பெற்றோருக்கு தேசத்தின் சார்பில் நமது ஆழ்ந்த இரங்கலை கன்னெ டிக்கட் மாகாண ஆளுநரின் மூல மாக நான் தெரிவித்துள்ளேன்.

இந்த கொடிய குற்றச்சம்பவம் குறித்த விசாரணையில் மாகாண ஆளுநருக்கு தேவையான எத்த கைய ஒத்துழைப்பையும் வழங் கவும் பலியான குழந்தைகளின் பெற்றோர்களுக்கு நிவாரணம் வழ ங்கவும் அரசு தயாராகவுள்ளது.

இதுபோன்ற கொடிய சம்பவங் கள் நடந்த போதெல்லாம் நான் இந்நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அல்லாமல் ஒரு குழந் தையின் பெற்றோர் என்ற மன நிலையில் வேதனையடைந்துள் ளேன்.

இன்றும் அதே வேதனையை நான் மிக அதிகமாக உணர்கின் றேன். இன்றைய சம்பவத்தில் 5 முதல் 10 வயதுக்குட்பட்ட அழகான சின்னஞ்சிறு, மழலைகளை நாம் இழந்துள்ளோம். அவர்களுக்கெ ன்று ஒரு வாழ்க்கை காத்திருந்தது.

பிறந்தநாள், பட்டமளிப்பு விழா, திருமணம், குழந்தைகள் என அவர் களுக்காக வாழ்வின் சில இனிய தருணங்கள் காத்திருந்தது. இவற்றில் எதையுமே சந்திக்காமல் இந்த கொடூர சம்பவத்தில் பலியாகிவிட்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல் கூற முடியாமல் நமது இதயங்கள் நொறு ங்கிப் போய் கிடக்கின்றன.

நமது ஆறுதல் மொழிகளால் தங்கள் குழந்தைகளை பறிகொடு த்துவிட்டு நிற்கும் பெற்றோர்களின் வலியையும் சோகத்தையும் நம் மால் குறைத்துவிட முடியாது.

நாம் அனைவரும் ஒன்றிணை ந்து இதைப்போன்ற துயரச் சம்பவங் கள்நிகழாவண்ணம்தடுக்கவேண்டும். இந்த விடயத்தில் அரசியல் பார்க்கா மல்அமெரிக்கர்களாக ஒன்றுபட்டுநாம் செயலாற்ற வேண்டும் என்றார்.


### துப்பாக்கி சூட்டுக்கு காரணம்

இதேவேளை, அமெரிக்க பாடசா லையில் 20 குழந்தைகள் உட்பட 28 பேரை சுட்டுக் கொன்றது ஏன் என்பது குறித்து புதிய தகவல் வெளி யாகியுள்ளது.

அமெரிக்காவின் கானிக்டிகட் பகுதியில் உள்ள சான்டி பாடசாலை யில் ஆசிரியராக பணியாற்றி வந்த நான்சி லேன்சா இவரது மகன் ஆடம் லேன்சா (வயது 20) ஆவார்.

இவனுக்குதனதுதாய்மீதுகோபம் இருந்த காரணத்தினால் அவரை தீர்த்துக் கட்டும் ஆவேசத்துடன் முக மூடி கொண்ட கறுப்பு உடைகளை அணிந்து கொண்டான்.

தனது தாயுடனேயே பள்ளிக்கு



சென்றுள்ளான். காரின் உள்ளே ஒரு துப்பாக்கி, தனது உடைக்குள் 2 துப்பாக்கிகள் என 3 துப்பாக்கி களை தன்னுடன் கொண்டு சென்ற அவன் முதலில் தனது தாயாரை சுட்டுக் கொன்றான்.

பின்னர் ஆவேசமடைந்து பாட சாலைக் குழந்தைகளை துப்பாக்கி யால் சுட்டு சாய்த்தான். அதன் பின் னரும் கொலைவெறி தணியாமல் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண் டிருந்த ஆசிரியர்களையும் கண் மூடித்தனமாக சுட்டுக் கொன்றான் என ஒரு தகவல் தெரிவிக்கிறது.

இதற்கிடையே மற்றொரு செய்தி நிறுவனம் தகவல் கூறுகையில்,

தனது தாயாரை அவர் வீட்டில் வைத்து முகத்தில் சுட்டுக் கொன்ற பின்னர்தான் பள்ளிக்குள் நுழை ந்து தாக்குதல் நடத்தினார் என தெரி விக்கின்றது.

இந்த துப்பாக்கி சூட்டில் 2 பேர் ஈடுபட்டிருக்க கூடும் என்றும் பொலி ஸார் சந்தேகிக்கின்றனர். இது தொட ர்பாக ஆடம் லேன்சாவின் அண் ணன் தியான் லேன்சாவிடம் பொலி ஸார்விசாரணை நடத்திவருகின்றனர்.

27 பேரை சுட்டுக்கொன்று விட்டு தன்னைத்தானே சுட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொண்ட ஆடம் லேன்சா சமீபகாலமாக மனநிலை பாதித்தவன் போல் இருந்தான் என அவரது அண்ணன் தியான் லேன்சா பொலிஸாரிடம் தெரிவித் தார். (அ-2)




# துருக்கிக்கு ஆதரவாக அமெ.படை விரைகிறது

சிரிய தாக்குதல் மிரட்டலை தொடர்ந்து துருக்கிக்கு ஆதரவாக அமெரிக்க படை விரைந்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்திற்கு எதிராக கடந்த 2 ஆண் டுகளாக பொதுமக்கள் போராடி வரு கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக புரட்சி படையினர் இராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர். இவர்களு க்கு துருக்கி ஆதரவளிக்கிறது. சிரியா அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கிறது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள சிரியா ஸ்கட் ஏவுகணைகள் மூலம் துருக்கி மீது தாக்குதல் நடத்தி வருகி றது.

இந்த நிலைமையை சமாளிக்க துருக்கிக்கு அதன் நட்பு நாடான அமெரிக்கா ஆதரவு கரம் நீட்டியுள் ளது. அதன் எதிரொலியாக அமெரி க்க படைகள் துருக்கி நாட்டுக்கு விரை ந்துள்ளன. அதற்கான உத்தர வில் அமெரிக்க இராணுவ மந்திரி லியான் பெனோட்டா கையெழுத்திட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ் தானில் முகாமிட்டுள்ள 400 அமெ ரிக்க வீரர்கள் துருக்கி செல்கின்ற னர். இவை தவிர 2 கம்பனி பேட்ரி யாட் ஏவுகணைகளும் துருக்கிக்கு வழங்கப்படுகிறது.

இந்த ஏவுகணை சிரியா ஏவும் ஸ்கட் ஏவுகணையை தடுத்து தாக்கி அழிக்கவல்ல சக்தி படைத்தது. எனவே துருக்கி செல்லும் அமெ ரிக்க வீரர்கள் பேட்ரியாட் ஏவுகணை களை செலுத்தும் பணியில் ஈடுபடு த்தப்படுவார்கள். (அ-2)



ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் உள்ள கிரம்ளின் மாளிகை யில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிரேசில் ஜனாதிபதி திலமா ருசெப் ஆகியோர் கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.

# கலிபோர்னியாவில் கடும் நிலநடுக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள தென்மேற்கு கடலோர பகுதியில் நேற்றையதினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கம் 6.1 ஆக பதிவாகியுள்ளது. கலிபோர்னியா நகரில் இருந்து 142 கிலோமீற்றர் தொலைவிலும் 11 கிலோமீற்றர் ஆழத்திலும் ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## கண்ணீர்

காலம் கடந்து விட்டது
கண்கள் கலங்கி விட்டன
கண்ணெதிரே சம்பவங்கள்
கண்களில் தெரிகின்றன
ஆதரவில்லாமல் தவிக்கின்றோம்
அநாதையாக்கப்பட்டு நிற்கின்றோம்
அரவணைக்க அன்னையும் இல்லையே
அன்புகாட்ட சொந்தமும் இல்லையே
பசி என்னும் வலையில்
சிக்கி தவிக்கின்றோம் - எம்
கண்ணீரை துடைக்க
யார் வருவார்?

த.சசிறேக்கா
கந்தர்மடம்

## இமயம் தொட...

உன் நெஞ்சின் முன் நிற்கும்
எதிரிகளை விட
பின்னால் உள்ள எதிரிகளை
இனம் கண்டு கொள்
தோள்மேல் கை வைத்து
முதுகில் வேல் பாய்ச்சும்
பச்சோந்திகளைப் புரிந்துகொள்
இயல்பாயிரு
ஏமாளியாகிடாதே
பொறுமைகொள்
சோம்பேறியாகிடாதே!

மாவை. நா. கஜேந்திரன்

## எல்லையில்லா இன்பம்

எத்தனை இன்பங்கள் பூமியிலே - உயர்
வித்தென விளைவதை சேமியுங்கள்
சித்தனைப்போல் உங்கள் வாழ்விருந்தால்
அத்தனை பேருக்கும் சாமி நீங்கள்
இல்லாத இன்பமா உன் வீட்டினிலே
பொல்லாத துன்பம்தான் நோட்டினிலே
பொல்லாத துன்பங்கள் செல்லாத காசாகும்
மெல்ல உன் புன்னகை மேல் படரும் தூசாகும்
எதிர்பார்ப்பைக் குறைத்தாலே துன்பம் இல்லை
எதிலுமே அளவிருந்தால் இன்பம் எல்லை
இருப்பதில் திருப்திதான் இன்பத்தின் இரகசியம் - இதை
வெறுப்பதில் பயனில்லை முயன்றிடு அவசியம்
சமநிலம் விட்டு மலையேறுங்கள்
சரியாகத் தெரியும் மலை பாருங்கள்
துன்பத்தை விட்டு கரையேறுங்கள்- பிறர்
இன்பத்திற்கான கலங்கரையாகுங்கள்

ஆர்.ஜே.பிரகலாதன்
உடுவில்

## சதா சாகும் சிநேகம்

தோழா!
உயர்த்தக் கைகள்...
இருந்திருப்பின்,
அன்று நீ
உயிர் பிழைத்திருப்பாய்,
என்னைப்போல்
பட்டகாலிலா படும்...?
நான் சாணக்கியன்
அல்ல
வெறும் சராசரி மனிதன்
உன்னுள் என்ன நினைத்தாயோ?
அப்போது,
என்னை எதுவும்
நினைக்கத்தூண்டவில்லை
இப்போது நினைக்கிறேன்,
உன்னை நான்,
துரோகித்தாயும் நீ
நினைத்திருக்கக்கூடும்
அப்படியல்ல தோழா!
என் உயிர்பற்று
உன்னை உதாசீனப்படுத்திற்று
பிழைத்துவிட்டேன் தான்...
நிதமும் செத்துப் போகிறேன்
அந்த நாள் நினைவில்...!

கவிஞர் சு.க. சிந்துதாசன்

## காதலே பாவம்

அன்பே!
என் வீட்டில் இருக்கும் நாட்களைவிட
உன்னைச் சந்திக்க வந்த நாட்கள்தான் அதிகம்
என் தாய் மீது காட்டிய அன்பை விட
உன்மீது காட்டிய அன்புதான் அதிகம்
என் பெயரை உச்சரிச்ச நாட்களைவிட
உன் பெயரை உச்சரிச்ச நாட்கள்தான் அதிகம்
என் இதயம் எனக்காகத் துடித்த நாட்களைவிட
உனக்காகத்தான் அதிகம் துடிக்கும்
ஆனால் நீ அத்தனையும் மறந்து
ஒரு நிமிடத்தில் ஒரு ஆண்பின்
சென்று விட்டாயே???

மோ.பதிமரூபன்
அல்வாயி

## தாய்மையின் மேன்மை

கருவில் தோன்றி பிறப்புரிமை குறைபாடின்றி
சிறப்புடன் சிற்பமாய் செதுக்கிய உன் தாயின்
தாய்மையின் மேன்மைக்கு வித்திட்ட கடவுளை
மொழி தெரியா பாலகனாய் தவழ்வதால்
உன் அழுகுரலில் செப்புகிறாயோ?
நீ வாழ விரும்புவது பலகோடி நாளாயினும்
அதில் அன்னையின் இதயத்தில் வாழ்வது
நாவால் சொல்லமுடியா அவள் ஆயுள்வரை...
எனவே இன்றே நீ இறந்தாலும் உன்
தாயை நீடூழி வாழ வாழ்த்து- அவளுள்
நீயும் வாழ்வாய்

சி.சிவதர்சினி

# மௌனத்தின் தேடல் - 134



## உறங்க மறுக்கிறது

உதிரத்தின் உறவுகளே
ஊர் இழந்து உறவிழந்து
உருக்குலைந்து நிற்கின்றீர்
உறங்க மறுக்கிறது உம்
நினைவில் எம் விழிகள்
ஓ உன்று கதறியழ
உமைப்போல் முடியாது
ஊமையாய் அழுகின்றோம்

திருமதி சந்திரன்தேவி
மானிப்பாய்

## கேள்விக்கென்ன பதில்

பால்குடி மறவாத இச்சின்னஞ்சிறு
பாலகருக்கு நேர்ந்த கதி என்ன?
அரவணைத்து அமுதப்பாலூட்டிய
அன்னை எங்கே?
தன்மானத்தோடு தன்பிள்ளை காத்த
தந்தை எங்கே?
கானகத்தே அநாதைகளாய் பசிகிடந்து
தவிர்க்க இவர்கள் செய்த தவறுஎன்ன?
இது திட்டமிட்ட சதியா விதியா?
அநீதிக்கு அழிவில்லையோ இறைவா
பதில் சொல்லு?

த.தனுசன்
கணுக்கேணி

## இரக்கமில்லா உலகம்

எலும்பும் தோலுமான உன்
தோற்றம் பார்த்தும்கூட
இரக்கம் வரவில்லையா- இந்த
மனிதகுலத்திற்கு
யார் செய்த பாவமோ
தெரியவில்லை - நீ
இன்று இப்படி அநாதையாய்
கிடந்து கதறுகிறாய்

பொன்ராசா
இளவரசி

## காணிக்கை

வீதியோரத்தில்
விளையாடும் வயதில்
கண்ணீரை
காணிக்கையாக்கி
பாத்திரம் ஏந்தி
பிச்சை எடுக்கும்
பாலகர்கள் செய்த
குற்றம் தான் என்னவோ...?

ம.வினோத்
வதிரி

## வறுமையின் வரிகள்

அன்பு கொள்ள
ஆதரவின்றி
வீதியோரத்தில்
வயிற்றுப் பசிக்காக
வறுமையின் வரிகளை...
உடல்தாங்கி அழும்
பிஞ்சு உள்ளங்களின்
துயர் நீக்க யார்தான்
வருவாரோ...

பா.அக்ஷி
உடுப்பிட்டி

## ஆத்மாவின் ஏக்கம்

யுத்தத்தில் மடிந்ததடா
என் உயிர்
உன் சத்தத்தால் பதறுதடா
என் உள்ளம்
உன் கண்ணீரை துடைக்க
ஏங்குதடா என் கைகள்
ஆனால் என்னால் தழுவிட
முடியாது மகனே

சி.வசந்தா
[illegible]

## யார் கையில்

நாளைய உலகம்
உங்கள் கையில் என்று
ஓலமிடும் பெரியோர்களே
காக்கும் கரங்களே
இந்தக் குழந்தைகளின் அழுகை
உங்கள் காதில் விழவில்லையா
இவர்கள் வாழ்க்கை
யார் கையில்?

அ.நோபேட்
குருநகர்

## விதி

வாழ்க்கை என்றால்
இன்பம் பாதி துன்பம் பாதி
அதற்கு பிஞ்சுகளின் வாழ்வும்
விதிவிலக்கில்லையா?
பட்டினியால் துடிக்கும்
பாசப்பிணைப்புக்களின் வாழ்வும்
பிரகாசிக்கும் காலம் வந்திடாதா...?

த.தேனுஜா
புளியங்கூடல்

## இல்லையா???

பாத்திரத்தில்
உணவில்லை
பகுத்தறிந்து
வேலை செய்யும்
வயதில்லை
பெற்றெடுத்த
தாயுமில்லை
பேருலகில்
இவர்களுக்கென
யாருமில்லை
இத்தகைய இவர்களின்
உயிரை எடுக்க
காலனுக்கு
நேரமில்லையோ???

க.துஷாந்தி
கற்கோவளம்

## என் உறவே!

என் உடன் பிறவாத... உறவே!
உன் அழுகை என்னை சிந்திக்க தூண்டுதே!
நீ பசியால் நலிந்து வாடுவதேன்... நாட்டில்
பஞ்சம் தலை நிமிர்ந்து ஆடுவதேன்?... போரில்
உன் உறவைப் பிரிந்தாயா... கதியற்று
வாடுகிறாயா? கலங்காதே... உன்
கவலை புரிகிறது... விரைவில்
உன் துயர் துடைப்பேன்


கி.கலைநிலா
யா/இந்து மகளிர் கல்லூரி

## நாள் வரும்

சொல்லியழ யாருமில்லை
சொந்தங்களும் ஏதுமில்லை
சின்னஞ் சிறுசுகள் படும் துன்பத்தை
இறைவா நீ அறியாயோ
ஏழைகள் உயர
பணக்கார வர்க்கம் தாழ நாள் வரும்
ஏய் சிறுவா! கலங்காதே

க.கஜேந்திரன்
இணுவில்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 135



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 14.12.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை வரும்வரை ஒரு அடி கூட நகர முடியாது

## ஆர்ப்பாட்டத்தில் ஆனந்தசங்கரி உரை

(பூந்தோட்டம்)

எங்கள் மத்தியில் ஒற்றுமை வரும் வரைக்கும் எங்களால் ஒரு அடி கூட நகர முடியாது என்பதை நான் உணர்ந்து கொள்கின்றேன் என தமிழர் விடுதலை கூட்டணிச் செயலாளர் வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ் .பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்குமாறு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர், எமது மத்தியில் ஒற்றுமையில்லை என்று சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாக கூறியுள்ளார்.

எங்கள் மத்தியில் ஒற்றுமை வரும் வரைக்கும் எங்களால் ஒரு அடி கூட நகரமுடியாது என்பதனை நான் உணர்ந்து கொள்கின்றேன்.

இன்று இங்கு பலவிதமான கோஷங்கள் எழுப்பப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது. இவ்வாறான கோஷங்கள் இங்கு சிலருக்கு புதுமையாக இருந்தாலும் இது நாற்பது ஆண்டு காலமாக திரும்ப திரும்ப ஒலித்த கோசங்கள்.

ஆகவே நாற்பது ஆண்டுகளாக இவ்வாறான கோஷங்கள் எழுப்படுவதாக இருந்தால் , இவ்வாறான பிரச்சினைகள் நாற்பது ஐம்பது ஆண்டுகளாக உள்ள பிரச்சினை. இது தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நான் எனது கட்சி செயற்பாடுகளை ஒதுக்கிவிட்டு ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று செயற்பட்டு வருகின்றேன். அண்மையில் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அவ்வாறான ஒரு ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது என்று எனக்கு தெரியாது. இன்று எமக்கு அரசியல் அல்ல ஜீவாதார பிரச்சினையே உள்ளது. யாழ்ப்பாணத்திலும் ஒரு நிகழ்வு இடம்பெற்றது. அதுவும் எனக்கு தெரியாது. நான் நூற்றுக்கு நூறு வீதம் வேறு எந்த தொழிலிலும் ஈடுபடாது ஐம்பது ஆண்டுகால அரசியலில் இருக்கின்றேன்.

அதனால் என்னென்ன நடக்கின்றது, என்னென்ன நடக்க போகின்றது என்பதை அறிந்தவன். ஏனெனில் இங்கு சிலர் வேகமாக கோஷம் எழுப்பினார்கள். அந்த வீரம் இந்த இடத்திலே நிற்கப் போவதில்லை. அதற்கு சோதனை வரப் போகின்றது. அது இன்று மாலையோ இரவோ அல்லது நாளையோ ஆக இருக்கலாம். அன்றிலிருந்து இது தான் நடக்கின்றது. நான் எத்தனையோ இளைஞர்களின் மரண வீடுகளுக்கு சென்று இருக்கின்றேன். அவ்வாறானவர்கள் சிறிய குற்றம் செய்தவர்கள். உண்மையில் பெரிய குற்றம் செய்பவர்கள் தப்பிவிடுவார்கள். மக்களை தூண்டிவிட்டு இப்படிச்சொல், அப்படிச்சொல் என்று கூறி முன்நின்று நடத்தியவர்கள் மறைந்து விடுவார்கள்.

இவ்விடத்தில் கைதட்டல் பெறுவது அல்ல சிறப்பு. நான் இவ்விடத்தில் நீங்கள் தொடர்ந்து கை தட்டிக் கொண்டிருக்கும் அளவிற்கு பேச முடியும். ஆனால் கைதட்டலுக்காக பேசுபவன் அல்ல நான். எங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. நாம் அழிந்து கொண்டிருக்கிறோம். தினம் தினம் நாம் அடிமைப்பட்டு கொண்டிருக்கின்றோம்.

இன்று அரசாங்கம் 2ஆயிரத்து 500 பேருக்கு வேலை வழங்கியுள்ளது.18 ஆயிரம் ரூபா சம்பளம் யார் தான் விடுவார். 100 பிள்ளைகளை இராணுவத்தில் சேர்த்து இன்று 15 பிள்ளைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். செய்ய வேண்டிய போராட்டங்கள், ஆர்பாட்டங்கள் அங்கே இருக்கின்றன. அவ்வாறான நிலைகளுக்கு தான் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் கொண்டு செல்லப்பட வேண்டும் .

எமது இனத்திற்காக இடம் பெறும் இந்த போராட்டங்களில் கலந்து கொள்ளும் தலைவர்களில் அவர் ஒரு தலைவரே தவிர அவரது தலைமையில் இங்கு கூடவே இல்லை. வேறு எவரது தலைமையிலும் கூடவில்லை. தலைமைப் பதவிகள் எல்லாம் போய்விட்டது. தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாம் மண்கவ்வி விட்டார்கள். இன்றைக்கு நாம் எல்லோரும் தலைவர்களாக உள்ளோம். எல்லோரும் மன்னர்கள் என்பது போல் எமக்கும் பொறுப்புகள் இருக்கின்றது. இந்த போராட்டம் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது. படம் பிடித்தார்கள், பேச விட்டார்கள், படம் பத்திரிகையில் வந்து விட்டது. இது அல்ல போராட்டம். நான் கேட்பது எமக்குள்ள பிரச்சினை என்ன என்பதை? நாம் இருந்து பேச வேண்டும். அத்தியாவசிய பிரச்சினைகள் தொடர்பில் கே.பி. என்பவரை அரசாங்கம் கொண்டு வந்து போட்டுள்ளது. யார் இந்த கே.பி. யாராவது கேள்வி கேட்டார்களா? அரசாங்கத்தின் எடுபிடிகளாக பலர் இருக்கின்றனர். அவர்களே ஜென்ம விரோதிகள் என்றார். (அ-2-266)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களது கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## சர்வதேச அழுத்தம் காரணமாகவே சுயாதீன ஆணைக்குழு நியமனம்!

### அடித்துக் கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு

வெளிநாட்டு அழுத்தம் காரணமாகவே சுயாதீன ஆணைக்குழு நிறுவப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு சவால் விடுக்கும் வகையில் ஜனாதிபதி சுயாதீன ஆணைக்குழுவொன்றை நிறுவியுள்ளார்.

சர்வதேச அழுத்தம் காரணமாகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சுயாதீன ஆணைக்குழுவின் ஊடாக சிலவேளைகளில் பிரதம நீதியரசருக்கு நன்மைகள் ஏற்படக் கூடும். அரசியல் அழுத்தங்கள் காரணமாக நீதிமன்றக் கட்டமைப்பின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட நிறைவேற்று நீதிமன்றம் மற்றும் பாராளுமன்ற அதிகாரங்கள் சமநிலையாகப் பேணப்பட வேண்டுமென சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

## யாழ். பல்கலை மாணவர்களை விடுவிக்கக்கோரி பிரிட்டன் பிரதமர் வீட்டுக்கு முன் எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யக்கோரி லண்டனில் மிகவும் எழுச்சியான முறையில் 10 டவுணிங் தெருவில் உள்ள பிரதமரின் வீட்டிற்கு முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தொடர்ந்துவரும் அரச பயங்கரவாதத்தினை உலகறியச் செய்வதற்கு காலநிலையையும் பொருட்படுத்தாது நேற்று முன்தினம் மாலை 6 மணிமுதல் 7.30 மணிவரை பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிரித்தானிய அரசு தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையினைத் தடுக்கும் படியும் இலங்கை அரசினைப் புறக்கணிக்கும் படியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வேண்டுகோள் விடுத்தனர். (அ-2)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மற்றும் புதுச்சேரி மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று மத் திய அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் பத்திரிகையாளர்களுடன் உரையாற்றிய அவர் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தாம் பிரதமரிடம் கோரப் போவதாக குறிப்பிட்டார்.

எனவே இந்திய இராஜதந்திர ரீதியில் குறித்த பிரச்சினைக்கு தீர்வைக்கான முயற்சிக்க வேண்டும் என்று அமைச்சர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (அ-2)

### திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் பரந்தாமன் ஆச்சிரமத்தில் வருடந்தோறும் நடைபெற்றுவரும் திருவாசக முற்றோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மார்கழி மாதம் வரும் ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணிக்கு நடைபெறுமென ஆச்சிரமத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3)

## திருப்பாவை உற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் திருப்பாவை உற்சவமும் வைகுந்தப் பெருவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு திருக்கதவு திறக்கப்பட்டு திருப்பாவை உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை நாள் முழுவதும் வைகுந்த ஏகாதசி பெருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வைகுந்த வாசல் திறந்ததும் இறந்த நம் முன்னோர்களுக்கு மோட்ச அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது. (அ-3-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத அமைப்புக்கள்

# ஜனநாயக நீரோட்டத்தில் இணைய மாகாணசபையே காரணம்-விதாரண

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகவே விடுதலைப்புலிகளை தவிர இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நட்த்திய ஏனைய அனைத்து தமிழ் ஆயுத அமைப்புக்ளும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டதாகவும் இதனை மாற்றுமாறுகோரி சில அரசியல்வாதிகள் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் அவர்களுக்கு தவறான செய்தி வழங்கப்படும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மாகாணசபை முறைமை நாட்டுக்கு தேவையான ஒன்றல்ல எனவும் அது இந்திய இலங்கை உடன்படிக்கை ஊடாக இலங்கைக்குள் திணிக்கப்பட்டது என அரசியல்வாதிகள் கூறினாலும் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் மாகாண சபை முறை இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார்.

சமசமாஜக்கட்சி என்ற வகையில் மாகாண சபை முறைமை இரத்து செய்யப்படுவதை நாங்கள் எதிர்க்கின்றோம். அதிகார பரவலாக்கலை கீழ் மட்டத்தில் உள்ள கிராமங்கள் வரை கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி அன்று முதல் குரல் கொடுத்து வருகிறது. இலங்கைக்கு மாகாண சபை முறைமை சிறந்தது என இலங்கை அரசியல் தலைவர்கள் நிலைப்பாடுகளை கொண்டிருந்த போது மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்பட்டது.

மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டதன் காரணமாக விடுதலைப்புலிகளை தவிர இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக போராடிய ஆயுத குழுக்கள் ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டன.

மாகாண சபைகளை இரத்துச் செய்துவிட்டால் சர்வதேசம் சிறுபான்மை இனங்களை ஏமாற்றிவிட்டு அவர்களை அடக்கி ஆழ முயற்சிப்பதாக கூறும் மாகாணசபை முறையில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்து மாகாண சபைகளை வலுப்படுத்துவதன் மூலம் மாத்திரமே இலங்கையில் உள்ளவர்கள் ஒரே தேசிய இனமாக வாழ முடியும். இதன் மூலம் பிரிவினைவாதத்தையும் தோற்கடிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பொலிஸாருக்கு 21 குதிரைகள்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படைப்பிரிவில் இணைப்பதற்காக நெதர்லாந்திலிருந்து 21 குதிரைகள் நேற்றையதினம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தில் கொண்டுவரப்பட்ட இவையனைத்தும் தரோ பிரட் இனத்தை சேர்ந்த ஆண் குதிரைகள் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சமய அனுட்டானங்களும் இரத்ததான நிகழ்வும்

சுகாதார அமைச்சினால் கடந்த 10 அம் திகதி தொடக்கம் நாளை திங்கட்கிழமை வரையான காலப்பகுதி தேசிய சுகாதார வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தேசிய சுகாதார வாரத்தின் ஏழாவது தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை சமய அனுட்டாணங்களும் இரத்ததான நிகழ்வுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை, ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி ஆகிய நான்கு இடங்களில் இரத்ததான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் போன்றோர் இரத்ததான நிகழ்வில் பங்குபற்றி உயிர்காக்கும் உன்னத பணியில் ஒன்றிணையுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ-9)

# முசலி பிரதேச முதியோர் கவனிப்பாரற்ற நிலையில்

சமாதானத்தின் பின்பு முசலி பிரதேச மக்கள் மீள்குடியேறி 5 வருடங்கள் முடிவடைந்த நிலையில் முசலி பிரதேச நிர்வாகம் சீரான நிலையில் இயங்கிக் கொண்டு வருகின்ற வேளையில் முதியோர்களின் நலன்களில் இன்னும் கவனம் செலுத்தப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த சிந்தனையில் உள்ள பிரதான திட்டமாக முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் முகமாக கடந்த 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கம் கொண்ட முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் கிராமிய முதியோர் நிறுவனங்களை பதிவு செய்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் சமூகசேவைகள் அமைச்சின் கீழ் முதியோர் செயலகம் உருவாக்கப்பட்டு நாட்டில் எல்லா மாவட்டத்திலும் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஊடாக முதியோர்களுக்கு தேவையான தேசிய அடையாள அட்டை, மாதாந்தம் ஆயிரம் ரூபா பணம், ஊனமுற்றவர்களுக்கு வண்டி, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் முதியோர் மண்டபம், முதியோர்களின் பிள்ளைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், இலவச பஸ் வசதிகள் இதேபோன்று இன்னும் வசதிகள் உள்ளன.

மேலும் முசலி பிரதேச செயலர் பிரிவில் 234 கிராம உத்தியோகத்தர் பிரிவு உள்ளது. இதில் எந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இது வரைக்கும் முசலி பிரதேச (சமூக சேவை உத்தியோகத்தர் அல்லது முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர்) இது சம்பந்தமான எவ்வித மான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என முசலி பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ-2)

# உலக உணவு திட்டத்தால் இலங்கைக்கு நிதியுதவி

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் இலங்கைக்கு 10 இலட்சத்து 4 ஆயிரத்து 524 ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு இலங்கையில் முன்னெடுக்கப்படும் உணவு திட்டத்திற்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியுதவி வழங்குவது தொடர்பான கடிதத்தை உலக உணவு திட்டத்தின் வதிவிட பணிப்பாளர் மெடிஸ் லோப்வெல் பொருளாதார பிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு தேவையான உணவுத் தேவையை பூர்த்தி செய்ய உதவியளிக்கப்படும் என இங்கு உரையாற்றிய உலக உணவு திட்டத்தின் வதிவிட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் உலக உணவுத் திட்டம் ஊடாக எதியோப்பியாவுக்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமான அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## வடக்கு தேர்தலுக்கு முன்னர்

# முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை மீள்குடியமர்த்த வேண்டும்-றிசாத்

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை மீளக்குடியேற்ற வேண்டும் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களில் 20 சதவீதமானோர் மட்டுமே தமது சொந்த இடங்களில் தற்போது மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர்.

வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அங்கு சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இயன்றளவு விரைவில் வடமாகாண சபை நிறுவப்படல் வேண்டும் என அமெரிக்காவும் இந்தியாவும் கூறியிருந்தன. அதேபோல தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் வடக்கில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரியிருக்கின்றது என்றார். (அ-2)

## கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமையில் வைத்து கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை புல்மோட்டை முகாம் அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 2 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# இலங்கை தமிழர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை

## வலியுறுத்துகிறது தி.மு.க.

தமிழகத்தில் அகதிகளாக இருக்கும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்று மக்களவையில் தி.மு.க. உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

குடிபெயர்ந்து வந்திருக்கும் மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, 30 ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெயர்ந்த அப்பாவிக் குழந்தைகளின் பிரச்சினைகளை கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, தமிழகத்தில் தங்கி இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அகதிகளாக தங்கியிருப்போரின் பிள்ளைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றில் சிக்கல்கள் ஏற்படுகிறது. 7 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகளாக தங்கி யிருப்போர் விரும்பினால் அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் நடைமுறை நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கின்றன.

இது தொடர்பான ஐ.நா. சபை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாத காரணத்தினால் இங்கு பல ஆண்டுகளாக தங்கியுள்ள அகதிகளுக்கு வசதி வாய்ப்புகள் கிடைக்க முடியாமல் போகிறது என்றார். (அ-2)



கொழும்பு கங்காராமை விகாரையின் விகாராதிபதி கல்பொட ஞானிஸ்ஸா தேரரின் 69 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாட்லிக் கல்லூரியை வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 13 வயது பிரிவினருக்கான பிரிவு III போட்டியில் ஹாட்லிக் கல்லூரியை கொக்குவில் இந்துக் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்களால் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

இப்போட்டி கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத் தடுப்பை மேற்கொள்ள தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி அணி 35.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்து 77 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஐதர்சன் , ஆனந் முறையே 26,13 ஆகிய ஓட்டங்களை அணிக்கு பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் றொஷான் , சாருஜன் தலா 4 இலக்குகளை கைப்பற்றியிருந்தனர். தனுக்சன் 2 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 40 பந்துப் பரிமாற்றங்களுக்கு 7 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களை பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் பானுஜன் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும் றொசான், டிருக்ஷன், சந்தோஷ் ஆகியோர் முறையே 42,31, 24 என்ற ஓட்டங்களையும் அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஹாட்லிக் கல்லூரி சார்பாக ஆனந் 3 இலக்குகளையும் மதிவாணன் 2 இலக்குகளையும் றமணன், மதன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றி இருந்தனர்.

இந்நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஹாட்லியை மீண்டும் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்போது துடுப்பெடுத்தாடிய ஹாட்லி அணி 31 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 65 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் கிரிதரன், றீகன் ஆகியோர் முறையே 28,8 என்ற ஓட்டங்களை தமது அணிக்கு வழங்கியிருந்தனர்.

பந்துவீச்சில் சாருஜன் 4 இலக்குகளையும் டிருக்ஷன் 3 இலக்குகளையும் றொஷான் ஒரு இலக்கினையும் கைப்பற்றி இருந்தனர்.

போட்டி இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஹாட்லிக் கல்லூரி அணியை இனிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்களால் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது. (அ-9)

## சாயி நிறுவனத்தின் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சத்யசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பண்டத்தரிப்பு சாந்தைக் கிராமத்திலுள்ள விநாயகர் சண்முக நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இலவச மருத்துவ முகாம் இடம் பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளும் இந்த மருத்துவ முகாமில் சகலரையும் கலந்து கொண்டு பயனடையுமாறு மேற்படி நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். கணேசமூர்த்தி கேட்டுள்ளார். (அ-9)

# மர்மப்பொருள் வீழ்ந்து மரம் தீப்பற்றி எரிந்தது

(கொழும்பு)

வலஸ்முல்ல தெற்கு கனுமுல்தெனியவில் மர்மப்பொருள் விழுந்துள்ளதாக தேசிய வானியல் ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

கனுமுல்தெனிய கஹடேல்லகெட எனுமிடத்தில் பலாமரத்தின் மீதே இந்த மர்மப் பொருள் விழுந்துள்ளதாகவும் அந்த மர்மப் பொருள் விழுந்ததையடுத்து குறித்தமரம் தீப்பற்றி எரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வானத்திலிருந்து பாரிய வெளிச்சத்துடன் பூமியை நோக்கி நேற்றிரவு 9 மணியளவில் மிகவேகமாக வந்த அந்த மர்மப்பொரு பலா மரத்தில் சுமார் 25 அடி உயரத்தில் விழுந்து சாம்பலாகியுள்ளது. அந்த மரமும் 25 அடி உயரத்தில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனையடுத்து பிரதேசவாசிகள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். (அ-2)

# சில எதிர்ப்பாளர்கள் இந்தியாவின் வளர்ச்சியை தடுக்கின்றனர்

## ரஷ்ய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் அனைவரும் இந்தியா வல்லரசு ஆவதை விரும்பாதவர்கள் என இந்தியாவிற்கான ரஷ்ய தூதர் அலெக்சாண்டர் கடாகின் கூறியுள்ளார்.

ரஷ்யா நாட்டின் பெரும்பங்கு உதவியுடன் தான் கூடங்குளத்தில் அணு உலைகள் தயாராகி வருகின்றன. இந்த அணு உலை செயற்பாட்டிற்கு அப்பகுதி மக்கள் கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னையில் நேற்று முன்தினம் 40 ஆவது ஆண்டு ரஷ்ய கலை விழாவை தொடங்கி வைத்து கடாகின் உரையாற்றுகையில்,

இந்திய, ரஷ்ய கலாசாரம் பாரம்பரியமிக்கது. இதனால்தான் ஆண்டுதோறும் ரஷ்ய கலை விழா நடத்தப்படுகிறது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது யூனிட் மின்சார உற்பத்திக்கு தயாராகவுள்ளது. அதேபோல இரண்டாவது யூனிட் அணு உலை பணிகள் இன்றும் 6 மாத காலத்தில் முடிவடையும்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் உலக அரங்கில் இந்தியாவின் வளர்ச்சியை தடுக்க நினைப்பவர்கள் என்றார். (அ-2)

# இடமாற்றம் பெற்ற அதிபர்கள் விபரம்

ஒரே பாடசாலையில் ஏழு வருட சேவையினை பூர்த்திசெய்ததன் அடிப்படையில் அதிபர்களுக்கு எதிர்வரும் 2013 ஜனவரி முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதிபர்களின் பெயர்கள் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

**யாழ்.வலயம்**

திருமதி கே. சுந்தரலிங்கம் (யா/கோப்பாய் நாவலர் வித்தி), திருமதி எஸ்.வாகீசன் (யா/இருபாலை சீ.சீ.த.க.பா)

**வலிகாமம் வலயம்**

அலீசியஸ் ஸ்ரீபன் ரெக்ஸ் (யா/மாதகல் நுனாசை வித்தியாலயம்), திருமதி ஜே.எம். ஜி.பி.பெய்ன்வெனு (யா/சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை), திருமதி ரி.செபமாலைநாயகி (யா/பெரியவிளான் றோ.க.த.க.பா), திருமதி எஸ்.சிவமலர் (யா/வட்டு. மத்திய கல்லூரி), திருமதி த.வாசுகி (யா/ கட்டுவன் புலம் ம.வி), சி.சிவராஜன் (யா/அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தி), திருமதி எஸ்.வசந்தராணி (யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தி), திருமதி ரி. ரோகினி (யா/ அளவெட்டி சதானந்தா வித்தி), கே.பத்மநாதன் (யா/ பன்னாலை சேர் கனகசபை வித்தி), கே.சிவநேசன் ( யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க.பா), ஏ.ஸ்ரீதரன் (யா/எழாலை வடக்கு அ.மி.த.க.பா), திருமதி எஸ்.கமலாதேவி (யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தி), ரி.வாமதேவன் (அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பா), ந.சபாரத்தினசிங்கி (யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி), திருமதி என்.காயத்திரி ( யா/ அராலி முருகமூர்த்தி வித்தி), திருமதி ரி. ஜெகதீஸ்வரி ( யா/அராலி கிழக்கு அ.மி.த.க.பா), என்.விக்னேஸ்வர மூர்த்தி (யா/ வட்டு. மேற்கு அ.மி.த.க.பா)

**வடமராட்சி வலயம்**

வி.நிம்மதிராசா (யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பா), எஸ்.ஜெயந்திரன் (யா/ உடுத் துறை இந்து ஆரம்பப் பாடசாலை), கே. சுப்ரமணியம் (யா/ வல்வை அ.மி.த.க.பா), எம்.மெய்யழகன் (யா/மாதனை மெ.மி.த. க.பா), பி.சக்திவேல் (யா/உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தி

**வவு.தெற்கு வலயம்**

எம்.ஆர்.அப்துல் சயீம் (வ/தருலுலும் ம.வி), திருமதி எம். மேரி அல்வீனம்மா (வ/ அடைக்கல அன்னை வித்தி),கே.பூஷணி (வ/ செக்கட்டிப்புலவு அ.த.க.பா),திருமதி பி. சிவராணி (வ/கல்நாட்டியகுளம் அ.த.க .பா), கே.தனபாலசிங்கம் (வ/பூந்தோட்டம் ம.வி), திருமதி ஆர்.அருள்நேசம் ( வ/ சின் னத்தம்பனை அ.த.க.பா), எம். வில்வராஜா (வ/ மணியகாரன்குளம் விஜாணந்த வித்தி, என்.விக்னேஸ்வரன் (வ/கற்கரன் குளம் இளங்கோ வித்தி,திருமதி கே. இன்பநாயகி (வ/கல்லாறு ஸ்ரீசித்திவிநாயகர் வித்தி, எஸ். ரவிச்சந்திரன் (வ/கங்கன்குளம் ஸ்ரீசுப்ர மணியர் வித்தி, எஸ்.மொஹமட் ஜபீர் (வ/அல்- ஹமியா வித்தி, எஸ்.கே. மரிய நாயகம் (வ/பாவற்குளம் ம.வி), டி.எம்.சமன் டிசாநா யக்க (வ/அக்ரபோதி வித்தி), எஸ். புஸ்பநாதன் (வ/அன்புபுரம் நாமகள் வித்தி,திருமதி ஏ.எம்.சோமாவதி (வ/ மருதமடு ஜி.எஸ்.எம். எஸ்)

**கிளிநொச்சி வலயம்**

கே.குணபாலசிங்கம் (கிளி/சென். அன்ரனீஸ் றோ.க.த.க.பா),எஸ்.பாலகிருஷ்ணன் (கிளி/ பளை மத்திய கல்லூரி). (அ-9)

## கிட்ஸ்பார்க் குழந்தைகளின் நிகழ்வுகள்

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் கிட்ஸ்பார்க் இன் மூன்று வயது சிறார்களின் வருட இறுதி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுல் பிரதம விருந்தினர்களாக பாடசாலைப்பகுதி மருத்துவ அதிகாரி டாக்டர் வி.யோகேஸ்வரன்,உரும்பிராய் முன்பள்ளி மருத்துவ பராமரிப்பு பிரிவின் மருத்துவ அதிகாரி டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ள னர். (அ-9-78)


---

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் கிட்ஸ்பார்க் சிரேஷ்ட குழந்தைகளின் வருடாந்த கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், திருமதி ரஜனி பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ள்வுள்ளனர்.





வடமாகாணத்தில் ஜீ.ஐ.இசற் (G.I.Z) நிறுவனத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுகின்ற மற்றும் 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜீ.ஐ.இசற் நிறுவன அதிகாரிகள் மற்றும் வடமாகாண திணைக்களத்தின் அதிகாரிகளை படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேர்மை குணம் இருந்தால் நல்ல எண்ணங்களை செயல்படுத்த முடியும்.

-ஆவ்ரி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரச அதிகாரிகளே! சுற்று நிருபங்களை சுத்து நிருபங்களாக மாற்றாதீர்கள்

உண்மைக்கும் வாய்மைக்கும் வித்தியாசம் உண்டு. உண்மை என்பது உண்மையானது. அதில் பொய் என்பதற்கு இடமே இல்லை.

ஆனால் வாய்மை என்பது அப்படியானதல்ல. வாய்மையில் பொய் உரையும் இருக்கும். வாய்மை என்பது சூழ்நிலையையும் கருத்தில் கொள்வது.

பசுமாட்டைக் கொல்வதற்காக ஒருவன் துரத்தி வருகிறான். பசு ஓடி மறைந்து விடுகிறது. இதனை ஒரு பெரியவர் கண்ணுற்றார்.

அந்தப் பெரியவரிடம் பசுவை துரத்திவந்தவன், ஐயா! ஓடிவந்த பசு எந்தப்பக்கத்தால் சென்றது தெரியுமா? என்று கேட்கிறான்.

அதற்கு அந்தப் பெரியவர் பசு சென்ற பாதைக்கு எதிர்ப்பாதையை காட்டுகிறார்.

பெரியவர் கூறியது பொய்யாயினும் அது பசுவை காப்பாற்றும் பொருட்டு கூறப்பட்டதால் வாய்மை என்பதற்குள் அடக்கப்படுகிறது.

இதனால்தான் வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல் என்கின்றார் வள்ளுவர்.

எனவே இதிலிருந்து உண்மை, வாய்மை என்பதன் வித்தியாசப்பட்ட பொருளை உணர்ந்து கொள்ள முடியும்.

இது போன்றதுதான் நீதியும் நியாயமும்.

நீதி என்பது சட்டத்தின் பாற்பட்டது. நியாயம் என்பது உண்மையின் பாற்பட்டது. இங்கு நாம் சுட்டி நிற்கின்ற விடயம் பொதுநிர்வாகப் பணிகளை சுலபமாக முன்னெடுப்பதில் இருக்கின்ற சுற்று நிருபங்கள் பற்றியதாகும்.

பொதுவில் திணைக்களங்கள் இயங்குவது– நியமனங்களை வழங்குவது – பதவி உயர்வுகளைக்கொடுப்பது என்பன சுற்று நிருபங்களின் அடிப்படையில் இடம்பெறும் போதுதான் சுமுகமாக – பிரச்சினையில்லாமல் நிர்வாகத்தை இயக்க முடியும்.

ஆனால், இப்போதிருக்கின்ற நமது நிலைமைகளைப் பார்க்கின்றபோது சுற்று நிருபங்களை நமக்கு ஏற்றமாதிரி மாற்றியமைப்பது போன்ற தோற்றப்பாடு உணரப்படுகின்றது.

இத்தகைய நிலைமை மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை.

அதிலும் கல்வி சார்ந்த அமைப்புகள் சுற்று நிருபங்களை பின்பற்றுவது மிகவும் அவசியமானதாகும்.

சுற்று நிருபங்களை கருத்தில் எடுக்காமல் அதிகாரிகள் செயற்படுவார்களாக இருந்தால் விமர்சனங்களும், கட்டுக்கதைகளும் களம் இறக்கப்படும்.

கதைக்கட்ட நாலுபேர் இருந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம்தான் என்ற கவியரசின் தத்துவத்தின் பிரகாரம் கட்டுக்கதைகள் களமிறங்கி விட்டால் நிர்வாகம் சீர்குலையும். எதனையும் ஒழுங்குமுறையில் செய்யமுடியாமல் போகும்.

ஆகவே அரச உயர் அதிகாரிகள் தங்கள் நிர்வாகத்தை சிறப்பாக கோலோச்சுவதற்கு இருக்கக் கூடிய ஒரே செங்கோல் சுற்று நிருபங்கள்தான்.

இவர் நமர். அவர் பிறர் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் சுற்று நிருபங்களை எமக்குச் சாதகமாகப்பயன்படுத்தினால் அது சுற்று நிருபமாக அன்றி சுத்து நிருபமாக மாறிவிடும்.

சுத்தல்கள் நீண்டகாலத்திற்கு நின்று நிலைக்க முடியாதென்பது உலகறிந்த உண்மை.

# உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள அறிவுச் சமூகம் உருவாக வேண்டும்

## பேராசிரியர் சிவநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளதை உள்ளவாறு கூற வேண்டும். உரிமைகள் மறுக்கப்பட்டால் தயக்கம் இன்றி கூற வேண்டும் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழ[illegible] கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் [illegible] திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக பொருளாதார உரிமைகள் என்னும் தலைப்பில் கல்வி மற்றும் சுகாதார உரிமைகள் என்னும் விடயம் தொடர்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் அடிப்படை வசதிகள் சமமாக கிடைக்க வேண்டும். இதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு. வாழ்வதற்கான உரிமைகள் சகல மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பொருளாதார உரிமைகள் வழங்கப்பட வேண்டும். உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் மக்களின் வாழ்விடங்களும் காணிகளும் உள்ளன. அந்த மக்களின் பொருளாதார உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இதுவெளிப்படையானஉண்மை. இதனை தயக்கம் இன்றி வெளிப்படையாகக் கூற வேண்டும். அறிவுச் சமூகம் உருவாக வேண்டும். அப்போதுதான் உரிமைகள் மீறப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால் உள்ளதை உள்ளவாறு கூற முடியும்.

வறுமைதான் எல்லா உரிமையையும் இழக்கக்காரணம். அடிப்படை உரிமைகளை மனித உரிமையாக கருத வேண்டும். அப்போதுதான் நம்பிக்கை உருவாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் பல உதவி செய்ய முன்வந்தன. ஆனாலும் கூட இடம்பெயர்ந்து சொந்த இடத்திற்கு செல்ல அனுமதிக்கப்படாத மக்களுக்கு சொந்த இடங்களில் குடியேறினால்தான் உதவி வழங்க முடியும் என்று கூறுகின்றன.

அவர்களது நிலம் விடுவிக்கப்படாத நிலையில் அந்த மக்கள் எவ்வாறு குடியேற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## சட்டத்தரணிகள் சங்க பிரதித்தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித்தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அனோமா குணதிலக தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்து கொள்ளப் போவதாக நேற்று அறிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களை எதிர்த்தே தான் பதவி விலகுவதற்குத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்தத் தீர்மானங்கள் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லையென்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ வினால் பலவந்தமாக நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## உதைபந்தாட்டமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு குருநகர் பாடுமீன் கழக மைதானத்தில் நடைபெறுகிறது.

இவ் இறுதிப் போட்டியில் விலகல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட சென்.நீக்கிலஸ், ஞானமுருகன் அணிகள் மோதவுள்ளன.

இவ் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடக்கு பொது முகாமையாளர் கே.டி.சுமணசிறி, சிறப்பு விருந்தினராக கெங்காதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### நல்லூரான் திருவடி



நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமடி

# உண்மை வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாவோம்


இன்று நாம் சந்திப்பு பற்றிச் சிந்திக்கலாம். சந்திப்புக்கள் பலவிதம். புனித பிலிப் நேரி வாழ்வில் நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு சம்பவம். புனித பிலிப் நேரி ஒருநாள் நண்பர்களுடன் பொழுதுபோக்காக சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது சாவைப்பற்றிய பேச்சு அங்கு எழுந்தது. நண்பர்களில் ஒருவர் பிலிப்பிடம் பிலிப் இதோ அடுத்தநிமிடமே நீ இறக்கப்போகிறாய் என்று தெரிந்தால் என்ன செய்வாய்? என்று கேட்டார். பிலிப் அவரிடம் தொடர்ந்து சீட்டு விளையாடிக்கொண்டிருப்பேன் என்றாராம். பிலிப் நேரியதைப்போல் எந்தவிதப் பயமும் இன்றி இறைவனைச் சந்திக்க நாம் என்ன செய்யவேண்டும்? நல்ல கேள்வி. இதேகேள்வியைத் தான் மக்கள் திருமுழுக்கு யோவானிடம் எழுப்புகிறார்கள். இறைவனைச் சந்திக்க நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று யோவானைச்சுற்றி இருந்த மக்கள் தேட ஆரம்பித்தனர்.

## பரமபிதா காட்டிய பாதை

இந்தக்கேள்விக்கு நாம் பதில் தேடு முன்பு, திருமுழுக்கு யோவானைச் சுற்றி நின்ற கூட்டத்தில் இருந்தவர்கள் யாவர் என நோக்கினால் மக்கள், வரி தண்டுவோர், படைவீரர் என நற்செய்தி சொல்கின்றது. ஆனால் ஒரு முக்கிய குழுவைப்பற்றி இன்றைய நற்செய்தியில் இல்லை. ஆனால் அவர்கள் யோவானின் புகழ் பரவி வந்ததை அவர்களும் அறிவர். யார் இந்த மனிதர்? என இவரைத்தேடி பாலைவனத்திற்கே மக்கள் போகிறார்கள் என்றால் தங்கள் கேள்விக்கு விடை தேடி அந்த மதத் தலைவர்களும் அங்கு வந்திருப்பர்.

இந்தக்கூட்டத்தில் யோவான் இறைவனின் வரவை, இறைவன் வார்த்தையை எடுத்துக் கூறுகிறார், இடித்துக்கூறுகிறார். யோவான் சொன்னதைக்கேட்ட மக்கள், வரிதண்டுவோரும், படைவீரர் இவர்கள் நடந்துகொண்டது ஒருவிதம். கண்ணாடியில் தெரியும் உருவம் சரியில்லை என்றால் கோபத்தில் கண்ணாடியை உடைப்போமா? உடைத்தார்கள் அந்த தலைவர்கள். யோவான் வாழ்ந்த தவவாழ்வு, அவரது போதனை எல்லாம் மதத்தலைவர்களின் முகமூடிகளைக் கிழித்து அவர்களது உண்மை உருவைக்காட்டும் கண்ணாடியாக இருந்தது. தங்கள் வாழ்வைச் சங்கடப்படுத்தும் இந்த உண்மைமைய ஊமையாக்க ஒரேவழி? இந்தக் கண்ணாடியை உடைக்கவேண்டும். மதத்தலைவர்கள் தாங்கள் என்ன செய்யவேண்டும் என் பதில் தெளிவாக இருந்தார்கள். உண்மையை ஊமையாக்க வேண்டும். உண்மை வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளை உடைக்கவேண்டும் எனத் திட்டம் போட்டனர்.

மதத் தலைவர்களுக்கு மாறாக, தங்கள் வாழ்வின் உண்மை நிலையைக் காட்டிய யோவானிடம் மக்கள், வரி தண்டுவோர், படைவீரர் மீட்படையும் வழி கேட்டார்கள். ஏக்கம் நிறைந்த கேள்வி: நாங்கள் என்ன செய்யவேண்டும்? நாங்கள் இறைவனைச் சந்திக்க என்ன செய்யவேண்டும்? சாக்குத்



துணி அணிந்து, சாம்பல்பூசி, சாட்டைகளால் உங்களையே அடித்துக்கொண்டு கடுந்தவம் செய்யுங்கள். யோவான் இப்படி சொல்வார் என்று எதிர்பார்த்திருந்தனர் அந்த மக்கள். ஏனெனில் யோவானே அத்தகைய கடும் தவங்களைச் செய்து வருகிறவர். ஆனால் யோவான் கூறிய பதில் மிகஎளியது. பிரச்சினைகளுக்கான தீர்வை இயேசு கிறிஸ்துவுடன் நாம் கொள்ளும் ஒன்றிப்பிலேயேகாண முடியும். ஏனெனில், அதுவே அன்பு மற்றும் உண்மையை அடிப்படையாகக் கொண்ட வழிகளும் நடவடிக்கைகளும் உருவாகக் காரணமாகிறது. இறைவன் மீது கொண்டுள்ள தாகத்தை நினைவில் கொண்டு உள்மன வாழ்வைத் தூய்மைப் படுத்தி பலப்படுத்த வேண்டும்.

கிறிஸ்துவில் இறைவன் நம் அருகே நெருங்கி வந்துகொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்துகொள்வோம். பெத்லகேம் குடிலை நிறைத்த மகிழ்வு மற்றும் ஒளி நம் வாழ்வின் வழியாக தன் கதிர்களைப் பரப்பி, இறைபிரசன்னத்தை உணர்ந்ததன் சாட்சிகளாக விளங்குவதற்கு, இவ்வுலகின் கவனச்சிதறல்கள், மனக்கலக்கங்கள் மற்றும் மேம்போக்கான நிலைகள் போன்றவைகளின் மத்தியிலும் நம்பிக்கையையும் நற்செய்தியையும் வாழ்வாக்குவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கவிஞன் என்பவன் யாருங்க?




பா.ரூபன், அல்வாய்

அன்பின் வியாசரே!

பணம் பேசும்போது உண்மைகள் ஊமையாகி விடுகின்றதே ஏன் சேர்?



*பணம் பேசும் மொழி மனிதனுக்கு புரிவதில்லை. புரிந்தால் பலரைச் சிறைச் சாலைக்குள் பார்க்கலாம்.*

பா.மதனபாரதி, அல்வாய்

வியாசர் சேர்!

கவிஞன் என்பவன் யாருங்க?

*கண்டதை (யும்) சொல்வான்*
*காணாததையும் சொல்வான்*
*உண்மையைச் சொல்லாமல்*
*பொய்மை உரைந்திடும்*
*புழுகன் பொல்லாதவன்.*

ஜே.ஜெகசுபதா, செம்மணி வீதி

வியாசரே!

அன்றைய பெண்ணிற்கும் இன்றைய லேடிக்கும் உள்ள ஒற்றுமை ஒன்று கூறுங்கள்.

*இரண்டில் பெண் என்பதை விட வேறு எந்த ஒற்றுமையும் கூறிவிட முடியாது.*

தர்ஷிகா, நெல்லியடி

அன்பின் வியாசரே...!

மார்கழி 21 ஆம் திகதிக்குப் பின் உங்கள் கேள்வி பதில்களை பத்திரிகையில் எதிர்பார்க்கலாமா?

*அம்மா தர்ஷிகா நீர் கேள்வி கேட்டால் நிச்சயமாக என் பதில் கிடைக்கும்*

பா. மதன், வடஅல்வையூர்

வியாசர் அங்கிளே...!

ஆயிரம் பேர் அடித்தாலும் ஆயிரம் பேர் அணைத்தாலும் இறுதியில் மிஞ்சுவது யாது?

*மதன் சேர்! தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேர் அடிச்சிட்டினம் தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேர் அணைச்சிட்டினம் கொஞ்சம் ரைம் தாரும் ஆயிரம் கடந்தவுடன் பதில் தருகிறேன்.*

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

செவ்வாய்க் கிரகத்திற்கு போக ஆசையாக உள்ளது. என் ஆசை நிறைவேறுமா?

*ஆசை நன்றாகத்தான் இருக்கிறது என்னும் ஐந்து நாட்களில் டிசெம்பர் 21 வந்திடுமே! அதன் பின் யோசிப்போம் ஜெயரூபன்*

ரி.கயல்விழி, தெல்லிப்பழை

வியாசரே!

உணர்வுக்கும் தியாகத்திற்கும் என்ன வித்தியாசம்?

*உணர்வு அழிந்து விடக் கூடியது. தியாகம் நிலைத்து நிற்கக் கூடியது.*

மோ.மோகனா, அல்வாய் வடக்கு

அண்ணா...!

வாழ்க்கையில் எது நிரந்தரமானது? எது நிரந்தரமற்றது?

*வாழ்க்கையே நிரந்தரமில்லாதது. நிரந்தரம் இல்லாத ஒன்றில் நிரந்தரம் இருக்க முடியுமா?*

க.சி.சதாசிவம், மட்டுவில்

வியாசர் அங்கிளே...!

தாங்கள் ஒரு குடும்பத்தாரா?

*ஓ...நான் கட்டப் பிரம்மச்சாரிங்க (பகலில் மட்டும்)*

சயந்தன், கந்தர்மடம்

வியா ஐயா!

வாழ்வில் சரியான துணையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது.

*நடிகர் விஜய் நடித்த பிரியமானவளே திரைப்படத்தைப் பாரும் புரியும்.*

## பெண்களின் நடையை அன்ன நடைக்கு ஒப்பிடுகிறார்கள். ஆண்களின் நடையை எதற்கு ஒப்பிடலாம்?

தி.ஜீவிதன், நல்லூர்

Dear Vija?

பெண்களின் நடையை அன்ன நடைக்கு ஒப்பிடுகிறார்கள். ஆண்களின் நடையை எதற்கு ஒப்பிடலாம்?

*நீர் யாழ்ப்பாணப் பக்கம் வந்தால் என்னை ஒருக்கா சந்தியும். உம்மை நடக்க வைத்துப் பார்த்து எதற்கு ஒப்பிடலாம் என்று முடிவெடுப்போம்*

வி.அம்பிகா, கோண்டாவில்

வியா ஐயா!

உங்களுக்குப் பிடித்த கையெழுத்து யாருடையது?

*மனிதனின் தலையெழுத்தை எழுதுகிறானே அந்த பரம்பொருளின் கையெழுத்தை ரொம்ப பிடிக்கும்.*

ரி.யான்சன், மன்னார்

வியா ஐயா!

என் மனைவி இன்று சமையலில் இட்லியா, தோசையா செய்ய என்று கேட்கிறார்....! என்ன சொல்ல.

*முதலில் சமையலை செய்யச் சொல்லும் அதன் பின்னர் அதற்கு பெயர் வைக்கலாம்.*

**அன்பு வாசகர்களே....!**

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3. 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# ஒரு மரத்தில் திடீரென தோன்றிய அம்மன் முகம்



வேப்பமரமானது அம்மனுக்கும் அரச மரம் விநாயகருக்கும் கடம்பமரம் முருகனுக்கும் உகந்த மரமாக கூறப்படுகிறது. ஈரோடு மாவட்டம் அந்தியூரில் பிரசித்தி பெற்ற பத்ர காளி அம்மன் கோவில் உள்ளது.

இந்த அம்மனிடம் பூ உத்தரவு வாங்கி விட்டுதான் அப்பகுதி மக்கள் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். இந் நிலையில் அந்தியூர் அருகே உள்ள பிரம்மதேசம் என்ற கிராமத்தில் ஒரு மரத்தில் அம்மன் முகம் திடீர் என்று தோன்றியுள்ளது. அது பக்தர்கள் இடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த மரத்தை பார்வையிட்டபோது அதில் மூன்று கண்களுடன் அம்மன் திருமுகம் இயற்கையாக தோன்றி இருப்பது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து மரத்தில் உள்ள அம்மன் முகத்துக்கு மஞ்சள் பூசி குங்குமம் வைத்து அப்பகுதி மக்கள் வழிபாடு நடத்தி வருகின்றனர். (அ-2)

# கதிர்காமத்தில் தீ விபத்து; மூன்று கடைகள் எரிந்தன

கதிர்காமம் நகரத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் மூன்று கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. சுமார் 3 கோடிக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்த தீ விபத்து சம்பவத்தை அறிந்து கதிர்காமம் பிரதேச சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வாகனம் வந்தது. எனினும் தண்ணீர் கொண்டு வருவதற்கு பவுசர் இன்மையால் வேறு ஒரு வாகனத்திலேயே தண்ணீர் கொண்டு வரப்பட்டுள்ளது.

தண்ணீர் கொண்டு வரப்பட்ட வேளையில் தீயணைப்பு வாகனத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக தீயணைப்பு படையினரால் தீயை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் பொதுமக்களின் உதவியுடன் பாத்திரங்களில் தண்ணீர் நிரப்பி தீ ஏனைய கடைகளுக்கும் பரவாமல் தடுக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## எதிர்காலத்தில் மீண்டும்

# இன்னும் பல ஏவுகணைகளை வெற்றிகரமாக செலுத்துவோம்

## வடகொரியா மிரட்டல்

(பியாங்யாங்)

ஆராய்ச்சிக்காக எதிர்காலத்தில் இன்னும் பல ஏவுகணைகளை செலுத்தவுள்ளதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் - உன் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் எதிர்ப்பையும் மீறி கடந்த புதன் கி ழமை நீண்ட தொலைவு இலக்கைக் தாக்கக்கூடிய ஏவுகணையை வெற்றிகரமாக வடகொரியா செலுத்தியது. இதைக் கொண்டாடும் வகையில் ஆயிரத்தும் மேற்பட்ட மக்கள் வடகொரியத் தலைநகர் பியாங்யாங்கில் நேற்று முன்தினம் பேரணி நடத்தினர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிம் இல்-சங் சதுக்கத்தில் ஒன்று கூடி கிம் ஜாங்-உன்னின் தைரியத்தை பாராட்டினர். அப்போது நாட்டின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் பல ஏவுகணைகளை செலுத்துவோம் என்று கிம் ஜாங்- உன் கூறியதாக கொரியன் மத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

3 நிலைகள் கொண்ட இந்த ஏவுகணை செயற்கைக்கோளை சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்துவதற்காகத்தான் அனுப்பப்பட்டதாக வடகொரியா தெரிவித்தது.

இதற்கு தென்கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. வடகொரியா செலுத்திய ரொக்கெட்டின் முதல்நிலை பாகங்களை தென்கொரிய கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பாகங்களின் தன்மை குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மேற்கொள்ளவுள்ளனர். இந்த பாகங்களின் மூலம் வடகொரிய ரொக்கெட்டின் திறனைக் கண்டறிய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தென்கொரியா பாதுகாப்பு அமைச்சக செய்திகள் தெரிவித்துள்ளன.

3 நிலைகள் கொண்ட வடகொரிய ஏவுகணையின் முதல் நிலை பாகங்கள் கொரியன் தீபகற்பப் பகுதியிலும் 2 ஆம் நிலை பாகங்கள் பிலிப்பைன்சின் கிழக்குப் பகுதியிலும் விழுந்ததாக யோஹ்னா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-2)






தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் டெங்கு நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் கருத்துரை வழங்குவதையும் அருகில் லயன்ஸ் கழ கத் தலைவர் லயன் கே. நடராசா , செயலாளர் டாக்டர் லயன் ஆர். கந்தையா, பொருளாளர் லயன் த. இரவீந்திரன், லயன் சீமாட்டி சறோசாதேவி ஆகியோர் அமர்ந்து இருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி மண்ணில் திணறும் சிங்கங்கள்



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலியா அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் 2-ம் நாள் ஆட்டம் நேற்றாகும். நேற்றைய ஆட்டநேர முடிபில் இலங்கை அணி தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

4 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்திக் கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக 6-வது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 146 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியா அணி சார்பாக மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும், பிலிப் ஹியுஸ் 86 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 74 ஓட்டங்களையும், மத்யூ வேட் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 57 ஓட்டங்களையும், ஷேன் வோட்சன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சானக வெலகெதர 3 விக்கெட்டுக்களையும், ஷமிந்த எரங்க ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றைய நாள் ஆட்டநேர முடிபின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறுகிறது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 14 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன 12 ஓட்டங்களையும், திலான் சமரவீர 7 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 4 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக நேதன் லயன், பென் ஹில்பென்ஹோஸ், பீற்றர் சிடில், ஷேன் வோட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் 3-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.



# ஹோலி, தோனி அபாரம் இந்தியா கௌரவம்

இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3-வது நாள் ஆட்டம் நேற்றாகும்.


நேற்றைய நாள் முடிபில் இரு அணிகளும் போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளன.


4 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணி, ஆட்டநேர முடிபில் 8 விக்கெட்டுக்களை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

5-வது விக்கெட்டுக்காக மகேந்திரசிங் தோனி - விராட் ஹோலி இருவரும் 198 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் ஹோலி 103 ஓட்டங்களையும், மகேந்திரசிங் தோனி 99 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகேந்திரசிங் தோனி 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்திருந்தார். தவிர கௌதம் காம்பீர் 37 ஓட்டங்களையும், சொற்றேஸ்வர் புஜாரா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.





பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 4 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நாக்பூரில் இடம்பெற்று வரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 330 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி பெற்ற ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க இந்திய அணி 33 ஓட்டங்களால் பின்னிலையில் காணப்படுகின்றது.

போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

நெல்லியடி சனசமூக நிலையம் சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி சனசமூக நிலைய தலைவர் சு.கிருஸ்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணசிங்கம், சிறப்பு விருந்தினராக நெல்லியடி கிராம உத்தியோகத்தர் யோ.சசிகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-11)

## அரசிற்கு உறுத்த...

கருத்துக்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீதான நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறான நிலைமையே பிரதம நீதியரசர் விடயத்தில் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புக்கள் இவ்விடயத்தில் இறுக்கமான போக்கைக் காண்பிக்கலாம் என அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, ஷிராணி விவகாரம் தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக்கூடிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், பிரதம நீதியரசருக்கு ஆதரவாக அதிரடியாக மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

அதில் மிக முக்கியமாக புதிய பிரதம நீதியரசருக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என்பதாகும். இதற்கெதிராக அரச ஆதரவு சட்டத் தரணிகள் கொண்டு வந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-1)

## நீதிமன்ற அதிகாரத்தை...

அந்த மனுவில் கூறப்பட் டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரச சார்பில் கருத்துத் தெரிவித்த சட்டமா அதிபர் உச்ச நீதிமன்ற நீதியரசர்களை சாதாரண மக்களைப் போல் கருத முடியாது என்பதாலேயே பிரதம நீதியரசருக்க எதிரான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரித்ததாக கூறினார்.

இதன்போது கேள்வி எழுப்பிய நீதியரசர் காமினி அமரதுங்க, நாட்டின் பொதுச் சட்டமாக அங்கீகரிக்கப்படாத நாடாளுமன்றக் கட்டளைகளைப் பயன்படுத்தி நீதியரசர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வது சட்ட ரீதியானதா என்று வினவினார்.

அரசியல் யாப்பின்படி தமக்குள்ள அதிகார எல்லைக்குள் நின்றுகொண்டு மட்டுமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் செயற்பட முடியும் என்று சுட்டிக்காட்டிய நீதியரசர் காமினி அமரதுங்க, அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு மட்டுமே இருப்பதாகவும் கூறினார்.

நீண்ட வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் வழக்கு விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இறுதியாக இந்த வழக்கின் இரகசியத் தீர்ப்பு அடுத்த வரும் நாட்களில் நாட்டின் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்...

## சுயாதீன...

நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரிக்கப்பட வேண்டும் என்றார். (ந-11)

## இராணுவத்தில்...

பாதித்திருப்பதாகவும் உண்மையில் அப்படியான நிகழ்வுகள் எதுவும் தமக்கு ஏற்படவில்லை என்றும் அந்தப் பெண்கள் என்னிடம் கூறியுள்ளனர்.

மேலும், தான் தமிழ்த் தேசியத்தை ஆதரிப்பவன் என்ற வகையில் இராணுவம் இவ்வளவு அவசரமாக பெண்களை பணிக்கு சேர்த்ததில் தனக்கு உடன்பாடு இல்லை என்கின்ற போதிலும், ஒரு மருத்துவன் என்ற வகையில் இந்தப் பெண்கள் எந்த வகையில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படவில்லை என்பதை உலகுக்கு சொல்ல வேண்டிய கடமை தனக்கு உண்டு என்றும் டாக்டர்

## பீரிஸ்-பொப்...

பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. அதே வேளை, நாளை அவுஸ்திரேலிய அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்திக்க உள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை வந்த அமைச்சர் பொப் கார், வர்த்தக உடன்படிக்கை, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் சட்டவிரோத குடியேறிகள் கட்டுப்பாடு போன்றவை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்.

இலங்கைக் கடல் எல்லையிலிருந்து சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கானவர்கள் தமது நாட்டுக்கு உட்பிரவேசிக்கின்றமை தொடர்பில் இலங்கையில் இடம்பெறும் கலந்துரையாடல்களின் போது அவர் முக்கியமாக கவனம் செலுத்தவுள்ளார்.

இதன்பொருட்டு, ஒன்றிணைந்த செயற்பாட்டு குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கும் முதல் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையின் கல்வித் துறை அபிவிருத்திக்கு 34 மில்லியன் டொலர்களை உதவியளிக்க அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பிரபல தனியார் உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகர எல்லைக்குள் 2000- 6000 வரையிலான சதுர அடிக் கட்டடம் வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 0777444407

(சு-1794)


## சுயாதீன குழுவின்...

கூடிய உறுப்பினர்களைக் கொண்டுள்ளமையால் சட்டத்துறை தொடர்பாக மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மையான நியா யங்களை வெளிப்படுத்துவதற்கு அந்தக்குழு உதவியாக அமையும் என்றும் சர்வதேச ட்ரான்ஸ்பரன்சி அமைப்பின் இலங்கைக் கிளை தெரிவித்துள்ளது. (ந-11)


புதிய முகவரி

ஹரன் ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரிகள்

இல.217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6083, 0714182480

ஸ்ரீமுருகன் துணை

# பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!

# ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

## யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம் T.C.T வணிக வளாகம்,

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

7 தினங்கள் மட்டுமே!



தொ.பே:-0752145355

(1171)

**17.12.2012 முதல் 23.12.2012 வரை**

பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள், பழைய கிழிந்த கூறைப் புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடைவைகள் ரூபா 5000/- முதல் ரூபா 20000/- வரை வாங்கப்படும்

**பழைய காலத்து கல்வைத்த நகைகள், லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்**

குறிப்பு :- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

வேலை நேரம் காலை 9.30 மணிமுதல் இரவு 6.30 மணிவரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

## தேவை

ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் உடனடியாக நிரந்தர வேலை வாய்ப்புகள் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் ஜாம், கோடியல், பிஸ்கற், புத்தகம், கிளவுஸ் போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல் பொதியிடல் பிரிவுக்கு ஆண், பெண் 18-50 வயதினர் உடனடியாகத் தேவை. சம்பளம் 18,000/=, 32,000/= உணவு, தங்குமிடம் சகாய விலையில் (தம்பதியினர், குழு நண்பர்கள் ஒரே தொழிற்சாலையில்)

0776165099, 0778287666

(1166)

## தேவை

திறமையுள்ள தொழிலற்ற உங்களுக்கு கப்பலில் வேலை செய்ய அரிய சந்தர்ப்பம்.(தனியார்) நவீன கப்பல் புனர் நிர்மாண வேலைகளான பெயின்டர், தச்சு, வெல்டிங், சாதாரண ஊழியர்கள் ஆண், பெண் மற்றும் கட்டட நிர்மாண துறையில் மேசன், தச்சு , பெயின்டர், செடலின் பாய், கையுதவியாளர்கள் விரைவில் தேவை. வயது 18-50 சம்பளம் 18,000/=, 45,000/= கல்வியறிவுள்ள, அற்ற இரு பாலாரும் இச் சேவையைப் பெறலாம்.

தொடர்பு: 0775997579

(1165)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன.உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(1154)

61, Kachcheri - Nallur Road, Jaffna. Phone : 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

## சிகரம்

கல்வி - தொழில் வழிகாட்டி

## ஒரே கூரையின் கீழ் உள்நாட்டு-வெளிநாட்டு கல்வி - தொழில் வழிகாட்டி சேவை

'சிகரம் தொடு' கல்வி-தொழில் வழிகாட்டி சஞ்சிகை, கருத்தரங்குகள், ஊடக, விளம்பர, சந்தைப்படுத்தல் கற்கைநெறி, சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி விபரக்கொத்து வெளியீடு...




(சு-1789)



150க்கு மேற்பட்ட உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி, உயர்கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்களின் 500க்கும் மேற்பட்ட கற்கைநெறிகளுக்கான வழிகாட்டி ஆலோசனை சேவை...

University of Wollongong - **Australia**, Toronto University - **Canada**, IOWA University - **America**, INTI International University, Sunway University, SEGi University, LIMKOKWING University - **Malaysia** உள்ளிட்ட பல பல்கலைக் கழகங்களின் கல்விக் கண்காட்சியும், மாணவர் அனுமதியும்





மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia திட்டத்தின் கீழ் மாதம் 50,000/- வருமானம், University of East London சான்றிதழ், வேலைவாய்ப்புடன் கூடிய **HOTEL MANAGEMENT** கற்கைநெறி

2012 நொவெம்பரில் மட்டும் **25**க்கு மேற்பட்ட மாணவர்களை அனுப்பி வைத்து, மாணவர்களதும், பெற்றோரினதும் நம்பிக்கையை வென்ற

MEDIA & EDUCATION

சிகரம் SIKARAM

கல்வி - தொழில் வழிகாட்டி

221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram...

## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்

**பெற்றோர்கள் / மாணவ, மாணவிகளின் கவனத்திற்கு**

பட்டப்படிப்பிற்கு தகுதியில்லை எனக் கவலை வேண்டாம். DIPLOMA/ ADVANCED DIPLOMA தராதரத்தை 1 வருட காலத்திலும் பட்டப்படிப்பு B.Eng(Hons) 1 வருட காலத்திலும் பயின்று நீங்களும் ஒரு CHARTERED ENGINEER ஆகலாம்

(சு-1790)

City & Guilds JUNE 2013

- CIVIL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- QUANTITY SURVEYING
- TELECOMMUNICATION

DEC 18, 19 ம் திகதிகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அனுமதிகள் வழங்கப்படும். கல்விச்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

- Diploma / Ad. Diploma சித்தியெய்தியதும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்
- Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு Industrial Training கொடுக்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: Prof.K. சந்திரபோஸ் 077 3867695

அன்னவாசா, 242, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். தொ: 021 2241731

www.apsseducation.com

HOTLINE: 077 2306642 | 072 2306642 | 077 3867695


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.